# உறவைத் தேடி



மண்டூர் அசோகா

156

# உறவைத் தேடி

மண்டூர் அசோகா

TRO-SCSL PROJEC
NOT FOR SALE

மீரா பதிப்பகம்
கொழும்பு - 05
வெளியீடு-33

நூற்பெயர் - உறவைத் தேடி
வகை - சிறுகதைத் தொகுப்பு
ஆசிரியர் - மண்டூர் அசோகா
உரிமை - ஆசிரியருக்கே
முதலாம் பதிப்பு - 24.11.2002
வெளியீடு - மீரா பதிப்பகம்
C 1/6, அன்டர்சன் தொடர்மாடி,
பார்க் றோட், நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.
தொலைபேசி - 584317, 508250

விலை - ரூபா 165/-

Title - Uravai Theedee
Subject - A Collection of Short Stories
Author - Mandur Asoka
First Edition - 24.11.2002
Published by - Meera Pathippakam
C 1/6, Anderson Flats,
Park Road, Colombo 05.
T.Phone - 584317, 508250

**Price - Rs. 165/-**

# உறவைத் தேடு முன்......

**கா**லத்தின் தேவை கருதி எழுதுகின்ற எழுத்தாளன் அவ்வக் காலப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைச் சுமைகளைத் தன் உணர்வுகளால் உள்வாங்கி, அவற்றைத் தானும் அனுபவித்து எழுதும் போதுதான் இலக்கியங்கள் யதார்த்தத் தன்மையைப் பெறுகின்றன.

கோபுரங்களில் இருந்துகொண்டு மண் குடிசையைப் பார்ப்பவனுக்கு அந்தக் குடிசைக்குள் இருந்து குமைகின்ற இதயங்களின் மன அழுத்தங்கள், அவலங்கள் தெரியப்போவதில்லை.

யுத்த நெருக்குதல்களுக்கும் இன்னல்களுக்கும் முகம் கொடுத்து அணு அணுவாக உயிர்ப்பிழந்து கொண்டிருந்த சமுதாயத்தின் ஓர் அங்கமாய் வாழ்ந்த என்னுடைய அவதானிப்புக்கள், அனுபவங்கள் என் உணர்வுகளைக் கீறிக் கிழித்ததன் விளைவாய்ச் சில சிறுகதைகள் உருவெடுத்தன. இத்தொகுதியில் இடம் பெறும் இரண்டொரு கதைகளைத் தவிர ஏனையவை அனைத்துமே அவ்வகையுள் அடங்குவனதாம்.

இவை, காலத்தால் நிலைத்து நிற்கும் அற்புத இலக்கியங்கள் இல்லாவிட்டாலும் யுத்த அனர்த்தங்கள், அழிவுகளுட் சிக்கித் தவித்த ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அவலங்களிற் சிலவற்றை எடுத்துக் கூற முயலும் தன்மையைக் கொண்டிருக்கின்றன என்பதைத் திடமாகக் கூற முடியும். எனது இந்தச் சிறுகதைகளும் நாளைய எமது சந்ததிக்கு எமது துயரங்களைக் கூறும் ஓர் ஆவணமாகலாம். அவ்வாறான பணிக்கு உதவுபவையாக இருந்தால் எனது சிறுகதைகள் தாம் படைக்கப்பட்டதன் நோக்கத்தை எய்தி நிற்கும். அப்போது தான் அவற்றைப் படித்த நானும் மனத்திருப்தி அடைய முடியும்.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக எனது எழுத்துக்களை வாசிக்கும் நல்லதோர் வாசகனாகவும் எனது எழுத்துக்களின் குறைநிறைகளைக் கூறும் தரமான விமர்சகனாகவும் இருந்து என்னை ஊக்குவித்துக் கொண்டிருப்பவர் அன்புச் சோதரன் புலோலியூர் இரத்தினவேலோன். அவருடைய பெரும் முயற்சியால் இன்று எனது சிறுகதைகள் உங்களை வந்தடைந்திருக்கின்றன.

அத்தோடு, நான் எழுத ஆரம்பித்த நாளிலிருந்து எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்கி பத்திரிகைத்துறையோடு தான் கொண்டிருந்த தொடர்பினால் பல இலக்கியகர்த்தாக்களையும் அறிமுகப்படுத்தி என் வளர்ச்சிக்கு உரமிட்ட எனது சகோதரர் திரு.இ.பாக்கியராஜன் அவர்கட்கும் எப்போதும் என் எழுத்துக்கு உறுதுணையாய் நின்று கைகொடுக்கும் எனது துணைவர் திரு.க.யோகராஜா, எனது எழுத்துக்களை படித்து விமர்சனம் சொல்லும் முதல் வாசகர்களாகிய எனது அன்புச் செல்வங்கள் சரண்யா, லாவண்யா ஆகியோருக்கும் என்னைப் பாராட்டி ஊக்கமளிக்கும் இலக்கிய அன்பர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு தமது 33ஆவது பிரசுரமாக வெளியிடும் கொழும்பு மீரா பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள்.

இச்சிறுகதைகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கும்......

**- மண்டூர் அசோகா**

**8/22, பிள்ளையார் கோயில் வீதி,**
**1ஆம் குறுக்குத் தெரு,**
**கல்லடி,**
**மட்டக்களப்பு.**

**24.11.2002**

# வழி தவறிப் போகின்ற வழிகாட்டிகள்

காற்றிலே படபடத்து அணையத் துடிக்கும் விளக்கை ஒரு கையால் மறைத்துப்பிடித்து அதன் வெளிச்சத்திலே ஏதோ படித்துக் கொண்டிருந்த சந்திரன் பக்கத்தில் அரவம் கேட்டுத் திரும்பினான். பக்கத்திலே தாய் நின்று கொண்டிருந்தாள். "சந்திரா, சாப்பாடு போட்டு வைச்சிருக்கன், தம்பியவனுகளும் சாப்பிடுறானுகள். வா, வந்து சாப்பிட்டுப் போட்டுப் படி. பிறகு அந்த மனுசன் வந்து கூடிச்செண்டாச் சாப்பிட மாட்டயள்..... நாலு மணியில வெளிக்கிட்டுப் போனவர் இப்ப எந்த தவறணையிலயோ தெரியாது."

ஆதரவான வார்த்தைகளைக் கொட்டும் தன் தாயின் மன ஏக்கங்களைச் சந்திரனாற் புரிந்து கொள்ள முடிந்தது. அவன் வேதனை மேலிடத் தாயை நிமிர்ந்து பார்த்தான். முப்பத்தெட்டு வயதிலேயே நாற்பத்தைந்து வயதின் முதுமைக் கோடுகள். நன்றாகப் பேணப்பட்டால் ஒரு மலர்ந்த தாமரையின் மதர்ப்போடு இருக்க வேண்டிய உடலில் ஏக்கமும் ஏழ்மையும் தந்து விட்ட வடுக்களாய் எலும்பு போர்த்த தோலும் குழி விழுந்த கண்களும், 'இளமையில் அம்மா எத்தனை அழகாக இருந்திருப்பா' என்று அவன் அடிக்கடி நினைப்பதை இப்பொழுதும் நினைத்துப் பார்த்தான். "இந்த அழகெல்லாம் சிதைஞ்சது ஆரால?."

"எழும்பு தம்பி, அவர் வாறதுக்கு முந்தி நீங்க சாப்பிட்டிட்டயள் எண்டாத் தான் எனக்கும் நிம்மதி. நான்தான் பாவம் செய்தவள், கிடந்து அனுபவிக்கிறன் நீங்களும் என்னோட கிடந்து துன்பப்பட வேணுமெண்டு என்ன தலைவிதியோ?" அவள் அவன் தலையை ஆதரவாகக் கோதி விட்டாள். "அம்மா இந்தப் பாட்டு முழுவதும் பாடமாக்கிற்றுப் போகாட்டி ரீச்சர் அடிப்பா. அப்பா வந்து சத்தம் போடத்

தொடங்கினால் என்னால பாடமாக்க ஏலாது. வீட்டு வேலையொண்டும் செய்து கொண்டு போறல்லையெண்டு நான் ஒவ்வொரு நாளும் அடிவாங்க வேண்டியிருக்கு. கொஞ்ச நேரம் பாடமாக்கிப் போட்டு வாறனம்மா" அவன் தாயிடம் கெஞ்சிய போது நெஞ்சுக்குள் பொங்கிவந்த துயரத்தை அடக்கமாட்டாமல் அவள் விழிகளில் கண்ணீர் திரண்டது. "உங்களையெல்லாம் சந்தோசமா வாழவைக்க முடியாட்டியும் வயிறு காயாமச் சாப்பாடு போடவேணும், நல்லாப் படிப்பிக்க வேணும் எண்டுதான் நான் துடிக்கிறன். இத்தினை கொடுமையளையும் சகிச்சு வாழுறன்....... சரி, நீ கொஞ்ச நேரம் படிச்சிற்று வந்து சாப்பிடு" அவள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அப்பாற் போனாள்.

சற்று நேரம் தாயையே பார்த்துக் கொண்டிருந்தவன் மறுபடியும் பாடப் புத்தகத்தில் தன் கவனத்தைத் தொடர்ந்தான். என்னதான் முயன்றும் அவனால் படிக்க முடியாமலிருந்தது. விரித்த புத்தகத்தின் மத்தியில் அம்மாவின் வாடிப் போன, சதா ஏதோ ஒரு தாக்குதலை எதிர்பார்த்து நடுங்குகின்ற அந்த முகமும் நிறைவெறியில் வந்து வாய்க்கு வந்தவாறெல்லாம் அவனுக்கே புரியாத வார்த்தைகளால் கால் மைலுக்குக் கேட்கிற அளவில் அம்மாவைத் திட்டித் தீர்க்கிற அப்பாவின் அந்தக் கோபமுகமும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன.

பொழுது பட்டால் ஒரு யுத்த களத்தைக் காணப் போகிற ஏக்கத்தோடு கூடிய எதிர்பார்ப்பில் அவனும் மூன்று தம்பிமாரும் தங்கையும் அம்மாவைச் சுற்றிக் கோழிக் குஞ்சுகள் போல நடுங்கிக் கொண்டிருப்பதும், யார் வீட்டுத்தவறணையிலோ இருந்து பலத்த ஆர்ப்பாட்டத்தோடு தந்தை வந்து வீட்டையே கலக்கி அம்மாவைத் திட்டுவதும் அடிப்பதும் அவர்கள் ஆதரவு தேடிக் கூக்குரலிடுவதும்...... எத்தனை வருடங்களாய்த்தான் நடந்து கொண்டிருக்கின்றன. அவனுக்குப் புத்தி தெரிந்த நாளிலிருந்து இதே கதைதானே?

விடிந்தெழுந்தால் அவனுக்குப் பாடசாலைக்குப் போகவே வெட்கமாக இருக்கும். நண்பர்கள் எல்லாம் "என்னடா சந்திரா, இரவு உங்கட வீட்டில பெரிய கூக்குரல்

கேட்டுது. எப்ப பார்த்தாலும் இப்பிடித்தானே?" என்றும் "எங்கட அப்பா ஒரு நாளும் குடிக்க மாட்டார். அம்மாவையோ எங்களையோ ஒரு நாளும் பேசமாட்டார். உங்கட அப்பாவுக்கு உங்களோட இரக்கமில்லையாடா?" என்றும் "சீ, எங்களுக்கே வீட்டில படிக்க ஏலாமக்கிடக்குது. என்ன அசிங்கக் கதையெல்லாம் கதைக்கிறார். நீ எப்பிடித்தான் வீட்டில படிக்கிறயோ?" என்றும் எத்தனையோ கேள்விக் கணைகளும் கேலிப் பேச்சுகளும் அவனை நோக்கி விடுப்பதுண்டு. அவன் கூனிக் குறுகிப் போவான். அப்படிக் கேட்கப்படுகிற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பான். பாடசாலைக்குப் போகவும் படிக்கவும் வெறுப்பாயிருக்கும். இப்படித் தந்தை வந்து அட்டகாசம் பண்ணுகிற மறு நாட்களில் அவன் அனேகமாகப் பாடசாலைக்கே போவதில்லை. படிக்க வேண்டும். முன்னேற வேண்டும் என்று தன் மனதில் வளர்த்து வைத்திருந்த கோட்டைகள் எல்லாம் சரிந்து போகக் காரணமாயிருந்தவர் தந்தைதான் என்பதால் அவன் அவரை முற்றாகவே வெறுத்தான்.

"அம்மா இவர் இப்பிடி இரவிரவாய்க் கத்தி என்ர படிப்பையும் குழுப்புறதால எனக்கு எவ்வளவு அவமானம் தெரியுமா? முந்தியெல்லாம் முதலாம் பிள்ளையாய் வந்த நான் இப்ப கடைசிக்குக் கிட்டப் போயிற்றன்......." என்று தாயிடம் சொல்லித் தன் மனக்குமுறலைத் தீர்ப்பான். 'தந்தை மகற்காற்றும் நன்றி' என்ன என்று அவன் பாடசாலையிற் படித்திருக்கிறான். 'அவையில் முந்தியிருக்கச் செய்யும்' அந்தச் செயலை அவர் செய்யத் தவறுவது ஏன் என்று அவனுக்குப் புரிவதேயில்லை.

தம்பிமாரின் கலகலப்பால் சந்திரன் தன் சிந்தனைகளிலிருந்து விடுபட்டான். புத்தகத்தை மூடிவைத்துவிட்டு எழுந்து குசினிக்குள் சென்றான். தன் முன்னால் குந்தியிருந்து சாப்பாடு போடும் தாயைப் பார்க்க அவன் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. "நீங்க சாப்பிடல்லையாம்மா?" என்று கேட்டான். "எனக்குப் பசிக்கல்ல சந்திரா. நீ சாப்பிடு. நான் அவர் வந்த பிறகு அவருக்குக்

குடுத்துப் போட்டுச் சாப்பிடுறன்." என்று சொன்னாள்.

கையில் எடுத்து விழுங்கிய சோறு தொண்டைக்குள் பொறுத்துக் கொண்டது. 'அவர் வந்த பிறகு சாப்பிடுறது எண்டது எப்பவாவது நடந்திருக்குதா அம்மா?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. அவர் வந்தால் சாப்பிட அம்மாவுக்கு எங்கே நேரம் இருக்கப் போகிறது? அவர் பேசுகிற பேச்சையும் சொல்கிற வசவுகளையும் கேட்டு அழவே நேரம் போதாமலிருக்கும். அதற்குப் பிறகு எங்கே பசி இருக்கப் போகிறது?

அவன் மேலும் சாப்பிடப் பிடிக்காமல் பக்கத்தில் சுருண்டு படுத்துக் கிடந்த பூனைக்கு மிகுதிச் சோற்றை வைத்துவிட்டுக் கை கழுவுகையில் தகரக் கேற் திறந்து சாத்தப்படும் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. அவனுடைய இதயம் பட்டெென அடித்துக் கொண்டது.

"எங்கடி, வாசல்ல வெளிச்சத்தைக் காணல்ல. பிடிச்சிருக்கிற மூதேவி காணாதெண்டு வெளிச்சம் வைக்காமப் பாழ்போடுறயாடீ? நான் எங்கையும் துலைஞ்சி போனனெண்டு நினைச்சிற்றயோ? அப்பிடித்துலைய வேணுமெண்டுதானே மனதுக்க நினைப்பு? " அவனுடைய தந்தை காலொரு பக்கம் உடலொரு பக்கமாக வந்து கொண்டிருந்தார். அவள் மண்டபத்தினுள்ளிருந்த விளக்கை எடுத்து வந்து திண்ணையில் வைத்தாள். "என்னடீ இப்பதான் விளக்கு வைக்கோணுமெண்ட நினைப்பு வந்ததா? இவ்வளவு நேரமும் ஆரோட கதைச்சிற்று இருந்தனீ?" என்று கேட்டுக் கொண்டே வந்து விறாந்தையில் விழுந்தார் அவர். "நான் கேக்கிறன், பதிலக் காணல்ல. என்னடீ காதடைச்சுப் போயிற்றோ இல்ல திமிரோ?"

"உள்ளுக்குப் பிள்ளையள் படுக்குதுகள். அதுகளுக்கு வெளிச்சம் வேணுமெண்டுதான் வைச்சனான். வெளியில வைக்கிற விளக்கைக் உடைச்சத மறந்து போயிற்றயளா?" என்று கேட்டாள் அவள். "ஆருடீ புள்ளையள்? எனக்கேது புள்ளையள் அங்க படுக்கிறதுக்கு? ஏய் எல்லாரையும் இழுத்தெறி வெளியில........." இந்த வார்த்தைகளைக் கேட்டுச்

சந்திரனின் ரத்தம் கொதித்தது. 'இதையெல்லாம் அம்மா எப்பிடிச் சகிச்சுக் கொள்ளுறா? எனக்கேது பிள்ளையள்எண்டு கேட்கிறாரே, அப்பிடியெண்டால் நாங்களெல்லாம் இவரின் பிள்ளைகளே இல்லையெண்டு சொல்லுறாரா? அம்மாவை வதைக்கிறது போதாதெண்டு அவவின் ஒழுக்கத்தையும் கேவலப் படுத்துறாரா?"

அவர் முன்னால் போய் நின்று 'நாங்களெல்லாம் உங்கட பிள்ளையளில்லையெண்டால் இன்னுமேன் அம்மாவோட வாழுறயள்? அவவை ஏன் கொடுமைப் படுத்திறயள்?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. அம்மாவைத் திரும்பிப் பார்த்தான். குந்தியிருந்து முழங்கால்களிடையே முகம் புதைத்திருக்கும் அவள் தோற்றம் அவன் நெஞ்சைப் பிசைந்தது. தான் அழுவதைப் பிள்ளைகள் காணக்கூடாதென்று தானே இப்படியொரு போர்வை? இலேசாக அவள் முதுகு குலுங்குவது அவனுக்குத் தெரிந்தது. அவளருகிற்போய் ஆதரவாக "அம்மா!" என்று அழைத்து அவள் முதுகைத் தடவினான்.

அவள் அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு "நீ ஏதோ பாடமாக்க வேணுமெண்டு சொல்லிக் கொண்டிருந்தயே, போய்ப்படி" என்று சொல்லிக் கொண்டே குசினிக்குள் சென்று ஒரு தட்டில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு தண்ணீர்ச் செம்புடன் கணவரருகே சென்றாள். "சாப்பாடிருக்குது. எழும்பிச் சாப்பிடுங்க", என்று சொன்னாள். "இப்பதான் புருசனுக்குச் சாப்பாடு குடுக்கோணுமெண்ட எண்ணம் வந்துதாக்கும் ராசாத்திக்கு? என்ன கறியோடடீ சாப்பிடுற?" என்று தள்ளாடியவாறு எழுந்தார் அவர். "வெண்டிக்காய் கறியும் கிழங்குச் சொதியுமிருக்கு" என்று அவளிடமிருந்து பதில் வந்ததும் அவள் கையிலிருந்து சாப்பாட்டுத் தட்டைப் பறித்து வெளியே வீசினார். "ஆருக்குடீ வேணும் உன்ர வெண்டிக்காய்க் கறி? இதோடையும் மனுசன் சாப்பிடுவானாடீ? எப்ப நீ எனக்கு வாய்க்கு ருசியாச் சமைச்சுத் தந்திருக்கிறாய்? ஒரு பொரியல், ஒரு குழம்பு... தூ..... சனியனே... நீயும் ஒரு பொம்பிளை எண்டு இருக்கயே" அவர் எட்டு வீடுகளுக்குக் கேட்கும்படியாக இரைந்தார்.

"தாராளமாய் உழைச்சு வந்து போட்டால் பொரியலும் குழம்பும் குறையாம இருக்கும்" என்று அமைதியாகச் சொல்லிவிட்டு வீசிய தட்டை எடுக்கக் குனிந்தவள் மீது பாய்ந்து, "என்னடி நான் உழைக்காதவன் எண்டா நினைச்சிற்றாய்? உனக்கும் உன்ர புள்ளையளுக்கும் இவ்வளவு நாளும் சோறு போட்டவன் எவண்டீ?" என்று கேட்டுத் தன்னுடைய வெறி தீருமட்டும் அவளுடைய தலைமயிரைப் பற்றிப் பிடித்து அடித்து ஓய்ந்தார்.

தாய்க்குத் தன் கண்ணெதிரில் நடக்கிற கொடுமைகளைப் பார்த்ததும் சந்திரனின் நெஞ்சம் கொதித்தது. தந்தை என்றும் பார்க்காமல் அவரை அடித்து நொருக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அவன் ஆத்திரப்படுகிற வேளைகளில் எல்லாம் 'அடிச்சாலும் உதைச்சாலும் அவரை விட்டால் நமக்கு வேற கதி ஏதுடா?' என்று கேட்கிற அம்மா அந்தச் செயலை விரும்பமாட்டாள் என்று மனம் ஓய்ந்தான். அந்தக் கொடுமைகளைப் பார்த்துக் கூக்குரலிடுகிற சகோதரங்களுடன் சேர்ந்து சத்தம் போடவும் அந்தப் பதினான்கு வயதுச் சிறுவனால் முடியவில்லை.

பிரளயம் எல்லாம் ஓய்ந்து விட்டது. அவனுடைய தந்தை கால்களை அகலப் போட்டுக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். தாய் வாசலிலேயே திண்ணை ஓரமாய்ச் சுருண்டு கிடப்பது மங்கிய நிலவொளியில் தெரிந்தது. இன்னும் அழுகிறாள் என்பதற்கு அடையாளமாய் மூக்குச் சிந்துகிற ஓசை இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. சந்திரன் தாயருகில் வந்து 'அம்மா!' என்று அவள் கைகளைப் பற்றினான். தன்பிள்ளையின் ஆதரவும் அன்பும் அவள் மனச்சுமையை அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும். அவள் தோள்கள் அழுகையாற் குலுங்கின. சந்திரனின் கண்ணீர் அவள் கைகளிற் சூடாக விழுந்தது. "எழும்புங்க அம்மா" என்று கெஞ்சினான். "நான் பிறகு வந்து படுக்கிறன் நீ போய்ப் படு" என்றாள் அவள்.

"நீங்க ஒண்டும் சாப்பிடல்லையே. வந்து சாப்பிட்டுப் போட்டெண்டாலும் படுங்கம்மா" என்று அழைத்தான். "எனக்குப் பசியில்லை சந்திரா, நீ போய்ப் படு" தாயின்

பிடிவாதக் குணம் அவனுக்குத் தெரிந்ததுதான். ஆயினும் அம்மாவை எப்படியும் சாப்பிட வைக்க வேண்டும் என்ற தவிப்பில் அவன் குசினிக்குள் போய் தட்டைக் கழுவிக் கொண்டு சோற்றுப் பானையைத் திறந்த போது நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

'அம்மா! இவ்வளவுதான் உன்ர வாழ்க்கையா? பசியில்லையெண்டு சொல்லிச் சொல்லி நீ பட்டினி கிடக்கிறதுக்குக் காரணம் இப்பதானே எனக்குப் புரியுது. உன்ர பட்டினிக்கு அப்பாட கொடுமை மட்டும்தான் காரணம் எண்டு நினைச்சிருந்தனே. இப்பதான் அதுமட்டும் காரணமில்லையெண்டு தெரியுது......'

வெறுமையாய்க் கிடந்த அந்தப் பாத்திரம் அம்மாவின் பசித்த வயிற்றையே நினைவூட்டியது. 'தன்னைப் பட்டினி போட்டு அம்மா எங்கட பசி தீர்க்கிறாவா? இப்படிப்பட்ட தெய்வத்தையா அப்பா கொடுமைப்படுத்துறார்? அம்மாவை இந்தக் கொடுமையில இருந்து மீட்க முடியாட்டியும் வறுமையில் இருந்து மீட்கிறது எப்பிடி?'

தாய் பட்டினி கிடக்க, அந்தப் பசியை உணரத் தெரியாத தந்தை குடித்துக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அவள் கொடுத்த சோற்றையே வீசிய அரக்கத் தனம் அவனை எரித்தது. குடிக்கிற காசு போதுமே எங்கட குடும்பத்துக்குச் சோறு போட. குடிதான் பெரிசெண்டு நினைச்சுக் குடும்பத்தை அலையவிடுற இவங்களுக்கெல்லாம் என்னத்துக்கு மனைவியும் பிள்ளையளும்?'

சந்திரன் வெறும் தட்டைத் தூக்கி வீசிவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டான். உலகத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தெரியாத அந்தப் பிஞ்சு மனதில் உருவான குழப்பம் தீர்வதாக இல்லை. தூக்கம் வராமல் நீண்டநேரம் சிந்தித்துச் சிந்தித்து ஒரு முடிவு கண்ட பின்பே தூங்கினான் அவன்.

காலையில் எழுந்து முகம் கழுவிவிட்டுத் தன்னுடைய காற்சட்டையையும் சேட்டையும் எடுத்துப் போட்டுக் கொண்டான். பாடப்புத்தகங்களைத் தேடி எடுத்தவன் தாயிடம்

வந்தான். எதுவுமே நடக்காதது போல அடுப்படியில் ஏதோ வேலையாய் இருந்தவளிடம் "அம்மா! நான் பள்ளிக்குப் போயிற்று வாறன்" என்று சொன்னான்.

"ஒண்டும் சாப்பிடாமப் போறயா? கொஞ்சம் பொறு, என்னவும் செய்து தாறன்" என்றாள் தாய். "இல்லம்மா நான் போய் அதிபரிட்ட இந்தப் புத்தகங்களைக் குடுத்திற்று வாறன். இது அவங்க தந்த புத்தகம் தானே. குடுத்திற்று வந்து சாப்பிடுறன்." தாய் திகைத்தாள். "என்னடா சொல்லுறாய் நீ?" "ஓமம்மா. நான் இனிப் பள்ளிக்குப் போறல்லையெண்டு தீர்மானிச்சிற்றன். இஞ்ச நடக்கிற பிரளயங்களால என்னால ஒழுங்காய்ப் படிக்க முடியல்ல. அப்பாவுக்குக் குடிதான் எல்லாமாப் போயிற்றுது. அந்தக் குடியால உங்களக் கொடுமைப் படுத்திறது மட்டுமில்லாமல் பட்டினியும் போடுறார். இனி நான் படிக்கப் போகல்ல. எப்பிடியெண்டாலும் உழைச்சு உங்களப் பட்டினியில இருந்தெண்டாலும் காப்பாற்றப் போறன்." அவன் சொல்லி முடிக்குமுன் அவனுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் அவள்.

"அவர் படுத்திற பாடுகளையும் கொடுமையளையும் பொறுத்து பட்டினி கிடந்தாலும் என்ர உயிரப் போக்காம நான் வாழுறது என்ர வயித்தில பிறந்த உங்களுக்காகத்தாண்டா. என்ர புள்ளையளெண்டாலும் படிச்சு நல்லா வரட்டும். நான்படுற பாடு அதுகளும் படக்கூடாதெண்டு நினைச்சிருந்தன். நீயும் என்னை ஏமாத்தப் போறயாடா?" என்று கேட்டு 'ஓ'வென்று அழத் தொடங்கினாள் அவள். விக்கித்துப் போன சந்திரன் ஏதோ ஞானம் பிறந்தவனாகப் புத்தகங்களைக் கீழே போட்டு விட்டு அவளை இறுகக் கட்டிக் கொண்டு "இல்லையம்மா. நீங்க அழவேணாம். நான் படிக்கிறன். உங்கட விருப்பப்படி படிச்சு முன்னேறுவன். உங்கள வாழ வைப்பன்..... " என்று கதறினான்.

அந்தக் கதறலிலும் வெளிப்பட்ட மன உறுதி அந்தத் தாயுள்ளத்தை அமைதி அடைய வைத்தது.

**களம்**

**- 1985 -**

# மண் கோட்டைகள்

நீளவாட்டுக்குக் கட்டப்பட்டிருந்த அந்த ஓலைக் கொட்டிலின் ஒரு அந்தத்தில் கிழக்குப் பக்கமூலையுள் அவள் கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள். அவளைச் சுற்றி, திறந்து கிடந்த இரண்டு பக்கங்களுக்கும் இரண்டு பழைய சாறிகளை இழுத்துக் கட்டி மறைப்பை உருவாக்கியிருந்தார்கள். உள்ளேயிருந்து வெளியே செல்லவும் வெளியேயிருந்து உள்ளே வரவும் ஒரு சின்ன இடைவெளி. மொத்தத்தில் இரண்டு பக்கம் கிடுகுகளாலும் இரண்டு பக்கம் சீலையாலும் ஆக்கப்பட்ட ஒரு குட்டி அறைபோலக் காட்சியளித்தது அவள் இருப்பிடம்.

கிழக்குப்பக்க ஓலைச் சுவருகே தென்னம்பாளை சிலிர்த்து நிற்கும் ஒரு நிறைகுடம். அதன் பக்கத்தில் ஒரு சின்னக் குத்துவிளக்கு. ஒரு பக்கத்தில் கயிற்றுக்கொடியில் தொங்கும் அவளுடைய இரண்டொரு சட்டைகள். ஒரு போத்தலில் கால்வாசியளவுக்கு நல்லெண்ணெய். ஒரு மண் சட்டியுள் சில முட்டைகள்.

அவளுக்கு அந்தக்குட்டி அறை ஒரு சிறைக்கூடம் போலவும் சில வேளைகளிற் தோன்றும். அந்த ஓலைக்கொட்டிலில் வாழும் ஏனைய சிறுவர்களுடன் ஓடியாடி விளையாடித் திரிந்தவளை பிடித்துவந்து நீராட்டி, அரைத்த மஞ்சளை உடம்பெங்கும் பூசி இப்படி இருக்க வைத்து இன்றோடு நான்கு நாள்களாகின்றன.

அந்த நாளை நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது. அந்த அகதி முகாமின் பின்பக்கமாக வேப்ப மரத்தடியில் ஏனைய சிறுவர்களோடு விளையாடித் திரிந்தவளைக் கமலம் மாமி பிடித்து இழுத்து வந்து அம்மாவிடம் காட்டி ஏதோ அவளின் காதுக்குள் குசுகுசுத்ததும், அம்மா தலையிற் கையை வைத்துக் குந்தியிருந்து ஒப்பாரி வைத்ததும், பின், அந்த அகதி முகாமில் தங்கியிருக்கும் ஏழெட்டுப் பெண்கள் சேர்ந்து

ஏதேதோ காரியங்கள் பார்த்ததும், மஞ்சள் அரைத்ததும், பக்கத்து வீடொன்றில் இருந்து அப்பா தூக்கி வந்து கொடுத்த உரலில் மாவிடித்ததும், அவளைப் பிடித்து வைத்து குடம் குடமாய் நீராட்டியதும் எல்லாம் அவளுக்குப் பயத்தோடு கூடிய ஒரு விதமான மகிழ்ச்சியைக் கொடுத்தன. ஆனால் அம்மாவின் முகத்தில் தான் மகிழ்ச்சியைக் காணவில்லை.

கமலம் மாமி அவளைப் பிடித்து வந்து அம்மாவிடம் ஏதோ சொன்னதும் அம்மா அழுத அழுகைக்கு அர்த்தம் தான் அவளுக்குப் புரியவில்லை. 'ஏன் இதுக்குப் போய் அம்மா அழுறா?' மூளையைக் கசக்கிக் கொண்டாள். எல்லா அம்மாக்களும் 'இது' நடந்தால் இப்படித்தான் அழுவார்களோ என்று நினைத்தாள். அந்த நினைப்பு வந்ததும் அவளுக்குப் பயமாகவும் இருந்தது. 'இதால எனக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ, அது தான் அம்மா அழுறாவோ?' அவள் பிஞ்சு மனம் துணுக்குற்றது.

ஆனால், அவளோடு முன்பு பாடசாலையிற் படித்த பிள்ளைகளிற் சிலர், கண்மணி, ஞானம்மா, விஜி எல்லோரும் 'இது' நடந்து சந்தோஷமாகத்தானே பாடசாலைக்கு வந்தார்கள். 'பின் ஏன் அம்மா அழுதவ?'

அவளுக்குத் தண்ணீர் வார்த்து கமலம் மாமியும் ராணி மச்சாளும் முகத்தை வெள்ளைத் துணியால் மூடி இந்தத் திடீர் மறைப்புக்குள் அழைத்து வந்து கண்ணாடியிலும் நிறைகுடத்திலும் விழிக்கச் சொல்லி சொட்டு வேப்பெண்ணையும் பச்சை முட்டையும் குடிக்கக் கொடுத்து, நல்லெண்ணெய் தோய்த்த புட்டு முடிச்சால் உடம்பெங்கும் ஒத்தடம் கொடுத்து இருத்திவிட்ட பின்தான் அம்மாவின் அந்த அழுகைக்கான காரணம் அவளுக்குப் புரிந்தது.

'வீட்டுக்கு மூத்த புள்ள. எவ்வளவு சிறப்பாகச் செய்யோணுமெண்டு எண்ணியிருந்தன். இப்பிடி, நடுத்தெருவுல நிக்கிற மாதிரி அகதி முகாமுக்குள்ள என்ர புள்ளைக்கு இப்பிடி ஆகிப் போச்சே.....' என்று கமலம் மாமியிடம் புலம்பும் போதுதான் அவளுக்கு அம்மாவின் கவலைக்கான காரணம் புரிந்தது.

"அம்மா சொல்றதும் சரிதான். எங்கட வீட்டையெண்டா எவ்வளவு சந்தோஷமா இருந்திருக்கும். கண்மணிக்கும் விஜிக்கும் செய்தது போல ருதுசாந்தி விழா எண்டு லவுட்ஸ்பீக்கர் பூட்டி, ஆக்களுக்கெல்லாம் சொல்லி சோடிச்சி மணவறையில் இருத்தி, போட்டோ எடுத்து சா, எவ்வளவு சந்தோசம்....."

அவளும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி எவ்வளவு கற்பனைகள் பண்ணியிருந்தாள். எல்லாமே பாழாய்ப் போயிற்று. "இப்ப வீடு வாசலெல்லாம் விட்டுப் போட்டு வந்து போடுறதுக்கும் நல்ல உடுப்பில்லாம இருக்கக்குள்ள கொண்டாட்டமெல்லாம் எப்பிடி வெய்க்கிறதாம்." இப்படி நினைத்ததும் அவளுக்குக் கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது. 'எங்கட வீடு, வயல், மாமரம் எல்லாம் எப்பிடிக் கிடக்கோ?'

அவளுக்கு அப்பொழுதே தங்கள் வீட்டைப் போய்ப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அவளுடைய வீட்டு வாசலில் நிற்கும் வெலாட் மாமரம் நிறையப் பிஞ்சும் காயுமாய் நின்றது. தாழ்வான மரக்கொப்புகளில் ஏறி நின்று புளிப்பேயில்லாத வெலாட் மாங்காய்களை அம்மாவுக்குத் தெரியாமல் பறித்துக் கடிப்பாள். அம்மா தற்செயலாய்க் கண்டுவிட்டால் 'ஏய், சனியனே, இறங்குடி கீழ, ஆம்புளப்புள்ளையள் மாதிரிப் பாரன் மரத்தில ஏறியிரிக்கிறத' என்று கீழே நின்று தடியெடுப்பாள்.

அம்மாவுக்கு மறுபுறமாய் மரத்திலிருந்து பாய்ந்து ஓடுவதில் தனியான இன்பம் அவளுக்கு. "இப்ப மாங்காயெல்லாம் பழுத்திரிக்கும், அணிலும் வெளவாலும் திண்டு முடிச்சிருக்கும்....."

அவளுக்கு, மாமரத்தைப் போலத்தான் அப்பாவின் வயல் மீதும் அதிகம் அக்கறை. அவர்கள் ஊரைவிட்டு ஓடிவரும் போது குடலைப் பருவம். அம்மாவின் கையில், கழுத்தில் கிடந்ததையெல்லாம் அடவு வைத்து தன்னுடைய இரண்டரை ஏக்கர் வயலில் விதைத்திருந்தார் அப்பா.

சில வேளைகளில் அவளும் அப்பாவோடு வயலுக்குச் செல்வதுண்டு. பெட்டி பெட்டியாய்ப் பிரித்து வரம்பு கட்டிய வயல் எங்கும் பச்சை போர்த்துக்கிடக்கும். ஆங்காங்கே வயல் வரம்புகளில் குடைவிரித்து நிற்கும் வேப்ப மரங்களின் மேல் காட்டுப் புறாக்களும் மைனாக்களும் இன்னும் பெயர் தெரியாத பறவைகளும் கலகலவென்று ஏதேதோ பேசிக் கொள்ளும்.

அப்பா தண்ணீர் பாய்ச்சும் போது அவள் மரங்களுக்குக் கீழே போய்நின்று அவற்றை ஆர்வமாய் பார்ப்பாள். அந்தப்பறவைகளும் அதிசயமாய் அவளைப் பார்ப்பது போலிருக்கும் "இதுகளோட கதைக்க ஏலுமெண்டா எவ்வளவு கதைக்கலாம்" என நினைப்பாள்.

ஒரு நாள் வயலுக்குப் போய் வந்த அப்பா "இந்த முறை விளைச்சல் நல்லாத்தான் வரப்போகுது. ஒரு மாதத்தில கதிராயிரும்....." என்று அம்மாவிடம் சொன்னார். "சூடு போட்டு வித்த புறகு புள்ளைக்கொரு மாலையும் ஒரு நல்ல சீலையும் வாங்கி வெய்க்கோணும். இண்டைக்கோ, நாளைக்கோ எண்டு திரியிறாள். பன்ரெண்டு வயதும் முடியப் போகுது" இப்படி அம்மா அப்பாவிடம் சொல்லும் போது அவளும் கேட்டு கொண்டுதான் இருந்தாள். அன்றைக்கே தன்னை மணவறையில் இருத்தி வைத்துக்கொண்டாட்டம் நடப்பதாகக் கற்பனைகள் செய்யத் தொடங்கிவிட்டாள்.

ஆனால், குடலை கதிராவதற்கிடையில் அவளுடைய கிராமத்தில் என்னவெல்லாம் நடந்து விட்டது. திடீரென ஒரு நாள் அவளுடைய கிராமத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் சீறிப்பாய்ந்தன. வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சப் போயிருந்த அப்பா அலறிப்புடைத்துக் கொண்டு ஓடி வந்தார். "கிண்ணையடிப்பக்கம் சரியான சண்டை நடக்குது. இன்னும் கொஞ்ச நேரத்தால ஷெல்லடிக்கப் போறானுகள். வாங்க விதானயார்ர வீட்ட போவம். ஏதும் எடுக்க கூடியத எடுத்திற்று ஓடி வாருங்க. எல்லாரும் அங்கதான் போறாங்க...."

அப்பாவின் பதற்றத்தையும் படபடப்பையும் கண்ட அவளும் அம்மாவும் தம்பிமார் இரண்டு பேரும் கைக்கு

அகப்பட்ட இரண்டொரு உடுப்புக்களைச் சுருட்டிக் கொண்டு தெருவுக்கு வந்த போது பீதியும் கலவரமுமாய் அந்தக் கிராமத்து மக்களெல்லோரும் விதானையார் வீட்டுப் பக்கம் ஓடுவதைக் காணமுடிந்தது.

அன்று அந்தச் சம்பவத்துக்குப்பின் நடந்தவை அனைத்தும் அவளைப் பொறுத்தவரையில் மறக்க முடியாத ஒரு பயங்கரக் கனவு போலிருந்தது.

தொடர்ந்து அரைமணி நேரத்துக்கும் மேலாய் கேட்ட துப்பாக்கி வேட்டுக்களின் பயங்கர ஓசையும் அதைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாய் நடந்த எறிகணை வீச்சுக்களும் அவளுடைய கிராமத்தையே கலக்கி விட்டிருந்தது. இத்தனையும் நடந்தபின் ஒரு மயானம் போலாகிவிட்ட அந்தக் கிராமத்தில் குடியிருப்பது பாதுகாப்பானதாக அவர்களுக்குத் தெரியவில்லை. சிதைந்த வீடுகளும் எரிந்த கூரைகளும் அவர்களைப் பயமுறுத்த எறிகணை வீச்சுக்களுக்கு இலக்காகிச் சிதைந்து போன உறவினர்களின் உடல்களைக் கூடப்புதைக்க அவகாசமின்றி ஊரைவிட்டே வெளியேறியவர்கள்தான்.

இங்கு வந்தவுடன் பாடசாலை ஒன்றில் தங்கியிருந்து பின் அகதிமுகாம் என்ற பெயரில் அமைக்கப்பட்ட அந்த ஓலைக்கொட்டிலில் ஆளுக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்டு குடித்தனம் நடத்த ஆரம்பித்து ஒரு மாதத்துக்கும் மேலாகியிருந்தது. சிறுவர்கள், பெரியவர்கள், வாலிபர்கள், இளம்பெண்கள் என்ற வேறுபாடுகளோ, அந்தரங்கங்களோ இல்லாது எல்லோரும் ஒரே குடும்பம் போல வாழ்வதென்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் விதி என்பது அவர்களை அப்படியொரு நிலைக்கு ஆக்கிவிட்டிருந்தது.

சீலைத் தடுப்புக்கும் மணற் தரைக்கும் இடையே ஒரு சோடிக்கால்கள் நடமாடுவது அவளுக்குத் தெரிந்தது. அந்தக் கால்க்ளுக்குரியவர் யாராயிருக்கும் என்று அறிய அவள் அந்த இடைவெளியால் குனிந்து பார்த்தாள். சீலைத்தடுப்புக்கு அப்பால் அவளுடன் சேர்ந்து விளையாடும் குருபரன் மடித்துக் கட்டிய சாரனோடு திருட்டுப்பார்வை

பார்த்தபடி நின்றிருந்தான். 'ஏய், குரு என்னடா செய்யிறாய்?' என்று கேட்டவள் சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள். "ஆம்பிளைப் புள்ளையளோடயெல்லாம் இனி நீ கதைக்கக் கூடாது, விளயாடக்கூடாது" என்று அம்மா சொன்னது அப்போதுதான் அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது.

அவளுடைய குரலைக் கேட்ட அவன் சட்டென்று குனிந்து "ஏன் இப்பிடி மஞ்சளெல்லாம் பூசி அறைக்குள்ள வெச்சிரிக்கிறாங்க, நீ எங்களோட விளையாட வரமாட்டாயா?" என்று கேட்டான். அந்த வேளையில் திடீரென்று அங்கே வந்த அவளுடைய தாய் "போடா, அவள் இனி உங்களோட விளையாட வரமாட்டாள் போ" என்று அவனைத் துரத்திவிட்டாள்.

"அம்மா, நான் எப்பம்மா வெளியில வாற, பொடியனுகள் எல்லாம் எட்டிப் எட்டிப்பார்க்கிறானுகள் எனக்கு வெக்கமாக்கிடக்குது....." என்று சிணுங்கினாள் அவள். அம்மாவின் கண்களில் திடீரெனச் சோகம் அப்பிக்கொண்டது. தன்னுடைய மகளைச் சந்தியில நிறுத்தி வைத்தாற் போன்ற ஓர் உணர்வு அவளை ஆக்கிரமித்துக் கொள்ள, எதுவும் பேசத் தோன்றாமல் அப்படியே சிலையாகிவிட்டாள் அவள்.

"என்னம்மா, நான் கேக்கிறன். நான் எப்ப வெளியில வரலாம்?" பொறுமையிழந்த அவள் தாயை நச்சரித்தாள். 'வெளியில வந்து இப்ப என்ன செய்யிறதுக்கு அவசரம், ஒரு கிழமைக்கெண்டாலும் வீட்டுக்குள்ள இரிக்கக் தானே வேணும்" என்ற தாயை அவள் கெஞ்சலாகப் பார்த்தாள்.

"அம்மா ஒண்டு கேப்பன். கோபிக்க மாட்டியாம்மா?"

"என்ன?"

"அம்மா, விஜிக்கும் கண்மணிக்கும் வெச்சது போல எனக்கும் கொண்டாட்டம் வெய்க்கக்குள்ள அந்தத் தங்கக் கரைபோட்ட சாறிவாங்கித்தரோணும் என்ன?"

அம்மா அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளும் சக்தி மட்டும் அவளுக்கு இருந்திருந்தால் எத்தனை செய்திகளை அதிற் படித்திருப்பாள்.

"என்னம்மா, வாங்கித்தரமாட்டியா?." அம்மாவுக்கு 'ஓ' வென்று அழவேண்டும் போலிருந்தது. அந்தப் பிஞ்சுமனதின் கனவுகளுக்குத் தூபமிட்டு வளர்த்ததில் ஒரு பங்கு தனக்கும் உரியதென்பதை உணர்ந்த அந்தத்தாய் மனது தனது கையாலாகாத்தனத்தை எண்ணித் தவித்தது. அந்தப் பிஞ்சு மனதை ஏமாற்ற விரும்பாத அவள் "வயல் விளைஞ்சிரிக்காண்டு பார்த்து வர அப்பா ஊருக்குப் பேயிரிக்கார்..... வயல் விளைஞ்சிருந்தா எல்லாம் செய்யலாம்" என்று மகளைச் சமாதானப்படுத்தினாள்.

அவளுக்கு அப்போதுதான் ஊருக்குப் போயிருந்த அப்பாவின் ஞாபகம் வந்தது. "ரெட்குறோஸ் ஆக்களோட நாங்க கொஞ்சப் பேர் ஊருக்குப் போய் வயல் எப்பிடிக் கிடக்கெண்டு பார்த்து வரப் போறம்" என்று சொல்லிக் காலையில் அவள் தந்தை புறப்பட்டுப் போயிருந்தார்.

"கடவுளே, அப்பா நல்ல செய்தி கொண்டு வரோணும். வயல் வெட்டினா எங்கட கஷ்டங்களும் தீர்ந்து போயிரும். கொண்டாட்டமும் வெய்க்கலாம்" அவள் தனக்குள்ளே குதூகலித்துக் கொண்டாள்.

ஆனால் அந்தக் குதூகலமும் கூட மாலை ஆறரை ஏழு மணிவரையில் தான் நீடித்தது. அந்த அகதி முகாமிலிருந்து காலையில் ஊருக்குப் புறப்பட்டுப் போன அவளுடைய கிராமத்தவர்களோடு சேர்ந்து போன அப்பா தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார். "என்ன, என்ன நடந்து போச்சு?" அம்மா பரபரத்தாள். அப்பாவால் பதில் சொல்ல முடியவில்லை. "வெள்ளாமையெல்லாம் எப்பிடிக் கிடக்கு, விளைஞ்சிற்றாண்டு சொல்லுங்கோவன்."

"வெள்ளாம இருந்தாத்தானே விளையிறத்துக்கு..... மாடும் ஆடும் திண்டு வயலெல்லாம் புரன்கிடக்குது....... வயலுக்குப்பக்கத்தில் மண்மூடையளும் சென்றியும்..... வேப்பமரம் தென்னைமரம் எல்லாம் தறிபட்டு ஊர் ஊராவா கிடக்குது."

மண்ணை நம்பி, அந்த மண்ணுக்கே தன் உடலுழைப்பையும் உடைமைகளையும் அர்ப்பணித்து விட்டு, அது பொன்னாய்த்தரும் என்று காத்திருந்த அந்த உழைப்பாளியின் உள்ளக்குமுறல் பெருமூச்சாய் வெளிப்பட்டது. அம்மா அப்படியே செயலற்றுப் போய்விட, அவள் தன்னுடைய கற்பனைக் கோட்டைகள் சரிந்து பொலபொலவெனச் சரிய ஊமை அழுகையாய் அழுதாள். அவளுடைய வயலும், வீடும், வெலாட் மாமரமும் சிவப்புச் சரிகைச் சீலையும், மணவறையும் அவள் கண்முன்னே தட்டாமாலை சுற்றின.

**வீரகேசரி வாரவெளியீடு**

**22.03.1998**

# தொடர் கதைகள்

"அம்மா அந்தக் குளத்துக்குள்ள பாருங்கம்மா, எவ்வளவு கொக்குகள். ஐயோ, அங்க பாருங்கக்கா, என்ன வடிவு....." ஓடிக் கொண்டிருக்கும் பஸ்சிலிருந்து சின்னமகள் குதிக்கிறாள். மூத்தமகள் ஒரு புன்சிரிப்போடு தன் பத்து வயதுத் தங்கையின் ஆர்வத்தையும் அந்தக் கொக்குகளின் அழகையும் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறாள்.

ஆடிக்காற்றுக்கு வற்றிய குளம்...... சிறு சிறு குட்டைகளாய் எஞ்சிக் கிடக்கும் நீருக்குள் தத்தளிக்கும் மீன்களைக் கொத்திக் கொண்டு போக வந்த கொக்குகள் கூட்டம் கூட்டமாய்த் தருணம் பார்த்துத் தவமிருக்கின்றன.

எண்பத்தொன்பதாம் ஆண்டு இரண்டு வயதுக் குழந்தையாக என் சொந்தக் கிராமத்தைவிட்டுத் தூக்கிவரப்பட்ட மகள். எட்டு வருட நகர வாழ்க்கையின் வெறுமை....... இப்படி அபூர்வமாய்க் கிராமத்துக்குப் போகக் கிடைக்கிற சந்தர்ப்பங்களில் மக்கள் இருவரும் இப்படிக் குதிப்பதும் குதூகலிப்பதும் எனக்குப் பழகிப் போன சமாச்சாரங்கள்.

ஓய்வு ஒழிச்சலில்லாமல் அலறிக் கொண்டு செல்லும் வாகனங்களின் இரைச்சல்கள், ஒன்று மாறி ஒன்றாய் வானொலிகளில் காலைச் செய்தி கேட்கவோ, விடிகாலையில் மெல்லியதாய், காதுக்கு இனிமையாய் சுகமாக ஒரு இசையை, அல்லது ஒரு பாடலைக் கேட்கவோ முடியாமல் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கும் ஒலிபெருக்கிகளின் அலறல்கள், பக்கத்து வீட்டோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பாத பட்டினத்து 'நாகரிகம்', நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கிற தனிமை, உண்மையான நேசத்தை வெளிக்காட்டுகின்ற முகமூடியற்ற முகங்க்ளைக் காண முடியாத வெறுமை..... என்னைப் போலவே என் குழந்தைகளையும் வாட்டுகின்ற சங்கதிகள்.

காலையில் எழுந்தால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் ஒருவரில் ஒருவர் முட்டி மோதிக்கொண்டு பறக்கிற அவசரம், சற்றுச் சோம்பலாயிருந்தாலும் அம்மாவின் அரவணைப்பில் ஐந்து நிமிடங்கள் படுத்துக் கிடந்து அந்தச் சோம்பலைப் போக்கிக் கொள்ள முடியாத இயந்திரத்தனம், காலையில் சமைத்து வைத்த உணவை இரண்டு மணிக்குப்பின் வந்து உள்ளே தள்ளிவிட்டு ஓடிப்போய் மாலை ஆறுமணி வரையும் ரியூட்டரிகளில் அடைபட்டுக் கிடக்கிற நிர்ப்பந்தம்....

இவற்றுக்கெல்லாம் பரிகாரமாய் ஒரு வருடத்தில் இரண்டொரு தடவைகள் கிராமத்தில் போய் இரண்டு நாட்கள் தங்கி விட்டு வருகிற சுகம் என் மக்களைப் பொறுத்தவரையில் கோடி சுகம்.

“ஐயோ, என்ன வடிவான வயலம்மா, எல்லாம் பச்சையாய்.......... கமெராவைக் கொண்டு வந்திருக்கலாம் என்னம்மா?” நான் என் கனவுகள் கலைய அவளைப் பார்க்கிறேன். அந்தச் சின்ன விழிகளில் எத்துணை பெருமிதம், ரசனை வெள்ளம். ஓ, இவள் என் மகள்.

புழுதியைக் கிளப்பிக் கொண்டு பட்டிருப்புப் பாலத்தைத் தாண்டிய பஸ் போரதீவை ஊடறுத்துச் செல்கிறது. பட்டிருப்புப் பாலத்துக்கப்பால் வெல்லாவெளி செல்லும் வரையில் சென்றிகள் எதுவும் இல்லை. அப்பாடா என்று பஸ்சில் இருக்கலாம், ரசிக்கலாம்.

வீதியின் இருபுறமும் பசுமை விரிப்பாய் வயல் வெளிகள், மெல்லிய காற்றுக்கு அசைந்தாடும் அந்தப் பயிர்களின் கொள்ளை அழகு, இடையிடையே பளிங்குப் பாளமாய் ஒளிவிடும் சிறுசிறுகுளங்கள். வயல் வெளியின் அருகாக முருகன் கோயில், சற்றுத் தள்ளி சிறு சிறு அலைகளோடு ஆழமாய், அமைதியாய் ஒரு பேரறிஞனைப் போல வயல் வெளியை அரவணைக்கும் மட்டக்களப்பு வாவி....... சட்டென்று என்னுள் ஒரு துயரச் சுவடு பதிகிறது. இந்த அமைதியை, இந்த அழகுகளைச் சுமந்து வாழும் இந்தக் கிராமம், இதன் அண்மைக்கிராமமான வெல்லாவெளி...

பீதியால் வெளியேறிய தன் மக்கட் செல்வங்களை இழந்து ஒரு சுடுகாடு போல எரிந்த கூரைகளும் கரிபடிந்த சுவர்களுமாய் தொண்ணூறாம் ஆண்டில் காட்சி தந்த கோலம்.......... நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்ற பயங்கரம்.

ஏந்திய குழந்தைகளும் தலையிற் சுமந்த உடமைகளுமாய் ஒரு மாலைப் பொழுதில் தங்கள் மண்ணை, தங்கள் சொத்து சுகங்களை விட்டு விட்டு "பாலையடி வட்டையால ஆமி வருகுதாம்........" என்று சொல்லிக் கொண்டு புகலிடம் தேடி ஓடிய அந்தக் காட்சி இன்னும் கண்முன்னால் நிற்கிறது.

அதன் பின்னர் அந்தக் கிராமங்கள் தீக்குளித்த பின்னர் ஒரு மயானத்தைக் கடப்பது போல, வெறிச்சோடிப் போயிருந்த அந்தக் கிராமங்களைக் கடந்து கணவருடனும் மக்களுடனும் துவிசக்கரவண்டியில் பயணம் செய்து எனது கிராமத்துக்குச் சென்ற அனுபவமும் மறக்க முடியாதது.

இப்போ நிலைமை ஓரளவு மாறி, மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, வீடுகளைப் புதுப்பித்து, முற்றாக இழந்தவர்கள் சிறு சிறு குடிசைகளைக் கட்டி, மரவள்ளி, கத்தரி, கீரை நட்டு மீண்டும் பசுமை குடியேறத் தொடங்கியிருக்கிறது.

இடையில் பஸ் நிற்கிறது. யார் யாரோ இறங்குகிறார்கள். மாலை நான்கு மணிக்கு மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட பஸ் போரதீவை வந்தடைய ஆறுமணியாகியிருந்தது. மேற்கு நாட்டவர்களின் பயணங்கள் ஜெட்வேகத்தைத் தொட நாம் இன்னும் ஆமை வேகத்திலேயே நிற்பதை எண்ணிக் கொள்கிறேன். பஸ் புறப்படுவதற்கிடையில் பட்டி நோக்கித் திரும்பும் எருமைகள் எதிரே புழுதி கிளப்பிக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன. மாலையாகியதும் அவை போய் பட்டியில் ஒதுங்கும். காலையில் குடம் குடமாய்க் கறக்கும்.

மாடுகள் தாண்டிச் சென்றதும் பஸ் புறப்படுகிறது. வயற் பிரதேசத்தில் ஆங்காங்கே அமைந்திருக்கும் சின்னச் சின்னக் குடிசைகள் கிராமிய வாழ்வின் ஆர்ப்பாட்டமில்லாத

வாழ்க்கை முறையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. முற்றங்களில் செழித்து வளர்ந்த மரவள்ளிகளும் கத்தரிகளும் அவர்களது உழைப்பின் பயனைத் தர ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன.

அப்பாவிக் கிராமத்து மக்களின் வஞ்சகமற்ற வாழ்க்கையைப் போல மதர்த்து நிற்கும் குலைதள்ளிய தென்னங்கன்றுகளின் அடியில் சிறுவர்கள் இருவராய், மூவராய் இந்த உலகத்தின் கவலைகள் எதுவுமற்று விளையாடிக் கொண்டிருந்த காட்சி மக்களின் கவனத்தை ஈர்த்தது.

"அங்க பாருங்கம்மா, ஆறுமணிக்குமேல விளையாடிக் கொண்டிருக்குதுகள். நீங்க எண்டா புத்தகத்தத் தூக்கு, படி எண்டு எங்கள விளையாடக் கூட விடமாட்டயள்."

என் பன்னிரண்டு வயது மகள் குறைப்படுகிறாள். உண்மைதான். நகரத்தில் வாழும் பிள்ளைகள் - இப்போ சில கிராமங்களிலும் இந்த வியாதி பரவிவிட்டது - எங்கே விளையாடுகிறார்கள்? விளையாட்டை அவர்கள் மறந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன.

எங்கள் மக்களோடு ஒப்பிடுகையில் நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்தான். எங்கள் சிறுவயதுக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். பாடசாலை விட்டு வந்து புத்தகங்களைத் தூக்கிப் போட்டால் அடுத்த நாட் காலையிற்தான் அவற்றைத் தேடிப் பொறுக்கி எடுப்போம்.

மண்வீடு கட்டுவது, மாங்காய் பொறுக்கி உப்பும் கொச்சிக்காய்த்தூளும் சேர்த்துச் சாப்பிடுவது, பொம்மைக் கல்யாணம் நடத்துவது, கோயில் கட்டிப் பொங்கல் பொங்கி உண்பது. சின்னச் சோறு கறி சமைப்பது.... மாலையானாலும், விளையாட்டு முடியாது. நான் என் குழந்தைகளுக்காக மட்டுமல்ல, புத்தகச்சுமையால் அழுந்தி, சுதந்திரம் பறித்தெடுக்கப்பட்ட எல்லாக் குழந்தைகளுக்காகவும் பெருமூச்சு விடுகின்றேன்.

கதிர் முற்றிய வயல்களில் குருவிகள் பட்டமாய் வந்து விழுகின்றன. குருவிக்காவல் இருப்போரின் "ஹாய், ஹாய்" என்ற ஓசை பஸ்சின் இரைச்சலையும் மீறி ஒலிக்கிறது.

அந்தக் கூச்சலுக்கும் அஞ்சாத குருவிகள் நெல் மணிகளைக் கொத்திக் கொண்டு பறக்கின்றன.

"இந்தக் குருவியளுக்குப் பயமில்ல, என்னம்மா? எவ்வளவு குருவியள்? எவ்வளவு நெல்லைச் சாப்பிட்டிருக்கும்?"

"அதுகளுக்கும் சாப்பாடு வேணும்தானே?" மகளின் கேள்விக்குப் பதில் சொல்கிறேன் நான்.

"அம்மா, என்ர கிளாசில படிக்கிற பிள்ளையளுக்கு வயலெண்டாத் தெரியாதாம், அடுத்த முறை வரக்குள்ள தரணியாவையும் சௌமிகாவையும் கூட்டிவருவம் என்ன?"

"மெய்தான், ரீச்சர் சுவர் அலங்காரப் பொருள் செய்யிறதுக்குக் களிமண் கொண்டுவரச் சொன்னவ, போன உடனே மாமாட்டச் சொல்லி களி எடுத்துத் தரோணும்......"

ஊர் நெருங்க நெருங்க மக்களின் உற்சாகம் கரைபுரள்கிறது.

"அம்மா, எனக்கு விடியப் போற நேரத்தில கண்ணை மூடிற்றுப் படுக்கக்குள்ள பெரியம்மா வாசல் கூட்டுற சத்தம் கேக்கச் சரியான விருப்பம்." இப்படி மூத்தமகள் அடிக்கடி சொல்வாள் - நான் சிரிப்பேன்.

காலைப் பொழுதுக்குக் கட்டியம் கூறும் துலாச் சத்தம், மாடுகளை வயலுக்கு ஓட்டிக் கொண்டு போகிற உழவர்களின் ஆரவாரம், காலைப் பொழுதின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஓடும் மாட்டு வண்டிகளின் கடகட ஓசை, கீதன் அண்ணா பசுக்களின் மடியைக் கழுவி செம்பில் நுரைக்க நுரைக்கப் பால் கறப்பதைப் பார்ப்பது எல்லாமே இவர்களை சந்தோசப்படுத்துகின்ற சங்கதிகள்.

தெருவிலே யார் கண்டாலும் "எப்ப வந்தனீங்க, அம்மாவும் வந்தவவா?" என்று அன்போடு விசாரிக்கும் உறவின் நெருக்கம், போகின்ற வீடுகளில் எல்லாம் மாம்பழமோ, பலாப்பழமோ, தயிரோ, அவித்த மரவள்ளியோ, பலகாரங்களோ ஆசையாய்க் கொடுத்து உண்ணவைக்கிற பாசப் பகிர்வு, வீதிகளில் வாகனப் பயமோ, இரைச்சலோ இல்லாத சுதந்திரம், வெயிலையே காணமுடியாத வீதிகள்,

விடலைப் பருவத்து இளைஞர்களின் கேலிப் பேச்சுக்கள் இல்லாத நிம்மதி.........

இவற்றையெல்லாம் அனுபவிப்பதற்காகவே கிராமத்தை விரும்புகிற என்மக்களின் ஆசைக்காக அடிக்கடி என்னுடைய கிராமத்துக்குச் செல்ல வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் உத்தியோகச்சுமை, கணவரின் தனிமை, மக்களின் படிப்பு என்று பல தடைகள் என் கால்களைக் கட்டிப் போடும்.

போரதீவுக்கப்பால் பரந்த வயற் பிரதேசங்களுக்கு மத்தியில் வெல்லாவெளி என்னும் சின்னக் கிராமம். தாமரைக்குளங்களும் நீரோடைகளும் கற்பாறைகளும் கொண்டு நாகரிகம் கொச்சைப் படுத்தாத அதன் அழகு நெஞ்சை அள்ளும். அதற்குமப்பால் பாலத்தினடியில் கிறட்டினை ஆறு, பொங்கிப் பிரவகித்து ஓடி வாவியுடன் சங்கமிக்கும் மூங்கிலாறு........ இவையிரண்டும் வயற்பிரதேசத்தை ஊடறுத்து ஓடி மண்டூர் மக்களுக்கு அமுதூட்டும் ஜீவநதிகள். இந்த அழகுகளையெல்லாம் இன்னும் சற்று நேரத்தில் தரிசிக்கப் போகிறோம் என்ற குதூகலம் என்மக்களுக்கு. ஓடிக் கொண்டிருந்த பஸ் வயல்நடுவில் இருந்த மாரியம்மன் ஆலயத்தண்டை போயிருக்கும். எங்கிருந்தோ சீறிவந்த துப்பாக்கி ரவைகள் பஸ்சின் இருபுறமும் மாறிமாறி வெடிக்கின்றன. பயங்கரக் குலுக்கலுடன் நிற்கிறது பஸ். பஸ்சினுள்ளிருந்த எவரிடமிருந்தும் எந்தச் சத்தமும் இல்லை. மக்கள் இருவரும் அப்படியே என்னைக் கட்டிக் கொள்கின்றனர்.

தொடர்ந்து எங்கிருந்து வருகிறதெனத் தெரியாத துப்பாக்கி ரவைகளின் சீறல்கள், அவை வெடிக்கும் படீர் என்ற ஓசை.......... காதைச் செவிடுபடுத்துகின்றது.

"மாரித்தாயே!" என்று என் நெஞ்சம் வெடித்து விடும் போல அலற மக்களின் தலைகளை சீற்றுக்கடியில் அமர்த்திப் பிடித்துக் கொள்கிறேன். இதுவரையில் பிறர் சொல்லக் கேள்விப்பட்டவையும் பத்திரிகைகளில் வாசித்து அறிந்தவையுமான சங்கதிகளை இன்று நானே அனுபவிக்கப்

போகிறேனா? நான் மட்டுமென்றாலும் பாதகமில்லை. என்குழந்தைகளுமல்லவா......?

அப்பொழுதுதான் முன்னால் பார்க்கிறேன். இருள் சூழ்ந்து வரும் அந்தப் பயங்கரமான வேளையில் இருபது இருபத்தைந்து யார்தூரத்தில் வீதியை அடைத்துக் கொண்டு பச்சை உடைகள் நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கருகே கொழுந்து விட்டெரியும் தீப்பிழம்புகள்.

அந்தத்தீயை கண்டதும் பஸ்சிலிருந்த எங்களுடைய அடிவயிற்றிலும் தீப்பற்றிக் கொண்டது. திடீரென அவர்கள் ஏதோ சொல்லிக் கத்துவது கேட்கிறது. என்னவென்று புரியவில்லை. சாரதியும் நடத்துநரும் பஸ்சை விட்டு இறங்கிப் போவது தெரிகிறது. சரிதான். முதற்பலி அவர்கள், அடுத்தது நாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஆயுதமேந்திய ஒருத்தன் ஓடிவருவது அந்த மாலை மயங்கும் நேரத்து அற்ப ஒளியில் தெரிகிறது. “இறைவா, இதென்ன பயங்கரமப்பா, நான் மட்டுமென்றாலும் பாதகமில்லை. என் இரு செல்வங்களையுமல்லவா அழைத்து வந்து விட்டேன். எங்களுக்கு ஏதும் நடந்தால் கணவர் எப்படித் தாங்குவார்?” என என்மனம் அலறுகிறது.

அந்த வீரன் பஸ்சுக்கு அருகில் வந்ததுதான் தெரியும். சரமாரியான வேட்டுக்கள்...... எங்கே சுடுகிறான், யாரைச் சுடுகிறான் என்று தெரியவில்லை. கண்களை மூடிக் காதுகளையும் பொத்திக் கொள்கிறோம். கணநேர அமைதி. கண்களை விழித்தபோது தான் நாம் உயிரோடு இருப்பது தெரிகிறது.

முன்னால் நின்று கொண்டிருந்த அவர்களிடம் சென்ற சாரதி பிடரியில் கால் அடிபட ஓடுவது என்பார்களே, அப்படி ஓடிவந்து பஸ்சில் ஏறிக் கொள்கிறார். பஸ் புறப்படுகிறது. திடீரென மேற்குப் புறமாய் சற்றுத் தொலைவிலிருந்து துப்பாக்கி ரவைகள் சீறிவந்து வெடிக்கின்றன. நாவரண்டு, தொண்டை வரண்டு பீதியிலேயே உயிர் போய்விடுமோ என்று தவிக்கிறோம்.

கிராமத்துச் சந்தியைப் பஸ் நெருங்கியதும்

திமுதிமுவென்று அங்கு நின்றிருந்த சீருடைகள் ஆயுதபாணிகளாய் ஏறிக் கொள்ள, மீதியாக நின்றிருந்த ஐம்பது அறுபது பேர் தங்கள் வாகனங்களில் ஏறிக்கொள்ள ஓர் இராணுவ பவனியே ஆரம்பிக்கிறது. அதற்கும் முன்னால் கால் நடையாகச் சென்றோரின் துப்பாக்கிகள் எச்சரிக்கையாகக் குண்டுகளைப் பொழிய நாமிருந்த பஸ் நகர்கிறது.

"சென்றியள எரிச்சுப் போட்டு இடம் மாறிப் போறாங்க போலக் கிடக்கு......" பக்கத்திலிருந்த ஒரு வயோதிபர் முணுமுணுக்கிறார். 'இடையில் அவர்கள் காத்து நிண்டால்?' அதற்கும் மேல் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

விம்மியழும் மக்களைப் பார்த்து "என்ன அழுற?" என்று ஒரு பச்சை உடை கேட்கிறது. "பயம்?" என்று திரும்பவும் கேட்டுவிட்டு "பயம் வேணாம்" என்கிறது. நான் பெருமூச்சு விடுவதைப் பார்த்த முதியவர் "அந்த மண்டூர் முருகன் தான் எங்களைக் காப்பாத்தோணும்......." என்று அடித் தொண்டையால் கூறுகிறார்.

இரவு மணி ஏழு இருக்கலாம். பஸ் ஆமையாய் நகர்ந்து ஊர் சேர்கிறது. தப்பினோம் என்று மனச் சுமை சரிய பஸ்சிலிருந்து இறங்கியதும் என்மக்கள் சொன்ன வார்த்தைகள்............ "இனி நாங்க ஊருக்கு வரமாட்டமம்மா.........".

எனக்குத் தெரியும். இரண்டொரு வாரங்களில் இந்தப் பயம் மாறிவிடும். திரும்பவும் அவர்கள் கேட்கத் தான் போகிறார்கள். "எப்பம்மா எங்கள ஊருக்குக் கூட்டிப் போகப் போறயள்?"

இது எங்கள் எல்லோருக்கும் பழக்கப்பட்டுப் போன வாழ்க்கை.

**- 1998**

# பழி

அமைதியாகப் பரந்து விரிந்து அலைகளற்று உறங்கிக் கிடந்த வாவியைக் கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது அவனுடைய தோணி. வாவியில் விழுந்து மோதிய அதிகாலைத் தென்றல் சில்லென்ற குளிரை அள்ளி வீசிச் சென்றது. தூரத்தே அங்கொன்றும் இங்கொன்றுமாகய் மீன் தோணிகள் மிதந்து கொண்டிருந்தன. கிழக்கு வானத்தில் கருமை கலைந்து செந்நிறம் படர்வது வாவியோரப் பற்றைகளுக்கு மேலாய்த் தெரியத் தொடங்கியது.

அணியத்திலிருந்து சவளால் நீரைக் குடைந்து தோணி செலுத்திக் கொண்டிருந்த நல்லதம்பி "தண்டைக் கொஞ்சம் ஊண்டிப் போடுங்க. வானம் வெளிக்குது. இனி வஸ் வந்திரும்" என்று தண்டு வலிப்போரைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தான்.

என்னதான் தன்னுடைய கவனம் தொழிலின் மேல் இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும் அவனுடைய எண்ணமெல்லாம் வீடு நோக்கியே தாவிக் கொண்டிருந்தது. அங்கே பிரசவ வலியினால் துடித்துக் கொண்டிருக்கும் மனைவியின் வேதனை படர்ந்த முகம்...... என்னை இந்த நிலையில் விட்டுப் போறயளா? என்பது போல் கெஞ்சும் விழிகள்.....

"பாவம் பக்கத்தில் நல்லதொரு துணையும் இல்லாமவிட்டுப் போட்டு வந்திற்றன் - கடுமையான நோ இல்லைத்தான்..... அடுத்த வீட்டுச் செல்லம்மாக்காவைப் பார்க்கச் சொல்லிப் போட்டு வந்தன்..... எப்பிடியெண்டாலும் அவ பார்த்துக் கொள்ளுவாதான். எண்டாலும் இந்த நேரத்தில் பக்கத்தில நான் நிக்கத்தான் வேணும்..... என்ன செய்ய? ..... எத்தினையோ அலுவல்களோட இந்தத் துறையைக் கடக்க என்னை நம்பி வாறவங்கள ஏமாத்த மனம் வருகுதில்லையே..... அதுக்கும் மேல இந்தத் தோணி

ஓடினாத்தான் இண்டைய பொழுது ஓடும் எண்ட நிலை..... அவள்ற பிரசவச் செலவுக்குக் கூட ஒரு ஐம்பது ரூபா கையில இல்ல..... அவனுடைய சிந்தனை நீண்டு கொண்டிருந்தது.

வாவியின் அமைதியைக் கலைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்த தோணியின் இரண்டு பக்கமும் தண்டுகள் ஆற்றில் விழுந்து நீரைத் துழாவும் ஓசை அந்தப் பிராந்தியத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது.

வாவியின் மறுபக்கத் துறையிலிருந்து நகரத்துக்குச் செல்லும் அதிகாலைப் பஸ்ஸைப் பிடிப்பதற்காகச் செல்லும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் முதல் தோணி அவனுடையது.

முருகன் கோயிலில் அதிகாலைப் பூசைக்கான மணிச்சத்தம் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையை விட்டு எழுவான். அவசரம் அவசரமாகக் காலைக் கடன்களை முடித்து முகம் கழுவிக் கொண்டு கையோடு இரண்டொரு செவ்வரத்தை மலர்களைப் பறித்துக் கொண்டு வருவான். மண்டபத்துச் சுவரின் ஒரு மூலையில் மாட்டப்பட்டிருக்கும் முருகன் படத்தின் காலடியில் அவற்றை வைத்து திருநீற்றை அள்ளி நெற்றி நிறையப் பூசிக் கொள்வான். மனம் 'இண்டைக்கு ஒரு விக்கினமும் இல்லாமத் தொழில் செய்ய வழிகாட்டு அப்பனே'...... என வேண்டிக் கொள்ளும்.

அவனுக்கு முன்னரே எழுந்து வாசல் பெருக்கி சட்டி பானைகளை அள்ளிக் கொண்டு போய் கிணற்றடியில் கழுவிக் கொண்டிருக்கும் அவனுடைய மனைவி சுடச்சுட தேநீர் கொண்டு வந்து கொடுப்பாள். ஆவி பறக்க அவளுடைய கையால் தேநீர் வாங்கிக் குடிப்பதில் அவனுக்கு ஒரு தனிச்சுகம். வெறும் தேநீர் தான் என்றாலும் அதுவே அவனுடைய வயிற்றை நிறைத்துவிடும்.

இறப்பில் செருகி வைத்திருக்கும் பீடிக் கட்டையும் நெருப்பு பெட்டியையும் எடுத்து ஒரு பீடியைப் பற்ற வைத்துக்

கொண்டு மீதியை மடியில் பத்திரப்படுத்திக் கொள்வான். தூங்கும் குழந்தைகளை ஒரு தடவை பார்த்துவிட்டு சவளைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு ஓட்டமும் நடையுமாகத் துறையடிக்கு வருவான். கூடவே கொண்டுவரும் பன்பையில் பழஞ்சோறும் கறியும் முடிந்து வைத்திருப்பாள். எட்டு மணியளவில் வாவிக்கரையில் நிற்கும் அரச மரத்தடியில் அதன் வேரில் அமர்ந்து அந்தச் சோற்றைச் சாப்பிட்டு ஒருவாய்க்கு வெற்றிலையும் போட்டானென்றால் அதன் பின் அவனுக்குப் பசியே தெரியாது.

'இண்டைக்கு வெறும் தேத்தண்ணி மட்டும் தான். சாமக்கோழி கூவக்குள்ளையே வயித்துக்க வலிக்குதெண்டு சிணுங்கத் தொடங்கிற்றாள்..... வாறவழியில மருத்துவிச்சிக்குச் சொல்லிப் போட்டு வந்தன்...... என்ன ஆகிச்சோ?...... மாரித்தாயே.....'

"இந்தத் தோணிக்கார ஆக்களுக்கு என்னவும்படுகுதா நல்லான்? இப்ப மீனக் காண்கிறதெண்டாலே மிச்சம் கஷ்டமாகக் கிடக்கு, எத்தின நாளைக்குடாப்பா கருவாட்டையும் மாசையும் சாப்பிடுற?" தோணிக்குள்ளிருந்த செல்லையா வாத்தியாரின் குரல் அவன் எண்ணங்களைக் கலைத்தது.

"விரால், மணலை, செப்பலியெண்டு புடிக்கிறானுகள்தான் வாத்தியார். விடியிற நேரம் துறையடியில் வந்து நிண்டு அடிபுடிப்பட்டு வாங்கிப் போடுறாங்க..... பிந்தி வாறாக்களுக்கு ஒண்டும் கிடைக்கிறல்ல..."

அவன் வாத்தியாருக்குப் பதில் சொல்லிக் கொண்டே சவளைத் தூக்கி நீருக்குள் குடைந்து தோணியைத் துறையடிப் பக்கமாகத் திருப்பிவிட்டான்.

"நேற்றும் புள்ளையளுக்கு நல்ல கறி கிடைக்கல்ல. ஆரும் வீச்சுக்காரனுகளிட்ட பின்னேரமெண்டாலும் மீன் வாங்கிற்றுப் போகோணும்". அவன் மனம் மறுபடியும் வீட்டு நினைவுகளில் தாவியது. பாவம் பூமணி நாலு புள்ளையளோடயும் கிடந்து மாரடிக்கிறதோட அப்பமும் சுட்டு

விக்கிறாள். எப்பிடியெண்டாலும் பாடுபட்டு புள்ளையளை வசதியா வாழ வைக்ககோணுமெண்டுதான்...... துறைக்காறண்ட மனைவியெண்டாலும் அவளுக்குள்ளையும் ஆசையள் எவ்வளவு இருக்கும்..... அவளையும் புள்ளையளையும் காப்பாத்திறதுக்கு இந்தத் தோணியும் ஆறும் தானே எனக்குக் கைகுடுக்குது...'.

சர்ர்.... ரென்று தோணி மணலில் உரசும் சத்தம் அவன் சிந்தனைக்கு தடை போட்டது. சவளைத் தூக்கித் தோணிக்குள் போட்டுவிட்டு வேட்டியை மடித்துக் கட்டியவன் நீருக்குள் குதித்தான். "இனித் தோணி போகாது, ரெண்டு மூணு பேர் இறங்கோணும்" என்று சொல்லி இரண்டொருவரை இறக்கிவிட்டு நீருக்குள் நடந்து கொஞ்சத் தூரத்துக்குத் தோணியை இழுத்துவிட்டான்.

தூரத்தே பஸ்ஸின் ஹோர்ன் ஒலி கேட்கத் தொடங்கியது. அவசரம் அவசரமாக இறங்கிய பயணிகள் அவனுடைய கைகளில் சில்லறைகளைத் திணித்துவிட்டுப் பஸ்ஸைப் பிடிப்பதற்காக விரையத் தொடங்கினர். அவன் சில்லறைகளை எண்ணி மடியில் பத்திரப்படுத்திக் கொண்டான். பொழுது பரபரவென்று புலரத் தொடங்கியது. அரசமரத்தடியில் தகரக் கொட்டிலுக்குள் குடியிருந்த பிள்ளையாரின் முன்னால் போய் நின்று மனைவியை நினைத்துக் கும்பிட்டவன் மடியிலிருந்த சில்லறையில் ஒரு ரூபாவை எடுத்து உண்டியலில் போட்டுவிட்டான். அது அவனுடைய நாளாந்தக் கடமை. தவறாமல் பிள்ளையாரின் உண்டியலில் அவனுடைய கணக்கில் எப்படியும் ஒரு ரூபா சேர்ந்துவிடும்.

அவன் அரசமரத்தடியிலேயே அமர்ந்து வெற்றிலை போடத் தொடங்கினான். பிரயாணிகள் ஒருவர் பின் ஒருவராய் வந்து துறையடியில் கூடத் தொடங்கினர். அந்தத் தகரக் கொட்டில் பிள்ளையார் அவனையே பார்த்துக் கொண்டிருப்பது போல அவனுக்குத் தோன்றியது. அவன் தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டான். 'இந்தத்துறையில் நீ எனக்குக் காவல். அங்காலத் துறையில் மாரித்தாய் காவல். ரெண்டு பேரையும் நம்பித்தான் நான் காத்தெண்டும், மழையெண்டும் பாராமல் வள்ளம் ஓட்டுறன். என்ர தொழிலுக்குக் காவலாயிருக்கிறது

போல அவளுக்கும் ஒண்டும் ஆகாமக் காப்பாத்திப் போடப்பா....'

உண்மையில், ஆழம் காணமுடியாத அந்த வாவியில் காற்றும் மழையும் பாராமல் ஒவ்வொரு தடவையிலும் பத்துப் பன்னிரண்டு பயணிகளை ஏற்றிக் கொண்டு அவர்களுடைய உயிர்களுக்குத் தானே பொறுப்பாளியாய் நின்று தோணிசெலுத்துவது அந்த அம்மாளும் இந்தப் பிள்ளையாரும் துணையிருக்கும் தைரியத்தில் தான்.

வாவிக்கரையில் வளர்ந்திருந்த கிண்ணம் பற்றைகளுக்கு மேலிருந்த இரண்டு நாரைகள் 'குவாக் குவாக்'கென்று கத்திக் கொண்டு அவன் தலைக்கு மேலால் பறந்து சென்றன. "வெளிக்கிடுவமேயண்ண, பத்துப் பேரிருக்கிறம். ஆக்கள் காணாதெண்டு காத்திருக்கயளோ?"

கயிற்றுக் கட்டோடு துறையடிக்கு வந்த இளைஞனொருவன் அவன் சிந்தனையைக் கலைத்தான். "இல்லதம்பி போவம். ஆக்கள் போதாட்டியும் நேரத்துக்குப் போகத்தானே வேணும். ஏறுங்க....." என்று துரிதப் படுத்தியவன் அந்த இளைஞனின் கயிற்றுக் கட்டைப் பார்த்தான். "என்ன தம்பி வெள்ளாமயெல்லாம் வெட்டி முடிஞ்சுது போல இண்டைக்கு உப்பட்டி கட்டப் போறயளா?"

"ஓமண்ண, கட்டி இண்டைக்கே மெசினால அடிச்செடுக்கப் போறம்..... இரவையில வயலுக்குள்ளெயெல்லாம் நிக்கிற காலமா இது?"

"அதுசரிதாண்டா தம்பி, நினைச்ச நேரமெல்லாம் ரவுண்டப்பெண்டு வந்து சுத்தி வளைச்சி ஆர், எவர் எண்டில்லாம ஒதுக்கிற்றுப் போறானுகள். சட்டுப்புட்டெண்டு வயல் வேலையள முடிச்சிற்று வீட்டுக்கு வந்திரப் பார்க்கோணும்...."

அவன் கைகள் துரித கதியில் தோணியைத் தள்ளி ஆற்றில் விட, பிரயாணிகள் ஏறிக் கொண்டார்கள். வெற்றிலைச்சாறு வாயில் ஊறிக் கொண்டிருந்தது. இரத்தச் சிவப்பாய் ஊறும் அந்தச் சாற்றைப் பூ வென்று

ஊதித்துப்பிவிட்டு அவன் தோணியில் ஏறிச் சவளைத் தூக்கிக்கொண்டான். மெல்லிய அலைகள் தவழும் வாவிக்கரையில் அவனுடைய வெற்றிலைச்சாறு செங்குருதி போலக் கரைந்து கலைந்தது.

அவனுடைய தோணி வாவியில் ஆடி ஆடி மிதக்க மனம் மீண்டும் மீண்டும் மனைவியிடமே சென்றது. பூமணிக்கு என்ன நடந்ததோ, எப்படித் துடிக்கிறாளோ? இந்நேரம் மருத்துவிச்சி போயிருப்பாள். மாரித்தாயே ஒரு ஆக்கினையும் இல்லாம அவளுக்குப் புள்ளை புறந்திர வேணும். தாய் தவிக்கிறதப் பார்த்துப் புள்ளையள் நாலும் மூலைக்கொண்டாகக் குந்தியிருக்குங்கள்..... இந்த அஞ்சோட போதும்.... பாவம் அவள் தானே கஷ்டப்படுறவள்......."

இக்கரைக்கும் அக்கரைக்குமாக அவன் மாறி மாறித் தோணி செலுத்திக் கொண்டிருந்தான்.

மேற்கு வானத்தில் மலைச் சிகரங்களுக்கப்பால் மாலைச் சூரியன் இறங்கிக் கொண்டிருந்தது. தூரத்துப் பற்றைகள் கருமை போர்க்க ஆரம்பித்தன. சிவப்புக் கோளமாய்க் கீழிறங்கும் அந்த மாலைச் சூரியனைப் பார்த்தபடியே அவன் தோணியைச் செலுத்திச் கொண்டிருந்தான். ஆற்றில் இலேசாகக் காற்று வீசிக் கொண்டிருந்ததால் தோணி மேலும் கீழுமாய் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது.

"என்னப்பா, காத்தடிக்குது தோணியும் ஒரு மாதிரியா ஆடுது?" என்று யாரோ முணுமுணுப்பது கேட்டது.

சிரித்துக்கொண்டே "இதென்ன காத்து? கச்சான் காத்துச் சுழட்டிச் சுழட்டி அடிக்கிற நேரம் வந்து பார்க்கோணும்" என்றான் அவன்.

"ஓமோம். தோணியத் தூக்கித் தூக்கிப் போடும். தண்ணி வாரி அடிக்கும். உயிர் போகுதோ வருகுதோ எண்டு நடுங்கிப் போயிருப்பம். நல்லதம்பி எந்தக் காத்திலையும் தோணியைப் பத்திரமாய்க் கொண்டு போய்க் கரை சேர்த்திருவான்" யாரோ ஒரு அனுபவசாலி அவனுக்கு வக்காலத்து வாங்கினார்.

மீண்டும் மனைவியின் நினைவு வந்ததும் விரைவாகவே வீட்டுக்கு போய்விட வேண்டும் என்று மனம் பரபரத்தது. அது அவனுடைய கடைசி ஓட்டம். தரை தட்டிய தோணியைக் கரையில் இழுத்து விட்டு இறங்கிப் பயணிகளிடம் சில்லறையை வாங்கி மடியில் செருகிக் கொண்டு நிமிர்கையில் அவன் அடுத்த வீட்டுச் சின்னவன் மூச்சிரைக்க ஓடிவந்து கொண்டிருப்பது தெரிந்தது. நல்லதம்பியின் நெஞ்சுக்குள் பறை கொட்டியது. கச்சான் காற்றுக்குப் புரளும் அலை போல மனதில் பீதி புரண்டு புரண்டு எழுந்தது.

"என்னடா சின்னவன், என்ன நடந்தது. ஏன் ஓடி வாறாய்?" அவன் பொறுமையின்றிக் கத்தினான்.

"அண்ண, நல்லாண்ண, எங்கட மச்சான் தங்கராசாவ மாடு குத்திப் போட்டு, வயித்தில பெரிய காயம்... வண்டில்ல ஏத்திற்று வாறாங்க ...... உங்களை மறிச்சு நிப்பாட்டத்தான் ஓடி வந்தன்......... ரெத்தம் கூடக்குறையப் போகுது.... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகோணும்..." வந்தவன் ஒரே மூச்சில் கூறி முடித்தான்.

"பொழுதுபட்டுப் போகுதுடாப்பா, இனி என்னெண்டு போய்த் திரும்புற? அங்க வீட்டில பூமணி வயிறு நோகக்கிடக்கிறாள். விடிய வந்தனான். இன்னும் போய்ப் பார்க்கல்ல...."

"அப்பிடிச் சொல்லாத நல்லாண்ண, ரெத்தம் கூடப்போனா மச்சான் தப்பமாட்டானாம்... எப்பிடியெண்டாலும் கொண்டு போய் விட்டிரு. அங்கால என்ன செய்தெண்டாலும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருவம்....அந்தா வண்டிலும் வந்திற்று..... பூமணிக்கு ஆம்பிளப் புள்ள புறந்திரிக்காமெண்டு கடையடியில பொன்னம்மாப் பெத்தாச்சி கதைச்சதக் கேட்டன். அவளுக்கு ஒண்டுமில்ல.... நல்லாண்ண, ஏலாண்டு சொல்லிராத.."

அவனுடைய கெஞ்சுதலும் வண்டியில் இரத்த வெள்ளத்தில் தோய்ந்து முனகிக் கொண்டு கிடந்த தங்கராசாவின் கோலமும் அவன் மனத்தைக் கரைத்தன.

அவற்றுக்கு மேலாய் பூமணிக்கு ஆபத்தில்லாமல் பிள்ளை பிறந்துவிட்டது என்ற செய்தியும் ஆறுதலைத்தர அவன் தோணியை ஆற்றில் தள்ளினான்.

அவர்களை அக்கரையில் விட்டுவிட்டுத் திரும்பும் போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. சில்லென்று வீசும் குளிர்காற்று உடலை நடுக்கியது. பரந்து கிடந்த வாவி பூதாகரமான இருட்டுப் போர்வையைப் போர்த்தி உறங்குவதாய்ப்பட்டது அவனுக்கு. வயற்பக்கமிருந்து எழுந்த ஆட்காட்டிக் குருவியொன்று அவலமாய்க் கத்திக் கொண்டு பறந்தது.

தோணிக்குள் வீச்சுக்காரனிடம் வாங்கிய சள்ளல் மீன்கள் கோர்வையில் படபடவென்று துடித்துக் கொண்டிருந்தன. மடியைத் தடவிப் பார்த்தான். அன்றைய உழைப்பும் பத்திரமாக இருந்தது. 'பாவம்', பூமணியும் புள்ளையளும் பயந்து போயிருக்குங்கள்..... புதுச்சீவனொண்டும் இண்டைக்கு வீட்டில காத்திருக்கும். ஆம்பிளப் புள்ளையாமே, என்ன பேரு வைக்கிறண்டும் யோசிக்கல்ல. பாப்பம், பூமணிதான் பேரெல்லாம் சொல்லுவாள்....' அவன் மனம் என்றுமில்லாதவாறு குதூகலித்துக் கொண்டது.

நட்சத்திரங்களின் ஒளியைத் தவிர வேறு வெளிச்சங்களற்ற அந்தப் பிரதேசத்தில் மாரியம்மன் கோயில் விளக்கொளியைக் கூட அவனால் காணமுடியவில்லை. 'ஏன் இண்டைக்கு கோயில் விளக்கும் எரியல்ல?' அவனுள்ளே சட்டென்று ஒரு பீதி உருக்கொண்டது.

'என்ன நடந்திருக்கும்? வழக்கமா அம்மாள்ற வெளிச்சம் நடு ஆத்தால வரக்குள்ளையே தெரியுமே? ஒருவேளை ஊர்ல ரவுண்டப்போ? இல்லாட்டி ஆமிக்காரன் வந்து வயலுக்குள்ள படுத்துக் கிடக்கிறானோ?'..... இந்த நினைவு எழுந்ததும் சில்லென்ற பய உணர்வு அவன் மேனியெங்கும் பரவி அவனுடலை ஒரு கணம் குளிர்வித்தது.

மறுகணமே, "இருக்காது போன சனிக்கிழமைதானே வந்து எல்லாரையும் ஒதுக்கிற்றுப் போய் வடிச்செடுத்துப்

போட்டு விட்டவனுகள்... இப்படி ராவில வாறண்டா நேற்று முந்தநாள் என்னவும் நடந்திருக்கோணும்.... அப்படி ஒண்டும் நடக்கல்லையே?" அவன் தன்னுடைய மனதைத் தேற்றிக் கொண்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் சவள் நீரைத் துழாவும் 'சளக், சளக்'கென்ற ஓசையும் ஓய்ந்தது.. கரைதட்டிய தோணியை இழுத்து வம்மி மரத்திற்கட்டிவிட்டு தோணிக்குள் துடித்துக் கொண்டிருந்த மீன் கோர்வையை எடுத்தான். மறுகையால் சவளைத் தூக்கித்தோளில் வைத்துக் கொண்டு வீதிக்கு ஏறுவதற்காகக் கரையோரமாக நடக்கத் தொடங்கினான்.

'பூமணியையும் புள்ளையையும் பாத்திற்று செல்லம்மாக்காட்டக் குடுத்துச் சள்ளல் மீன் குழம்பு வெச்சிப் புள்ளையளோட வளைச்சிருந்து சாப்.....' அவன் சிந்தனைகள் முடியவில்லை. "அம்மா" என மார்பைப் பொத்திக் கொண்டு அலறினான். படீர், படீர் எனச் சீறி வந்த துப்பாக்கி ரவைகள் அவன் மார்பைப் பிளந்து அவனுடைய சிந்தனையைத் தகர்த்தன.

வெற்றிலைச்சாறு போல அவனுடைய குருதி அந்த வாவி நீரிற் கரைந்து கலந்தது.

**ஞாயிறு தினக்குரல்**
**12.12.1999**

# கனவுகளேயாகி......

அவனுடைய அம்மா இப்படி அழகாய் இருந்ததை அவன் ஒரு நாளும் கண்டதே இல்லை. எப்பொழுது பார்த்தாலும் சாயம் போய் கிழிந்துவிடும் நிலைக்கு வந்துவிட்ட ஒரு வொயில் சாறி, அதற்குச் சற்றும் பொருத்தமில்லாத ஒரு சாம்பல் நிறச் சட்டை. காலையில் இழுத்துக் கொண்டை போட்டாலும் கலைந்து, பறந்து கிடக்கின்ற தலைமயிர், நெற்றியில் மட்டும் காலையில் சுவாமி படத்துக்குப் பூ வைக்கும் போது பூசிய திருநீறு லேசாய் அழிந்தும் அழியாமலும் இருக்கும்.

அவள் கழுத்தில் கையில் என்று நகை போட்டதையும் அவன் கண்டதில்லை.. அவனுடைய சின்னக்காவின் திருமணத்தில் அன்றும் கூட அவள் அப்படியே தான் இருந்தாள். சேலை மட்டும்தான் புதிதாய் உடுத்திருந்தாள். பச்சைக் கலரில் மஞ்சள் மஞ்சளாய்ப் பூப்போட்ட சேலையும் பச்சைச் சட்டை ஒன்றும் போட்டு குங்குமப் பொட்டும் வைத்து அவள் அழகாய் இருந்ததை அவன் ஆசையோடு பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறான். அவள் சாதாரண நாட்களில் குங்குமம் வைப்பதே இல்லை. நெற்றியில் திருநீறு மட்டும் பளிச்சிடும்.

"அண்டைக்கு என்னமாய் ஓடிஓடி வேலையெல்லாம் செய்து திரிஞ்சவ, அதுதான் ஆற்றையும் கண்பட்டுப் போச்சுதோ தெரியாது....." அவன் இப்படி எண்ணிக் கொண்டான்.

இப்பொழுது அவள் அழகாகப் படுத்துக் கிடக்கிறாள். இளைய மகள் கொண்டு வந்து உடுத்திவிட்ட சிவப்புச் சேலையும் சட்டையும், நெற்றி நிறைந்த குங்குமமும், மூத்த மகள் போட்டுவிட்ட மாலையும் காப்புமாய் என்றுமில்லாத பொலிவோடு.... கால்மாட்டிலும் தலை மாட்டிலும் எரியும் குத்துவிளக்குப் போல. ஆனால் கூப்பியவாறு கட்டப்பட்ட கைகளில் திணித்து விட்ட பூச்செண்டும் ஊதுவத்திப் புகையும்

அவனுக்கு அம்மா இப்போது உயிரோடு இல்லை என்பதை உணர்த்த அழுகை அழுகையாய் வருகின்றது.

"மூத்தவன்தான் ஒண்டையும் யோசியாம எங்கையோ ஓடிப் போயிற்றான். எண்ட ரெண்டு குஞ்சுகளும் தான் எனக்கு...... கைகால் ஆடாமக் கிடக்கக்குள்ள தண்ணி ஊத்துறதுக்கெண்டாலும்."

அவனுடைய அம்மா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை. அவனுடைய சின்னண்ணன் மீதும் அவன் மீதும் அவளுக்குச் சரியான நம்பிக்கை. சின்னக்காவும் பெரியக்காவும் பாடசாலைக்குப் போய் அவன் பார்த்திருக்க மாட்டான். பெரியக்கா எப்போதும் அடுப்படியில் கிடப்பாள். சின்னக்கா வீடுவாசல் துப்பரவாக்கி, வாசலில் பூச்செடிகள் நட்டு அழகுபடுத்துவாள். அவனுடைய வீடுவாசல் ஒன்றும் அப்படிப் பெரிய மாளிகையல்ல. நீளத்துக்கு ஒரு பத்துப்பன்னிரண்டு அடி அறையும் அதற்கு முன்னால் ஒரு சின்ன மண்டபமும் கிணற்றடிப் பக்கமாய் சமைப்பதற்கு ஒரு சின்னக் குசினியும். இவ்வளவு தான்.

அவனுடைய அப்பா குடித்துவிட்டு வந்து வீட்டுக்குள் இருக்கும் பொருட்களில் அகப்பட்டதை எடுத்துவீசுவார். அவனும் அவனுடைய சின்னண்ணனும் போட்டுக் கழற்றிய உடுப்புக்கள் அங்கும் இங்கும் கிடக்கும். பாடசாலைக்குப் போய் வந்த பின் புத்தகங்களும் சிதறிக் கிடக்கும். அவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்தி வைப்பது சின்னக்காவின் வேலை.

இதையெல்லாம் செய்யும் போது முணுமுணுவென்று யாருக்கோ பேசிக் கொண்டுதான் செய்வாள். யாருக்குப் பேசுகிறாள், என்ன சொல்லிப் பேசுகிறாள் என்று ஒன்றும் விளங்காது. அதைப் பற்றி யாரும் கவலைப்பட்டதும் கிடையாது. கொஞ்ச நாட்களுக்கு முன் அவளுக்கும் திருமணமாகி, அவனுடைய அப்பா கொடுத்த காணித் துண்டில் ஒரு சின்ன வீட்டைக் கட்டிக் கொண்டு அவளும் போய்விட்டாள்.

அவனுடைய அப்பா காலையில் எழுந்து அவன் அம்மா கொடுக்கும் பழஞ்சோற்றைச் சாப்பிட்டுவிட்டு மேசன் வேலுப்பிள்ளையோடு கூலியாகப் போவார்.

அவருக்கு ஒரு நாளைக்கு நூற்றைம்பது ரூபா கொடுப்பதாக வேலுப்பிள்ளை ஒருநாள் அம்மாவிடம் சொன்னதை அவன் கேட்டிருக்கிறான்.

அந்தப் பணத்தில் சில வேளைகளில் ஐம்பது அறுபது ரூபா என்று கொண்டு வந்து அவனுடைய அம்மாவிடம் கொடுப்பார். மீதியெல்லாம் குடிக்குப் போய்விடும். சாராயம் விற்கும் வீடுகளில் போய்க் கிடந்து குடித்துவிட்டு நல்ல வெறியில் வீட்டுக்கு வருவார்.

எவ்வளவு வெறியில் வந்தாலும் அம்மா அவரைத் திட்டிக் குழறமாட்டாள். நடக்கமாட்டாமல் வரும் அவரைப் பிடித்து வந்து இருத்தி ஏதாவது சாப்பாடு கொடுத்துப் படுக்கவைப்பாள்.

"இப்பிடிக் குடிச்சுப் போட்டு வாறவருக்கு என்னத்துக்கம்மா சோறு? நீ குடுக்கிற இடத்தால்தான் அவர் கண்மண் தெரியாமக் குடிக்கிறார்" என்று சின்னண்ணன் அவன் அம்மாவைக் கோபிப்பான்.

"போடா, உனக்கென்ன தெரியும்? அறிவில்லாமக் குடிச்சுப் போட்டு வாறவரோட சேர்ந்து என்னையும் மல்லுக்கட்டச் சொல்லுறயா? முப்பது வருசமாச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போய்க்கிடக்கிறன். இவ்வளவு காலத்திலையும் திருந்தாத மனுசன் இனியா திருந்தப் போறார்?" என்று கேட்பாள்.

அவன் மீதும் அவனுடைய சின்னண்ணன் மீதும் அவன் தாய்க்குப் பெரிய நம்பிக்கை "நீங்க ரெண்டு பேருமாவது நல்லாப் படிச்சு முன்னேற வேணும். குடிகாரண்ட புள்ளையள் எண்ட பெயரை மாற்ற வேணும்" என்று அடிக்கடி சொல்வாள். அப்போதுதான் அப்பா குடிப்பதையிட்டு அவள் மனதில் எவ்வளவு வேதனை இருக்கிறதென்பதை அவன் உணர்வான்.

அம்மா சொல்வது போல படிக்க வேண்டும் என்று அவன் மனதில் உறுதி பூண்டிருந்தான். ஆனால் அவர்கள் படிப்பதையோ, முன்னேறுவதையோ பார்க்க அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

இவ்வளவு விரைவில் அவளுக்கு இப்படியொரு முடிவு வரும் என்று யார்தான் எண்ணியிருந்தார்கள்?

அம்மா இறந்துவிட்டாள் என்பதைக் கேள்விப்பட்டு ஓடிவந்த அவனுடைய சகோதரிகள் அவனையும் அவன் சின்னண்ணனையும் கட்டிப் பிடித்துக்கதறிய கதறலில் கூடியிருந்த சனங்களும் அழத் தொடங்கி விட்டனர்.

இப்போதும் அவர்கள் இரண்டு பேரும் தாயின் தலைமாட்டில் இருந்து அழுவதைப் பார்க்க அவனாலும் அழுகையை அடக்க முடியவில்லை. அவனுடைய சின்னண்ணன் எங்கோ ஒரு மூலையில் போயிருந்து அழுகின்றான். இனி எனக்கும் சின்னண்ணனுக்கும் ஆதரவுக்கு ஆர் இருக்கிறாங்க? இப்ப ஆஸ்பத்திரியில கிடக்கிற அப்பா சுகமாகி வந்தாலும் திருப்பியும் குடிச்சுப் போட்டு வருவார். அவரா எங்களுக்கு ஆதரவு?" அவன் தனக்குள்ளே விம்முகிறான்.

நேற்று இந்த நேரமெல்லாம் அவன் அம்மா வீட்டில் இருக்கிறாள். தேநீர்க்கடை வேலுவின் வீட்டுக்கு மாவிடித்துக் கொடுக்கப் போகும் அவள் கடந்த இரண்டு நாட்களாய் போகவில்லை.

"ஏனம்மா மாவிடிக்கப் போகல்லையா?" என்று அவன் கேட்டதற்கு "காய்ச்சல் போலக்கிடக்கு. உடம்பெல்லாம் குத்தி வலிக்குது...... நான் போகல்ல........" என்று சொல்லிச்சுருண்டு படுத்தாள்.

பரீட்சைக் காசு கட்ட என்று அவள் கொடுத்த பதினைந்து ரூபா அவனிடம் இருந்தது. வகுப்பாசிரியை இரண்டு நாட்களாய் பாடசாலைக்கு வராததால் அந்தக் காசு அப்படியே இருந்தது.

"அம்மா உழைச்ச காசுதானே, நான் சோதினை எழுதாட்டியும் அம்மாட வருத்தத்துக்கு அது உதவட்டும்" என்று ஓடிப் போய் இரண்டு பனடோல் வாங்கி வந்து கொடுத்தான்.

"ஏதுடா காசு?" என்று கேட்டாள். ஏதென்று அறிந்ததும் கோபித்தாள். "போம்மா, ரெண்டு ரூபா தானே எடுத்தன். நான் ரீச்சரிட்டச் சொல்லுவன், அவ கோபிக்கமாட்டா" என்று அவன் சொன்ன பின்தான் அந்தப் பனடோலை விழுங்கி நீரும் குடித்தாள்.

சிறிது நேரத்தில் எழுந்து சோறு சமைத்து, மரவள்ளிக் கிழங்குக் கறிவைத்து மக்கள் இருவருக்கும் கொடுத்தாள். அவள் சாப்பிடவில்லை. "பசிக்கல்லடா" என்று சொல்லிப் படுத்தாள். தள்ளாடிக் கொண்டு வந்த கணவரைப் பிடித்து வந்து சோறு கொடுத்தாள். அவளின் உடற்சூட்டை உணர்ந்து "என்னடி, காய்ச்சலா?" என்று கேட்டார் அப்பா. "ஓம்" என்று சொல்லிச் சுருண்டு படுத்தாள் அவள்.

அவள் ஓடியாடி வேலை செய்யாமல் படுத்து அவன் பார்த்ததில்லை. எப்போதும் சுறுசுறுப்பாய்த் தான் இருப்பாள். ஒவ்வொரு நாளும் வேலுவின் தேநீர்க்கடைக்கு ஒரு மரைக்கால் அரிசி இடித்து வறுத்துக் கொடுத்துவிட்டு வருவாள். வரும் போதே அந்தக் கூலிக்கு அரிசியும் கறியும் வாங்கி வந்து சமைத்து மக்களுக்குக் கொடுத்துவிட்டுக் கணவனுக்காகக் காத்திருப்பாள்.

தாய் படும் துன்பங்களைப் பார்த்துச் சகிக்க முடியாமலிருக்கும் அவனுக்கு. "நீ மாவிடிக்கப் போக வேணாம் அம்மா" என்று அவன் சின்னண்ணனும் கெஞ்சுவான். "நான் மாவிடிக்கப் போனாத்தாண்டா உங்கட வயிற்றப்பட்டினி போடாமக் காப்பாத்தலாம். உங்கப்பன்ர உழைப்பு ஒழுங்கா வீட்டுக்கு வந்தா நான் ஏன் இந்தப்பாடு படப் போறன்?" என்று நொந்து கொள்வாள்.

சில வேளைகளில் இரவில் படுக்கும் போது அம்மா அவன் முதுகை வருடிக் கொடுப்பாள். சொரசொரவென்று மரக்கட்டையால் உரசுவது போலிருக்கும். அவன் அம்மாவின்

கையைப்பிடித்துத் தன் கையால் தடவிப் பார்ப்பான். “என்னடா பாக்கிறாய், உலக்கை புடிச்சிப் புடிச்சி என்ர கையும் மரம் மாதிரியே மாறிப் போயிற்று” என்று சொல்லும் அவளைக் கட்டிப் பிடித்து அழவேண்டும் போலிருக்கும் அவனுக்கு. ஆனால் அப்படிச் செய்ய முடியாததால் மௌனமாய்க் கண்ணீர் விடுவான்.

எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அம்மா அழுததை அவன் கண்டிருக்கமாட்டான். ஆனால் அவனுடைய மூத்தமகன் வீட்டை விட்டு ஓடிய அன்று தான் அவள் ஒப்பாரி வைத்து அழுதாள்.

அவனுக்குப் பதினெட்டு வயது. கணவன் குடித்தாலும் மூத்தமகன் இருக்கிறான் என்று நம்பியிருந்தவள் அவள். அவனும் தகப்பனுடன் மேசன் கூலியாகப் போனவன்தான் ஒழுங்காகச் சம்பளக் காசெல்லாம் கொண்டு வந்து கொடுப்பான். ஆனால் ஒரு நாள் வேலைக்குப் போனவன் திரும்பி வரவேயில்லை.

“தலையிடிக்குது, வீட்ட போறன்.” என்று தகப்பனிடம் சொல்லி விட்டுத் திரும்பியவன் எங்கே போனான் என்றே தெரியவில்லை. அன்றுதான் அம்மா அழுததை அவன் பார்த்தான். அவனை எங்கெல்லாமோ தேடினார்கள். இரண்டு மூன்று பையன்களுடன் சேர்ந்து அவன் போனதைக் கண்டதாக யாரோ சொன்னதைக் கேட்டு அவன் எங்கே போயிருப்பான் என்பதை ஊகித்து அறிந்து கொண்டாள் அவன் அம்மா.

அவன் போன பின் தான் அவள் மாவிடிக்கிற வேலைக்குப் போகத் தொடங்கினாள்.

“அப்பு, எழும்புடா, கொஞ்சம் தேத்தண்ணி யெண்டாலும் குடிச்சிற்று வா” பக்கத்து வீட்டு லெட்சுமியக்கா அவனைக் கூப்பிடுகிறாள். ‘அம்மா செத்துப் போய்க் கிடக்கக்குள்ள எனக்கென்னத்துக்குத் தேத்தண்ணி?’ அவன் வேண்டாமென்று தலையாட்டுகிறான்.

“நேற்றையில் இருந்து ஒண்டும் குடியாமக் கிடக்கிறயேடா, நீதானே அம்மாவுக்கு கடமை செய்ய

வேணும். எழும்பு, நடக்கிறதுக்கும் பெலனில்லாமப் போயிரும்...." அவள் அவனுடைய கையைப் பிடித்து இழுக்கிறாள். அவன் அவளுடைய கையில் சாய்ந்து அழுகிறான். அவனால் அழுகையை அடக்க முடியவில்லை.

"கைகால் ஏலாமக் கிடக்கக்குள்ள தண்ணி ஊத்துறதுக்கெண்டாலும்....... எண்டு சொல்லி எங்கள வளர்த்த நீ... இப்ப உனக்குக் கொள்ளி குடம் தூக்கப் போறனேயம்மா.........." அவன் அழ, லெட்சுமியும் அவன் தலையைத் தடவி அழுகிறாள். "நாசமாயப் போவானுகள் .... சும்மா கிடக்கிற அப்பாவியள் என்ன குற்றம் செய்ததெண்டு இப்பிடிக்கண்மண் தெரியாமச் சுட்டுத்தள்ளுறானுகள் இதெல்லாம் கேக்கப் பார்க்க கடவுள் தான் இல்லையா?"

அவனுக்கு அம்மாவைக் கொன்றவர்களை விட அப்பா மீது தான் ஆத்திரம் ஆத்திரமாக வருகின்றது. நேற்று அவர் குடிவெறியில்லாமல் வீட்டுக்கு வந்திருந்தால் காய்ச்சலென்று அறிந்த உடனேயே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கலாம். பொழுதோடேயே போயிருந்தால் இந்த அநியாயம் நடந்திருக்குமா?

நேற்று இரவு சாப்பிட்ட பின் எல்லோரும் அவரவர் படுக்கைகளில் சுருண்டு கொண்டனர். அவன் தந்தை வெறி தணியாமல் புலம்பிக் கொண்டு கிடந்தார். அவன், தான் படுத்த இடத்திலிருந்து உருண்டு புரண்டு அம்மா படுத்துக் கிடந்த இடத்தில் போய்ப்படுத்துக் கொண்டான். "எல்லாருக்கும் சமைத்துக் கொடுத்துப் போட்டுத் தான் ஒண்டும் சாப்பிடாமக் கிடக்கிறாவே" என்று அவன் தாய்க்காக இரங்கினான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை. நேரம் செல்லச் செல்ல அவள் அனுங்குவது கேட்டது. மெல்ல அவளுடைய கழுத்தில் தன் புறங்கையை வைத்துப் பார்த்தான். திகீரென்றிருந்தது. நெருப்புக் கூட இப்பிடிச் சுடுமோ?

"அம்மா, அம்மா" என்று கூப்பிட்டுப் பார்த்தான். முனகல் ஒலி மாத்திரம் தான் பதிலாய்க் கிடைத்தது. வாரிச் சுருட்டி எழுந்து கொண்டவன் பீதியுடன் அவளைப் பிடித்து அசைத்து "அம்மா" என்று கேவினான். அந்தச் சத்தத்தைக்

கேட்டு அரண்ட அவன் தந்தை "என்னடா அது?" என்று கேட்டுக் கொண்டு எழுந்தார். "அம்மாவுக்குக் காய்ச்சல் உரமாயிருக்கு...... கதைக்கிறாவில்ல..........." என்று அழுதான் அவன்.

தட்டுத் தடுமாறி தீப்பெட்டியை எடுத்துத்தட்டி, அந்த வெளிச்சத்தில் விளக்கைத் தேடி எடுத்து கொழுத்திக் கொண்டு வந்தான் அவன் சின்னண்ணன்.

"நீ போய் லெச்சுமியக்காவையும் புருசனையும் கூட்டிற்று வா. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிற்றுப் போவம்" போதை முழுதாய்த் தெளியாத குரலில் தந்தை சொன்னதைக் கேட்க அவனுக்கு ஆத்திரமாய் வந்தது. "இந்தநேரத்தில எப்பிடி?" "அது எனக்குத் தெரியுண்டா. நீ போய் நான் சொன்னதைச் செய்."

அவன் வேலியால் எட்டி, லெட்சுமியையும் கணவனையும் எழுப்பி அழைத்துக் கொண்டு வந்தான். அவன் தாய் அப்போதும் அனுங்கிக் கொண்டிருந்தாள்.

"முருகேசு, இவள எப்பிடியெண்டாலும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகோணும்... உன்ர வண்டிலக் கட்டு"

"இந்த நேரத்தில எப்பிடியண்ண, சென்றியில விடுவானுகளா? பத்துமணிக்கும் மேல........." முருகேசு தயங்கினான். "அத நான் பார்ப்பன். உனக்கு விருப்பமெண்டா வண்டிலத்தா, இல்லாட்டிச் சொல்லு, நான் தூக்கிற்றெண்டாலும் போறன்." அவர் அரைகுறைப் போதையில் பிடிவாதமாய் நின்றார். அதற்கு மேல் எது சொன்னாலும் எடுபடாதென்று முருகேசுவுக்குத் தெரியும். காய்ச்சல் வேகத்தில் துடிப்பவளை வீட்டில் வைத்திருப்பதும் ஆபத்து என்பதால் அவன் போய்த் தன் மாட்டை அவிழ்த்து வண்டியிற் பூட்டிக் கொண்டு வந்தான்.

அவர்கள் இருப்பது அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத ஒரு குடியேற்றக் கிராமம். வைத்தியசாலை, பாடசாலை, சந்தை, கடை, தபாலகம் எதுவென்றாலும்

ஏறக்குறைய இரண்டு மூன்று கிலோமீற்றர் தூரம் சென்றாக வேண்டும். இடையில் இரண்டு சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். பிரயாண வசதிகள் கூட எதுவும் இல்லை. மாட்டு வண்டியும் மோட்டார்ச் சைக்கிள்களும், துவிச்சக்கர வண்டியும் தான் அவர்களுடைய வாகனங்கள். இரவுப் பயணம் என்பது அப்பகுதியில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றுதான்.

கேற்றடியில் வண்டியை நிறுத்திவிட்டு மனைவியைத் தூக்கி வந்து வண்டியில் ஏற்றினார். லெட்சுமியும் முருகேசுவும் “நாங்களும் வாறமண்ண” என்று சொல்லியும் கேளாமல் அரிக்கன் இலாம்பு தொங்கவிடப்பட்ட வண்டியை ஓட்டிக் கொண்டு அவர் சென்று ஒரு பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்கமாட்டாது.

படபடவென்று கேட்ட நான்கு வெடிச்சத்தங்கள் அனைவரையும் அதிர வைத்தன. என்ன நடந்திருக்கும் என்பதை எவராலும் ஊகிக்க முடியாதிருந்தது.

அதிகாலையில் போய்ப்பார்த்து வந்தவர்கள் சொன்ன அந்தச் செய்தி அவனையும் அவன் சின்னண்ணனையும் உலுக்கியது. வெடிபட்டு அவனுடைய தாய் வண்டியிலேயே சுருண்டு கிடக்க, காலில் பட்ட வெடியோடு இரத்தம் வடிய வடியக்கிடந்த அவனுடைய தந்தையை இராணுவத்தினர் வைத்தியசாலைக்குக் கொண்டு போனதாகவும் பேசிக் கொண்டார்கள். “பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டினமாதிரித்தான்” என்று சிலர் பேசிக் கொண்டதை அவன் கேட்டான்.

அவனுடைய தாயோடு அவனுக்கு எல்லாமே போய்விட்டது. அவனுடைய சுகம், துக்கம், அன்பு, பாசம், அரவணைப்பு எல்லாமே அம்மாதான். இப்போ அம்மா இந்த உலகில் இல்லை என்பதை நினைக்க அவனுக்கு எதுவுமே இல்லாத ஒரு வெறுமையே நெஞ்சில் கல்லாய்ப்படிந்தது.

அவன் அம்மாவைக் கொண்டு போகும் நேரம் நெருங்கிவிட்டது. வீட்டில் தந்தை இல்லை. மூத்த அண்ணன் இல்லை. “பாவி. அம்மா சரியான பாவி....”

பாடையில் அவளைத் தூக்கி வைக்க, கூடியிருந்த எல்லோருமே ஒப்பாரி வைத்து அழுகிறார்கள். அவன் நெஞ்சுக்குள் ஏறிய துயரம் பாறாங்கல்லாய்க் கனக்கிறது. தாயின் அந்தப் பாச முகத்தைப் பார்க்கப் பார்க்க உலகத்தில் அவனுக்கு இனிமேல் ஒன்றுமே இல்லாமல் அவனுடைய சந்தோஷம் எல்லாவற்றையும் தானே கொண்டு போவது போல அவளின் முகம் மலர்ந்திருப்பதாய்த் தெரிகிறது.

பறையோசையும் ஒப்பாரியும் அவன் செவிப்பறையை அதிரவைக்கின்றன. அவன் அம்மாவை வளர்த்திய பாடையை யாரோவெல்லாம் தூக்குகின்றார்கள். கடைக்கார வேலு கொள்ளி குடத்தைத் தூக்கி அவனுடைய தலையில் வைக்கிறார்.

அவனை யாரோ முன்னால் நடத்த, அவனைப் பெற்றவள் அவன் பின்னால் கடைசிப் பயணம் புறப்படுகிறாள்.

**பெண்ணின் குரல்**

**டிசெம்பர் 2000.**

# உறவைத் தேடி

மெல்லிய வேதனை தவழ அவன்தன் நண்பனைச் சந்தித்துப் பயணம் சொல்லிவிட்டு வரும் போது அவனுடைய வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

மனதைநெருடும் வேதனைகளை அமுக்கிவிட்டு அவனது பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் சகோதரர்களைப் பார்க்கும் போது அவனுடைய கண்கள் பனித்தன.

அவனைக் கண்டதும் அவனுடைய உடுப்புக்களை மடித்து அடுக்கிக் கொண்டிருந்த அவனுடைய கடைசித் தம்பி "அம்மா அம்மா, அண்ணா வந்தாச்சி." என்று குரல்கொடுத்தான். முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையைச் சீலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டு குசினியில் இருந்து வெளியே வந்த தயாவதி "மகனே, ஏன் இவ்வளவு நேரம்? எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறாங்க... வா சாப்பிடலாம்....." என்று அழைத்தாள்.

"ஓம் அம்மா, குணபால வீட்டுக்குச் சொல்லிக் கொண்டு வரப்போயிருந்தன்... சாப்பிடுவம்...." என்றவன் தம்பி மகிந்தவை அணைத்துக் கொண்டு "என்ன, பசிக்குதா?" என்று கேட்டான். "அம்மா சமைச்சிவைச்சிருக்கிற இறைச்சிமணம் பசியைத் தூண்டுது...."

திலக் சிரித்துக் கொண்டே கைகால் முகம் கழுவிவிட்டு சாப்பிடுவதற்கு வந்து அமர்ந்தான். இரண்டு தங்கைகளும் தம்பியும் அவனுமாய்ச் சாப்பிட அமர்ந்ததும் அவனுடைய தாய் தயாவதி பரிமாறத் தொடங்கினாள்.

ஏதோ யோசனையோடு சாப்பாட்டைப்பிசைந்து கொண்டிருந்த அவனைப் பார்த்து "என்ன மகனே யோசிக்கிறாய், நல்லாச் சாப்பிடு. அங்க போனால் வீட்டுச் சாப்பாட்டை நினைச்சுக் கவலைப்படுவாய்" என்றாள் தயாவதி.

"குணபால வீட்டில சிற்றுண்டியெல்லாம் சாப்பிட்டதால பசிக்கல்ல." என்று தாயைச் சமாதானப்படுத்தியவன் எதுவுமே பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் தங்கைகளைப் பார்த்தான்.

'அவர்கள் மனதில் என்னென்ன எண்ணங்களோ, எல்லாம் என்னைப் பற்றியதாய் இருக்கலாம். என்ன செய்ய எனக்கும் இவர்களைப் பிரிய மனமில்லைத்தான். ஒண்டாய் ஒரு வீட்டில இருந்து, ஒருமித்துச் சாப்பிட்டு, நிலாமுற்றத்தில் கதைச்சிருந்து......' அவன் பொங்கிவந்த பெருமூச்சை உள்ளுக்குள்ளேயே அமுக்கிக் கொண்டு கையைக் கழுவி விட்டு எழுந்தான்.

மணி ஒன்று பத்து. இரண்டு மணிக்கு அவன் போக வேண்டிய பஸ் வந்து விடும். இனித் துரிதமாகப் புறப்பட்டாக வேண்டும்.

தம்பி மடித்து வைத்திருந்த உடுப்புக்களை எடுத்துப் பயணப் பையினுள் திணித்துக் கொண்டான். தயாவதி நாலைந்து சிற்றுண்டிப் பார்சல்களைக் கொண்டு வந்து வைத்தாள். "என்னத்துக்கம்மா இதெல்லாம்?" என்று செல்லமாகக் கடிந்து கொண்டான் அவன்.

"அங்க எப்பிடி எப்பிடிச் சாப்பாடு கிடைக்குமோ, என்னால செய்ய முடிஞ்சது இவ்வளவுதான். கொண்டு போய் நண்பர்களுக்கும் குடுத்துச் சாப்பிடு" இதைச் சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது. தாயை நிமிர்ந்து பார்த்தால் எங்கே அவள் அழுது விடுவாளோ என்ற பயத்தில் அவன் உடை மாற்றுவதற்காக அடுத்த அறையினுட் சென்றான்.

அவன் பின்னாலேயே வந்த அவனுடைய தாய் "மகனே, திலக்...." என்று அழைத்தாள். அவள் குரல் ரகசியம் பேசுவது போல ஒலித்தது. "என்ன அம்மா?" என்று கேட்டான். புத்தளப் பகுதியிலிருந்து இடமாற்றம் பெற்று மட்டக்களப்புக்குச் செல்லும் இராணுவ வீரன் அவன். புதிய இடத்தின் நிலைமை எப்படி இருக்குமோ, அங்கு என்னென்ன துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருக்குமோ என்று அந்தத் தாய் உள்ளம் தவிக்கும் தவிப்பை அவனால் புரிந்துகொள்ள

முடிந்தது.

"சொல்லுங்க அம்மா" என்றான் அவன். "இரவு நான் சொன்னதெல்லாம் ஞாபகத்தில் இருக்கட்டும். ஆரோடையும் கடுமையாக நடந்துகொள்ள வேணாம். தமிழர்களும், எங்கட சகோதரங்கள் தான். அப்பாவி மக்களத்துன்புறுத்தினால் ஆண்டவன் எங்கள மன்னிக்க மாட்டார். அந்தப் போட்டோவும் கவரும் கவனமாக இருக்கட்டும். தொலைச்சிப் போட வேணாம். அது ரெண்டும் தான் எங்களுக்கு இருக்கிற ஆதாரம்".

அவன் தாயை நேருக்கு நேராகப் பார்த்தான். அந்த விழிகளில் தெரிந்த கருணையும் ஏக்கமும் அவனைத் திகைப்பில் ஆழ்த்தின. பதில் பேசமுடியாத துயரம் தொண்டையை அடைத்தது. குனிந்து அவள் பாதங்களைத் தொட்டு வணங்கியவன் நேரத்தைப் பார்த்தான். இரண்டு மணிக்குப் பத்தே நிமிடங்கள் இருந்தன. பையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். தம்பியும் தங்கைகளும் கலங்கிய விழிகளோடு நின்றனர். சைகை மூலமே அவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு வீதிக்கு வந்தான்.

"அண்ணா, மறக்காமல் கடிதம் போடுங்க......" தம்பி மகிந்தவின் குரல் காற்றோடு கலந்து வந்தது.

குருநாகலில் இருந்து மட்டக்களப்பை நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஜன்னலோர இருக்கையொன்றில் வசதியாக அமர்ந்து கொண்டான் திலக். அந்தப் பிரயாணம் ஏனைய பிரயாணங்களைப் போல உற்சாகத்தையோ, மகிழ்ச்சியையோ உண்டாக்கவில்லை அவனிடம்.

ஆசிரியராக இருந்து இறந்து போன தந்தை அவனுடைய குடும்பத்துக்கென்று எதையும் விட்டுச் செல்லவில்லை. சின்னஞ்சிறிய ஒரு வீடு, திருமணத்துக்குத் தயாராய் மலர்ந்து நிற்கும் இரண்டு தங்கைகள், பன்னிரண்டு வயது நிரம்பிய தம்பி, இவர்களுக்கெல்லாம் அன்பு நிழலைத்தரும் தாய்...... இத்தனை பேருக்கும் பொறுப்பாளியாய் விடப்பட்ட பதினெட்டு வயது நிரம்பிய இளைஞனான திலக் செய்வதறியாது தவித்த வேளையில்

இராணுவத்துக்கு ஆட் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரும் செய்தியை நண்பர்கள் மூலமாக அறிந்தான்.

தாயின் மறுப்பையும் பொருட்படுத்தாமல் இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று நான்கு வருடங்கள் சேவையையும் முடித்திருந்தான்.

அவன் அதுவரையில் மட்டக்களப்புக்கு ஒருபோதும் சென்றதில்லை. ஆனால் சிறுவனாக இருக்கும் போது அவனுடைய தந்தை அவனுக்கு மட்டக்களப்பைப் பற்றி நிறையவே சொல்லியிருந்தார்.

விருந்தினரை அன்பாக வரவேற்று உபசரிக்கும் மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பல், பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்று எல்லாமதத்தவர்களையும் அரவணைத்து வாழும் இந்துக்களின் பெருந்தன்மை, மீன்களின் இசை கேட்கும் மட்டக்களப்பு வாவி, அங்கு தாராளமாகக் கிடைக்கும் இறால், நண்டு, இரவிரவாக ஆடப்படும் நாட்டுக்கூத்து, மாமாங்கப் பிள்ளையார் கோயில் திருவிழா என்று எல்லாவற்றைப் பற்றியும் கதைகதையாகச் சொல்வார்.

“மகனே, ஐந்து வருசங்கள் நான் மட்டக்களப்பில் எந்த வேற்றுமையும் இல்லாமல் அவர்களில் ஒருவனாக வாழ்ந்தேன்.....” என்று கூறும் போது அவருடைய முகம் இறுகி, கண்கள் கனவில் ஆழ்ந்து நீரில் தத்தளிப்பதை அவன் பார்த்திருக்கிறான். ஆனால் ஏன் அப்படி ஒரு உணர்ச்சிக்கு ஆளாகிப் போகிறார் என்று அவன் அலட்டிக் கொண்டதில்லை.

அவனுடைய தந்தை ஓர் இலட்சியவாதி. “மதம், மொழி, இனம் என்பதெல்லாம் மனித மனங்களைப் பிரிக்க முடியாது. மனிதர்கள் எல்லோரும் ஒரு கொடியில் பூத்த பல மலர்களைப் போல. ஒவ்வொரு இனத்தவர்களும் ஒவ்வொரு வழியில் நடந்தாலும் கடைசியில் எல்லோரும் போய்ச் சேர்வது கடவுளிடம்தான்” என்று அடிக்கடி சொல்வார்.

மட்டக்களப்பில் ஐந்து வருடங்கள் சேவை புரிந்தவர் என்பது மட்டும் அவனுக்குத் தெரியும். அதனால் அவர் பழகிய தமிழ் மக்கள் மீது அளவிடமுடியாத அன்பு

கொண்டவர் என்று அவன் நினைப்பான்.

ஆனால் அம்மா நேற்றிரவு அவனைத் தனியாக அழைத்து அவனிடம் சொன்ன அந்தச் செய்தி....... எத்தனையோ வருடங்கள் மனதில் பொத்திப் பொத்தி வைத்துக் காத்த அந்த இரகசியம்..... அவனது தந்தைக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே பிரிக்க முடியாதவாறு ஊறிவிட்ட பந்தத்தை அல்லவா எடுத்துக் காட்டியிருக்கிறது.

அம்மா சொன்ன அந்தச் செய்தி சற்று நேரம் அவனை நிலைகுலைய வைத்தது நிஜம். இந்தச் சோகத்தைத் தாங்கிச் சுமந்ததால் தான் அப்பா விரைவாகவே தன்னுடைய வாழ்வை முடித்துக் கொண்டாரோ, அந்தச் சோகம் தான் அவரை அழுத்தி அழுத்திக் கொன்றதோ?

அவன் தன்னுடைய பர்சைத் திறந்து அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தான். “எங்களுக்கிருக்கிற ஒரேயொரு ஆதாரம்” என்று சொல்லி இரவு அம்மா எடுத்துத் தந்த புகைப்படம். அப்பாவின் டயறிக்குள் மிகவும் பத்திரமாய் அந்தப் படமும் ஒட்டப்பட்ட கவர் ஒன்றும் வைக்கப்பட்டிருந்ததாக அம்மா சொன்னாள். அந்தக் கவரில் எழுதப்பட்டிருந்த தமிழ் முகவரியை அவனால் வாசிக்க முடியவில்லை.

நெற்றி நிறைந்த பொட்டும் முகம் நிறைந்த புன்னகையுமாய் இருபத்திஆறு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் பூவாய் மலர்ந்திருந்தாள்.

‘இந்த அழகுக்கு அப்பா அடிமையாகிப் போனதில் வியப்பில்லை’ என்று எண்ணினான் அவன். ஆனால் அந்த அழகை விட்டுப்பிரிந்து வாழ முடிந்த அவருடைய மன உறுதியையும் அவனால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

இந்த அழகை அப்பா விட்டுவிட்டு வந்து சரியாக இருபத்துநான்கு வருடங்களாகிவிட்டன. இப்போ இவள் உயிருடன் இருந்தால் ஐம்பதைத் தாண்டியிருக்கலாம். அப்படியென்றால் அவளை அடையாளம் காண முடியுமோ என்னவோ?

திலக் பெருமூச்செறிந்தான். அவன் அருகிலிருந்த நண்பன் படத்தைப் பார்த்துவிட்டு "என்ன, தமிழ்க்குட்டியல்லவா?" என்று கிண்டலாய்க் கேட்டான். அவன் படத்தைப் பர்சுக்குள் பத்திரப்படுத்திவிட்டு நண்பனைப் பார்த்துச் சிரித்தான்.

"மகனே, அப்பா அங்க படிப்பிக்கிற காலத்தில இந்தப் பெண் வீட்டிலதான் இருந்தாராம். ஏழைப் பெண், அவள் தாய் இவரைப் போல அயலூரில் இருந்து வந்து வேலை செய்யிற ஆக்களுக்குச் சாப்பாடு குடுக்கிறவள். அப்பா இந்தப் பெண்ணை விரும்பி தாய்தகப்பனுக்குத் தெரியாம கல்யாணம் செய்தார். எழுபத்தைஞ்சாம் ஆண்டு ஒரு மகன் பிறந்தான்..... ரெண்டு இனங்களுக்கிடையிலயும் பிரச்சினை வந்த நேரம் அப்பாவ அங்கவிட்டு வைக்கப்பயந்து சொந்த ஊருக்கு அவருடைய அப்பா மாற்றி எடுத்தார். பிறகு அப்பாவால மட்டக்களப்புக்குப் போக முடியல்ல..." இவ்வளவையும் சொல்லிவிட்டு அம்மா பெருமூச்செறிந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

திலக் பேசுவதற்கு வார்த்தைகள் இன்றி ஊமையாய் இருந்தான். அவள் தொடர்ந்தாள்.

"அப்பாவுக்கு அவர் தாய் தகப்பன் கல்யாணம் பேசிற நேரத்தில தான் நடந்ததையெல்லாம் சொல்லி அந்தப் பெண்ணைத் தன்னோட அழைக்கிறதுக்குச் சம்மதம் கேட்டார். ஆனால் உன்ர பாட்டன் பொல்லாதவர். கண்டிப்பாக மறுத்து எனக்குக் கட்டிவைச்சார். அப்ப எனக்கு ஒண்டும் தெரியாது. அவர் அவளையும் மகனையும் பிரிஞ்ச கவலையில வாடினார். என்னிட்ட நடந்ததையெல்லாம் சொன்னார். எனக்குப் பாவமாக இருந்தது. அவளோட தொடர்பு கொள்ள முயன்றோம். இனப்பிரச்சினை தடையாக இருந்தது. அவளைப்பற்றி எந்தத் தகவலும் அறியமுடியல்ல..... அவள்ற பேர் மனோன்மணி.. மனோஎண்டு அப்பா கூப்பிடுவாராம். மகன் கௌதமன். அப்பாதான் பதிவு வைச்சவர். அவர் சாகிறதுக்கு ரெண்டு நாளைக்கு முதல் இந்தப் படத்தையும் கவரையும் என்னிட்டத்தந்து எப்பிடியாவது அந்தக் கவரை மகனிடம் சேர்க்கச் சொன்னார்......."

அம்மா சொல்லச் சொல்ல அவனுக்குப் புல்லரித்தது. கௌதமன்......... அவனுடைய சகோதரன். தமிழ்த் தாய்க்கு பிறந்து, தமிழ் பேசி, தமிழ் படித்து.......... தந்தை முகம் காணாமல்..........

மனித வாழ்வில் விதி எப்படியெல்லாம் விளையாடுகிறது...... அவன் முகமே தெரியாத தனது சகோதரனுக்காக இரங்கினான்.

யுத்தம்..... தேடல்கள், சுற்றிவளைப்புக்கள்.... இடப்பெயர்வுகள்....... இந்தச் சுழலில் அகப்பட்டு அவன் எந்த மூலையில் ஒதுங்கினானோ? என்னென்ன துன்பங்களை அனுபவித்தானோ? ஒரே வித்தின் இரண்டு முளைகள்.. இரண்டும் இருவேறு திசைகளில் ஒன்றையொன்று அறியாமல்..... வைரம் பாய்ந்த அந்தப் போர் வீரனின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் கசிந்தன.

அவன் மட்டக்களப்புக்கு மாற்றலாகி வந்து ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. இப்போது அவன் வாழைச் சேனை முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தான். அதுதான் அவன் தந்தை படிப்பித்த ஊர்.

அவனுடைய தந்தை கடமை புரிந்த பாடசாலையைப் பார்க்கும் போதெல்லாம் 'இது அப்பாவின் காலடிபட்ட இடம்.... அப்பாவின் குரல் ஒலித்த இடம்' என்று நெகிழ்ந்து போவான்.

ஐம்பது வயதைத் தாண்டிய பெண்களைக் கண்டால் 'அந்தப் பெண்ணாக இருக்குமோ' என்று படத்திலிருக்கும் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பான். இருபத்தைந்து இருபத்தாறு வயது இளைஞர்களைக் கண்டால் 'அவனாக இருக்குமோ?' என்று அடையாள அட்டையை வாங்கி கே.கௌதமன் என்ற பெயரைத் தேடி ஏமாந்து போவான்.

யாரிடமாவது விசாரித்து அறியலாம் என்று அவனுடைய ஆவல் அவனையும் மீறி எழும். ஆனால் அப்படி விசாரிப்பது அவனுக்கும் தனக்கும் சில சங்கடங்களை உண்டாக்கலாம் என்று அறிவு அந்த ஆவலை அடக்கிவிடும்.

ஒருதடவை தமிழ்தெரிந்த நண்பன் ஒருவனிடம் அப்பா கொடுத்த அந்தக் கவரில் உள்ளமுகவரியைக் கேட்டு அறிந்து கொண்டான். அந்த முகவரியில் குறிப்பிட்டிருந்த வீதியால் ரோந்து செல்லும் போது அந்த வீட்டைக் கண்டு பிடித்து அங்கு இருப்பவர்களை விசாரித்ததில் மனோன்மணி என்றோ கௌதமன் என்றோ யாரும் அங்கு இருப்பதாக அறியமுடியவில்லை.

"ஏதாவது தகவல் கிடைத்ததா மகனே?" என்று கேட்டு அவனது தாய் கடிதம் எழுதியிருந்தாள். "இன்னும் முயன்று கொண்டிருக்கிறேன் அம்மா. எனது உத்தியோகக் கடமை போல அதுவும் ஒரு கடமைதான். எப்படியும் என் அண்ணனைக் கண்டுபிடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்று பதில் எழுதினான் அவன்.

தாயைச் சமாதானப் படுத்துவதற்காக அப்படி எழுதிய போதும் அவனுடைய மனிதில் 'இந்தப் பணியை நான் செய்து முடிப்பேனா?' என்ற சந்தேகம் தலைதூக்காமல் இல்லை.

நாட்டில் நடைபெறும் யுத்தம் காரணமாகவும் ஷெல்வீச்சுக்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், காணாமற் போதல் காரணமாகவும் மக்கள் சொந்த இடங்களை விட்டு அகதிமுகாம்கள், உறவினர்கள் வீடுகள் என்று திசைமாறி வாழ்வதால் நிரந்தரமான முகவரிகளைப் பெரும் பாலான மக்கள் இழந்திருந்தார்கள்.

தன்னுடைய முகாமில் சகவீரர்கள் பாட்டும் கூத்துமாயிருக்கையில் அவன் ஒரு மூலையில் போயிருந்து அந்தப் புகைப்படத்தை எடுத்துப் பார்ப்பான். தந்தையின் சாயலிலும் அந்தப் படத்தில் இருக்கும் பெண்ணின் சாயலிலும் இருபத்து ஐந்து வயது இளைஞன் ஒருவனின் முகத்தைக் கற்பனை செய்து பார்ப்பான்.

தந்தை கொடுத்ததாகச் சொல்லி அவனுடைய தாய் பாதுகாத்து வைத்திருந்து கொடுத்த அந்தக் கவரை எடுத்து அதனுள் என்ன இருக்கலாம் என்று தடவிப் பார்ப்பான். அவன் நினைத்தால் அதனைப் பிரித்துப் பார்த்திருக்கலாம்.

ஆனால் இறந்து போன தனது தந்தையின் ஆத்மாவே அந்தக் கவருக்குள் இருப்பதாக அந்தப்போர்வீரனின் இரும்பு மனதுக்குள் இருந்து எதுவோ ஒன்று கூறும்.

உண்மையில் அவன் துப்பாக்கி தூக்குகின்ற, இரக்கத்தைக் கொன்றுவிட்ட ஒரு போர் வீரனாக இருந்த போதும் அவனது நெஞ்சுக்குள் ஈரம் கசிந்து கொண்டே இருந்தது.

ஆசிரியராக இருந்த அவனுடைய தந்தை புத்தபகவானின் கருணையையும் போதனைகளையும் உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையையும் சேர்த்தே ஊட்டி வந்தததால் அவன் மனிதாபிமானமுள்ள ஒருவனாய்த்தான் வளர்ந்தான். ஆனால் தந்தை இறந்துபோனபின் தனது குடும்பம் நிர்க்கதியாய் நின்றபோது அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற அவன் எங்கெங்கெல்லாமோ வேலை தேடினான். ஏமாற்றத்தில் சோர்ந்திருந்த போதுதான் இராணுவத்திற் சேர்ந்தால் நிறையச் சம்பளம் பெறலாம் என்ற நண்பர்களின் வார்த்தைகள் அவனைத் திசைதிருப்பி விட்டன.

தாயும் தங்கைகளும் தம்பியும் தந்தையின் பென்சன் பணத்தில் வாழமுடியாமற் தவிக்கையில் அவனிடம் ஏற்பட்ட விரக்தி அவனுடைய மனித நேயத்தைக் கொன்று புதைத்தது. கடுமையான இராணுவப் பயிற்சியின் விளைவாய் அவன் இறுகிய மனங்கொண்டவனாய் மாறிய போதும் அவ்வவ்போது அந்த இறுக்கம் தளர்ந்து அவன் விழிகளை நனைப்பதும் உண்டு.

“துடிதுடிக்க மனித உடல்களை வீழ்த்தவும் அவற்றின் அவலக்குரல்களைக் கேட்கவுமா அப்பா என்னைப் படிக்கவைத்தார்?” என்று எண்ணும் போது அவன் தொண்டைக்குழிக்குள் எதுவோ வந்து அடைக்கும்.

“நான் ஆரோட போராடுறன். என் நாட்டுமக்களோட அல்லவா? பேசுற மொழியால வேறுபட்டாலும் தங்கட உரிமையள்க் கேட்டுப் போராடுற என்ர சகோதரங்களையல்லவா என்ர துப்பாக்கி ரவைகள் துளைச்செடுக்குது........” என்று எண்ணிச் சோர்ந்து போவான்.

ஆனால் அதே கணத்திலேயே அவன் தன்னுடைய மேலதிகாரிகளின் கட்டளைக்குப் பணிந்து போக வேண்டியிருக்கும். வலிந்து வலிந்து தன்னுள்ளே பூத்திருக்கும் பசுஞ்சோலையை மிதித்துத் துவம்சம் பண்ணிவிட்டு அங்கே ஒரு பாறையின் இறுக்கத்தை உருவாக்கிக் கொள்வான்.

அன்றும் அப்படித்தான். ஊரில் எல்லைப் புறமாக நடந்த அசம்பாவிதம் காரணமாக இருதரப்பிற்கும் இடையே ஒரு மணிநேரத்துக்கும் மேலாய் மோதல் நடந்தது.

சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள், ஷெல்வீச்சுக்கள், மரண ஓலங்கள் அந்தப் பிரதேசத்தைப் பீதியில் உறையவைத்தன. அந்தப் பயங்கரம் மெல்ல மெல்ல ஓய்ந்து போகையில் உலகை முற்றாக இருள் மூடியிருந்தது.

மேற்குவானத்தில் பிறைநிலவு வெளியே வர அஞ்சி மேகங்களுக்குள் ஒழிந்து கொண்டிருந்தது. சனநடமாட்டமற்று அப்பிரதேசமே வெறிச்சோடிப் போயிருந்தது.

ஏராளமான இளைஞர்கள் சுற்றிவளைத்துப் பிடித்து வரப்பட்டிருந்தார்கள். தாங்கள் எந்த இயக்கங்களோடும் தொடர்பில்லாதவர்கள், படித்துக் கொண்டோ, தொழில் செய்துகொண்டோ இயல்பான வாழ்க்கை நடத்துபவர்கள் என்பதை வாய்திறந்து சொல்லும் திறனற்று அவர்கள் பலிக்கடாக்களாகப் பிடித்து வந்து அடைக்கப்பட்டிருந்தார்கள்.

பொழுது விடியுமுன்பாகவே அந்த இராணுவ முகாமுக்கு முன்னால் பெண்களின் கூக்குரல் கேட்கத் தொடங்கியது. தங்கள் கணவன்மாரை, அல்லது பிள்ளைகளை, சகோதரர்களை மீட்பதற்காக வந்து அழுது கொண்டிருந்த பெண்களைக் கண்ட திலக் தன்தாயை நினைத்துக் கொண்டான்.

"கவனம் மகனே, பத்திரமாக நீ திரும்பிவரவேணும்..." என்று ஆயிரம் தடவை சொல்லிச் சொல்லி அனுப்பிய தன் தாயின் அதே பாசமும் ஏக்கங்களும் தானே இவர்களிடமும் இருக்கும் என எண்ணினான்.

அவனுடைய முகாம் பொறுப்பதிகாரியிடம், பிடிபட்ட தங்கள் உறவினர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களை விடுவிக்கும் படி கதறிக் கொண்டிருந்தார்கள் அந்தப் பெண்கள். அந்தக் கதறலிடையே கௌதமன் என்ற பெயர் உச்சரிக்கப்பட்டதைக் கேட்டு திலக் அதிர்ந்தான்.

அவசரமாக அந்தப் பெண்களின் கூட்டத்தருகே சென்று கௌதமன் என்ற பெயரை உச்சரிக்கும் பெண்ணை அடையாளம் கண்டு கொண்டான். சற்றே வயதாகிப் போனாலும் இன்னும் நெற்றியில் குங்குமத்தோடு அதே தசைப்பிடிப்பான கன்னங்களும் இடது கன்னத்தில் காதோரமாய் படத்தில் காணப்பட்ட சின்னஞ்சிறு மச்சமுமாய்.... அவன் அவசர அவசரமாக அந்தப் புகைப்படத்தை எடுத்து அவள் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தான். சந்தேகமேயில்லை. அவளேதான்.

சாதனை ஒன்றைப் படைத்துவிட்ட வெற்றிக்களிப்பில் பிடித்துவரப்பட்டவர்கள் அடைபட்டிருந்த அறைகளுக்குள் அவன் ஓடி ஓடித் தேடினான். கௌதமன் என்ற பெயரோடு எவரும் இல்லை..... அவனுள்ளே சந்தேகம் துளிர்த்தது. தனக்குத் தெரிந்த அரைகுறைத்தமிழில் "உங்களோட வந்த கௌதமன் எங்க?" என்று கேட்டான். அவனுக்குப் பதில் சொல்வதற்கு எவரிடத்தும் தைரியம் இல்லை.

"கௌதமன்.. கௌதமன்.. நீ எங்க?" என்று வெறிபிடித்தவன் போல அவன் கத்தியதைக் கேட்டு ஒரு இளைஞன் தயங்கித் தயங்கி அவனருகில் வந்தான்.

"கௌதமனையும் இன்னும் ரெண்டு பேரையும் இரவே அடிச்சுக் கொண்டு போட்டாங்க........"

அவனுடைய மண்டை ஓட்டுக்குள் ஷெல் வெடித்தது. ஆயினும் நம்பிகையற்று "கருணாசேன கௌதமன்?" என்று கேட்டான். அவனைச் சுற்றி நின்ற இளைஞர்கள் வியப்போடு "ஓம் அவன்தான்...." என்றார்கள். அவன் அதிர்ந்தான். நடை தளர்ந்து தன்னுடைய இருப்பிடம் போய் அம்மா கொடுத்த அந்தக் கவரை எடுத்தவன் அதனைக் கொண்டு போய் அந்தப் பெண்ணிடம் கொடுக்கலாமா? என்று யோசித்தான்.

மறுகணமே, நெற்றி நிறைந்த குங்குமத்தோடு தன்னுடைய கணவர் இறந்து போன செய்தி தெரியாது, என்றோ ஒரு நாள்அவர் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருப்பவளின் நம்பிக்கை அதனால் கெட்டு விடுவதோடு மகன் இறந்த செய்தியையும் தன்வாயாலேயே சொல்ல வேண்டிவரும் என்ற எச்சரிக்கை உணர்வும் அவனைத் தடுத்தது.

அந்தக் கவருக்குள் அப்பா தன்மகனுக்காக என்ன வைத்திருப்பார் என்று அறிய இப்போது விரும்பினான்.

“மகனே கௌதமன்.... என்னை மன்னித்துவிடு. நான் உனக்கும் உன்தாய்க்கும் செய்தது மன்னிக்க முடியாத துரோகம்... நீயும் உன்தாயும் என்னென்ன துன்பங்களை அனுபவித்திருப்பீர்கள் என்பதை நான் உணர்வேன். இனம் என்ற பெருஞ்சுவர் உன்னையும் என்னையும் பிரித்தது. என்மகன் திலக் என்றோ ஒருநாள் இந்தச் சுவரை உடைத்து உன்னோடு சேர்வான். நான் செய்த துரோகத்துக்குப் பரிகாரம் செய்வான். அப்போ நீயும் அவனும் அண்ணன் தம்பியாய்க் கைகுலுக்குவீர்கள்......”

மேலே படிக்க அவனால் முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழமட்டுமே முடிந்தது.

**- 2000**

# நினைப்பதெல்லாம்........

"இஞ்சாருங்க, புள்ளையிர மாறுதல் விசயமா இண்டைக்கெண்டாலும் போய்ப் பாக்கமாட்டயளா? நாளைக்கு நாளைக்கெண்டு எத்தின நாளாச் சொல்லி வாறயள்? அவளும் தினம் தினம் துறயக் கடந்து நாய் படாப்பாடுபடுறாள்.... நீங்களும் உங்கட பாடும்........"

ஒரு பாட்டம் ஒப்பாரி வைத்து ஓய்ந்த மனைவியின் வார்த்தைகள் மயில்வாகனத்தாரைச் சாட்டை போலத்தாக்கின.

"அவள் சொல்லுறதும் சரிதான். பாவம் மாலதி, நாலுவருசமாய் ஆத்தைக் கடந்து போய் படுவான்கரையில படிப்பிக்கிறாள். அங்கால போய் வாறவள இந்தச் சீருடைக்காரனுகள் கேக்கிற கேள்வியளும் சரியில்ல. எப்பிடியெண்டாலும் அவளுக்கு மாற்றம் எடுத்துக் குடுக்கத்தான் வேணும்." அவர் தனக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வந்தார்.

இதற்கு முன்பும் இரண்டொரு தடவைகள் மகளின் இடமாற்ற விடயமாய் சில அரசியல்வாதிகளின் காலைப் பிடித்திருக்கிறார் மயில்வாகனத்தார். அவர் தன்னுடைய வேண்டுகோளைச் சொல்லும் போதெல்லாம் "உங்களுக்குச் செய்யாம வேற ஆருக்குச் செய்யப் போறம் மாஸ்டர் நீங்க போங்க, கல்விப் பணிப்பாளரோட கதைச்சு நான் இதக் கட்டாயம் செய்துதாறன்" என்று அவருக்காகவே தாங்கள் அரசியலுக்குப் போனது போல கதையளக்கும் அவர்களின் நடிப்பில் மயில்வாகனத்தார் மயங்கியதுண்டு.

ஆனால், அவர்களுடைய வார்த்தைகள் எல்லாம் வெறும் உதட்டளவில் பிறக்கின்ற வார்த்தைகள்தாம் என்பதையும் அந்த வார்த்தைகளிற் தான் ஏமாந்து விட்டதையும் உணர்ந்த பின் இந்த இடமாற்றம் கேட்கும் படலத்தை மூட்டை கட்டி வைத்திருந்தார் அந்த ஓய்வு பெற்ற அதிபர்.

ஆனால் இப்போ தனது இருபத்தெட்டு வயது மகளின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட அவருடைய மனைவியின் நச்சரிப்பு அவரை மீண்டும் அந்தப் படலத்தைத் தொடங்கும்படி தூண்டி விட்டது.

"எங்கட காலத்தில வாத்தி வேலையெண்டா எவ்வளவு சந்தோசமான தொழிலாக இருந்தது. இப்ப படிப்பிக்கிறத விட எழுத்து வேலை செய்யிற நேரந்தான் கூட, புள்ளையளும் என்ன? எப்ப பார்த்தாலும் ஒப்படையெண்டு வெட்டிறதும் ஒட்டுறதும்......... படிக்கிறதையே காணல்ல...."

அவர் தன்னுடைய சாய்வு நாற்காலியில் இருந்து எழுந்து கொண்டார். மனைவி தேநீர்க் கோப்பையை அவரிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு "இண்டைக்கு கல்விக் கந்தோருக்குப் போய்க் கதைச்சுப் பார்க்கலாந்தானே? குமர்ப்புள்ளையில தகப்பன்மாருக்கும் கரிசனையிரிக்கோணும். அங்காலயும் மாறிப் போகலாம் எண்டு சொல்லிற்றாங்களாம். வந்திரிக்கிற புது டி.ஈ இந்தத் தையில இடமாற்றம் செய்வாராமெண்டு மாலதி சொன்னாள்" என்று நீண்ட விளக்கம் கொடுத்து ஓய்ந்தாள்.

"நீ நினைப்பூட்டினது நல்லதாய் போயிற்று. இண்டைக்கு டிரக்டரைச் சந்திக்கத்தான் வேணும், அவர் மூதூர்ப்பக்கத்து ஆளாம். ராஜகோபாலாம். ஆரும் என்னிட்டப் படிச்ச பொடியனுகளோ தெரியாது..... எதுக்கும் போய் பார்ப்பம்... நீ அந்தக் குடையை எடுத்துத்தா...."

அவர் எழுந்து முகம் கழுவி, உடை மாற்றிப் புறப்படத் தயாரானார். ஓய்வு பெற்றாலும் முன்னாள் அதிபர் என்ற மிடுக்கு அவரிடம் இன்னமும் ஒட்டிக் கொண்டுதான் இருந்தது.

கல்விப்பணிமனை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. மயில்வாகனத்தர் அடிக்கடி வந்து பழக்கப்பட்ட இடம்தான். பொதுவாக எல்லா அரசாங்க அலுவலகங்களும் காலையில் சுறுசுறுப்பாகத்தான் இயங்கும். பகலுணவுக்குப் பின் ஏதாவது அலுவல்களை முடிக்கலாம் என்று வந்தால் பெரும்பாலும் ஊழியர்கள் இல்லாத

இருக்கைகளைத்தான் தரிசிக்க வேண்டியிருக்கும் என்பதை அவர் நன்கறிவார்.

மயில்வாகனத்தார் கல்விப் பணிப்பாளரின் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவரைப் போலவே அலுவலாக வந்த பலர் பணிப்பாளரின் அறையின் முன்னால் கால்கடுக்க நின்று கொண்டிருந்தார்கள். உள்ளேயிருந்து அழைப்பு மணி ஒலிப்பதும் பலர் பைல்களுடன் உள்ளே போவதும் வருவதும் தொலைபேசி அலறுவதும் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மயில்வாகனத்தார் கையில் கட்டியிருந்த தனது பழைய கடிகாரத்தில் நேரம் பார்த்தார். மணி பத்தைத் தாண்டியிருந்தது.

"என்ன மாஸ்டர் திடீரெண்டு இந்தப் பக்கம்? பென்சன்ல ஏதும் பிரச்சினையா?" மிக அருகில் கேட்ட குரல் அவரை ஆகர்சித்தது. "ஓ, நடேசன்? ஒண்டுமில்லடாப்பா...... மகள்ற இடமாற்றம் பற்றிக் கதைக்கலாமெண்டு வந்தன். நீ இப்ப எங்க படிப்பிக்கிறாய்?" பேச்சுத்துணைக்கு ஆள் கிடைத்த திருப்தி அவருக்கு.

நடேசன் ஒரு காலத்தில் மூதூர்ப் பகுதிப் பாடசாலையொன்றில் அவருடன் படிப்பித்தவன். இப்போ மட்டக்களப்புக்கு மாற்றலாகி வந்திருந்தான்.

"நான் இப்ப நாவலடியில படிப்பிக்கிறன் மாஸ்டர். உங்கட மகள் அங்கால தானே? டீ.ஈ.யோட கதைச்சுப் பாருங்க. கெதியில ஒரு ஒரு இடமாற்றம் நடக்கப்போகுதாம் எண்டு கதை அடிபடுது.... மெய்தான், இப்ப புதுசா வந்திருக்கிற டீ.ஈ ஆரெண்டு தெரியுமா மாஸ்டர்?"

மயில்வாகனத்தார் யோசித்தார். 'ஆரெண்டு தெரியல்ல. மூதூர்ப் பக்கத்து ஆளாமெண்டு அறிஞ்சன். ராஜகோபால்ாம். உனக்குத் தெரியுமா?"

நடேசன் அவரைப் பார்த்துச் சிரித்தான். அவரை ஏளனம் செய்வது போலிருந்தது அந்தச் சிரிப்பு. "என்ன சிரிக்கிறாய்?" என்று கேட்டார் அவர். "நம்மட பள்ளியில

சமூகக்கல்வி படிப்பிச்ச ராஜகோபால மறந்து போயிற்றீங்களா மாஸ்டர்?" மயில்வாகனத்தார் அதிர்ந்து போனார்.

"அவ... அவன்..... அவரா இந்த டிரக்டர்?" "ஓம் மாஸ்டர். அவரேதான்". "அவரெப்பிடி இஞ்ச....?" மயில்வாகனத்தாரின் வார்த்தைகள் தடுமாறின.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எண்டு நீங்களே படிப்பிக்கல்லையா மாஸ்டர்?" "ஓம்... ஓம்...... மெய்தான்" என்றார் மயில்வாகனம் மாஸ்டர். அவருடைய மனதின் அடித்தளத்திலிருந்து நினைவுகள் மெல்ல மெல்ல உருப்பெறத் தொடங்கின.

பாடசாலை நிர்வாகத்தில் கண்மூடித்தனமான கண்டிப்பும் சர்வாதிகாரத்தனமும் கொண்டிருந்தவர் மயில்வாகனம் அதிபர். தன்னுடைய நிர்வாக ரீதியான கட்டளைகளை ஆசிரியர்கள் அணுவளவும் மீறக் கூடாதென்பதில் கருத்தாக இருந்தவர் அவர். யாராவது ஒரு ஆசிரியர் சின்னத் தவறு செய்தாலும் போதும். மாணவர்கள் முன்னால் அந்தத் தவறை எடுத்துக் கூறி தவறு செய்த ஆசிரியரை அவமானப்படுத்துவதில் ஒரு குரூரமான திருப்தி காணும் பழக்கம் அவரிடம் இருந்தது.

எல்லா ஆசிரியர்களும் மாதாந்தப் பரீட்சையை கட்டாயமாக வைக்க வேண்டும் என்பது மயில்வாகனத்தாரின் கட்டளைகளில் ஒன்று. ஆசிரியர்களும் அவருடைய கோபத்துக்கு ஆளாகிவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு எப்படியாவது மாதம் தவறாமல் பரீட்சை வைத்து விடுவதுண்டு. வைப்பது மட்டுமல்லாமல் புள்ளிகளையும் அவரிடம் சமர்ப்பித்து கையெழுத்தையும் பெற்று விடுவார்கள்.

ராஜகோபால் சமூகக்கல்வி படிப்பிக்கும் பட்டதாரி ஆசிரியன். திருமணமாகாத இளைஞன். கற்பித்தலில் குறைகாண இடம் வைக்காதவன். ஆனாலும் அங்கு படிப்பித்துக் கொண்டிருந்த பவானி என்ற இளம் ஆசிரியையுடன் அவன் அடிக்கடி கதைப்பதும் சிரிப்பதும் மயில்வாகனத்தாருக்குப் பிடிக்கவில்லை.

பல தடவை இருவரையும் அழைத்துப் பாடசாலைக்கு அவப்பெயரைத் தேடித்தரும் வகையில் நடக்க வேண்டாம் என எச்சரித்தார்.

ஆனால் அவருடைய எச்சரிக்கை அவர்களைப் பாதித்ததாகத் தெரியவில்லை. இதனால் மயில்வாகனத்தார் தன்னுடைய ஆத்திரத்தைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது.

ராஜகோபாலின் வயோதிபத் தாய் நோய்வாய்ப்பட்டதால் அவன் அடிக்கடி லீவு எடுக்க வேண்டி ஏற்பட்டது. வீட்டில் அவளைக் கவனிப்பதற்கு அவனை விட்டால் வேறு யாருமே இல்லாத நிலையில் அவன் லீவு எடுப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.

இதனால் மேல் வகுப்புக்களுக்குப் படிப்பிப்பதும் மர்தாந்தப் பரீட்சை வைப்பதும் தடைப்பட்டிருந்தது. இருந்த போதும் அவன் மாணவர்கள் மீது கொண்ட அக்கறையினால் பதிற் கடமைக்காக யாரையாவது நியமிக்கலாம் என்று நினைத்து அதிபரிடம் அது பற்றிக் கதைப்பதற்கு வந்திருந்தான். தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் விடுமுறையில் நின்று விட்டு வந்தவனைக் கண்டதும் மயில்வாகனத்தார் அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் உடைப்பெடுத்துப் பாய்ந்தது. அவன் எந்த வகுப்புக்குப் பாடம் எடுத்தானோ அந்த வகுப்பு மாணவர்களின் முன்னால் அவனைப் பொறுப்பில்லாதவன் என்றும் ஒழுக்கங்கெட்டவன் என்றும் கண்டபடி பேசினார். அவனால் அந்த வருடம் பரீட்சை எடுக்கவிருந்த மாணவர்களின் வாழ்க்கையே பாழாய்ப் போய் விட்டதாக குற்றம் சுமத்தினார்.

பொறுத்துப் பொறுத்துப் பொறுமையிழந்த அவன் தன் தாயார் மரணப்படுக்கையில் கிடப்பதையும் தனக்குப் பதிலாகப் படிப்பிப்பதற்கு ஒரு ஆளை ஒழுங்கு பண்ணியிருப்பதையும் சொல்லியும் கூட அவருடைய ஆவேசம் தணியவில்லை. இறுதியில் அவரை எதிர்த்து அவனும் கதைக்க நேரிட்ட போது மயில்வாகனத்தாரின் மனதில் ஆணவம் தலைதூக்கியது.

அதன் பயனாய் கற்பித்தலில், நடத்தையில் ஒழுங்கீனமானவன் என்ற முத்திரை குத்தப்பட்டு அவன் தூர இடத்துக்கு மாற்றப்பட்டான்.

தன்னுடைய அதிகாரத் திமிராலும் அகந்தையாலும் மனிதாபிமானமற்று எந்த ராஜகோபாலை பழிவாங்கினாரோ, அதே ராஜகோபால் இப்போது கல்விப் பணிப்பாளராகி, அவனுடைய தயவை எதிர்பாாக்கும் ஒரு சாதாரணத் தந்தையாகத்தான் மாறிவிட்டிருக்கும் விந்தையை எண்ணி கூனிக்குறுகி நின்றார் மயில்வாகனம்.

"மாஸ்டர் உங்கள டீ.ஈ கூப்பிடுகிறார்." நடேசன் உள்ளேயிருந்து வந்து ஒரு புன்சிரிப்போடு கூறிவிட்டு போனான். அவனுடைய சிரிப்பின் அர்த்தத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உள்ளே போவதா, அல்லது வந்த வழியைப் பார்த்துக் கொண்டு திரும்பிவிடுவதா என்று அவர் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அழைப்பு மணி ஒலித்தது.

திரும்பிப் போவது தோல்வியை ஒப்புக்கொள்வதாக முடியும் என எண்ணிய அவர் வருவது வரட்டும் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

பதவிக்கே உரிய தோற்றப் பொலிவோடு முன்நெற்றியை இரண்டொரு வெள்ளி மயிர்கள் அழகுபடுத்த, அதுவே ஒரு கம்பீரத்தையும் மரியாதை செலுத்த வேண்டும் போன்ற ஒரு தோற்றத்தையும் ஏற்படுத்த அமர்ந்திருந்த அந்தக் கல்விப் பணிப்பாளரைக் கண்டதும் அவர் நடை தளர்ந்தது.

மயில்வாகனத்தாரைக் கண்ட ராஜகோபால் முகம் மலரச் சிரித்து "வாங்க மாஸ்டர், இருங்க....... என்ன இப்படித் தளர்ந்து போயிற்றீங்க" என்று எதுவுமே மனசிலில்லாதது போல குசலம் விசாரிக்க, அவர் இன்னும் கூனிக் குறுகிப் போனார்.

தான் வந்த காரணத்தை எப்படிச் சொல்வதென்ற தடுமாற்றம் வேறு. முள்ளின்மேல் அமர்ந்திருப்பது போல பணிப்பாளரின் எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தாா.

"உங்கட் மகளுடைய இடமாற்றம் பற்றிக் கதைக்கத் தானே வந்தனீங்க சேர்? நடேசன் மாஸ்டர் கொஞ்ச நேரத்திற்கு முதல் சொன்னார். ஜனவரியில இடமாற்றம் செய்ய இருக்கிறம். நான் வசதியான பாடசாலைக்கு அவவப் போடச் சொல்லுறன். அவ அனுப்பின விண்ணப்பம் பார்த்தனான்."

இந்த வார்த்தைகளைக் கேட்டு மயில்வாகனத்தார் திணறிப் போனார். "தம்பி, சேர்......... நீ ....... நீங்க ....."

"ஏன் சேர் இப்படி அவதிப்படுறீங்க? என்னை நீயெண்டே சொல்லலாம், பதவி மாறினாலும் நான் இன்னும் பழைய ராஜகோபால்தான். என் குணம் என்றைக்கும் மாறாது."

இந்த வார்த்தைகள் அவரைச் சாட்டை போலத் தாக்கின. "தம்பி நான் என்ர ஆணவத்தால உங்களுக்குச் செய்த துரோகத்துக்கு என்னை மன்னிச்சிடுங்க தம்பி...."

"சேர் அதெல்லாம் பழைய கதை, விட்டுத் தள்ளுங்க நீங்க அப்படியொரு சம்பவத்தை உருவாக்கியிராவிட்டால் நான் இந்தளவுக்கு உயர்ந்திருக்க ஏலாது. என்ர இந்த உயர்ச்சிக்கு நீங்களும் ஒருவகையில் காரணம் தான்......"

"என்ன சொல்லுறீங்க நான் காரணமா?" மயில்வாகனத்தார் புரிந்து கொள்ளாமற் கேட்டார்.

"சேர், நீங்க முயற்சி எடுத்து பணிஸ்மென்ட் ட்ரான்ஸ்பர்ல என்னை அனுப்பினதாலதான் எனக்குள் ஒரு ரோச உணர்ச்சி உண்டாயிற்று. எப்படியாவது நானும் ஒரு அதிகாரியாக வேணும் வாழ்க்கையில் உயர வேணும் எண்டதொரு வைராக்கியம். அதால பரீட்சைகள் எடுத்துப் பாஸ் பண்ணி இந்தப்பதவிக்கே வந்திற்றன்."

மயில்வாகனத்தார் வாயடைத்துப் போய் நின்றார். பதில் சொல்ல வார்த்தைகளைத் தேட வேண்டியிருந்தது.

"சேர், நான் இப்ப இஞ்ச குடும்பத்தோட வந்திற்றன். லேக் றோட்ல வீடு. ஒரு நாளைக்கு வாங்களன். மனைவியிற்ற

உங்களப் பற்றி சொல்லி வைக்கிறன்” என்று பணிப்பாளர் அழைத்த போது அவர் மகிழ்ந்து போனார்.

“பவானியிற்ற நான் விசாரிச்சதாச் சொல்லுங்க.” என்றார் உரிமையோடு. “பவானியிற்றயா?” “அப்ப நீங்க பவானியக் கல்யாணம் செய்யல்லையா?”

ராஜகோபால் கடகடவென்று சிரித்தார். “ஓ நீங்க அந்தப் பவானி ரீச்சரக் கேக்கிறீங்களா? அவவ நான் லவ் பண்ணினாத்தானே கல்யாணம் செய்யலாம். அவ இப்ப கனடாவில கணவனோடையும் பிள்ளையளோடையும் இருப்பா.” “அப்ப, நீங்க கதைச்சதும் பழகினதும்?” “ஒரு ஆணும் பெண்ணும் கதைச்சுப் பழகினால் அது லவ்வாகத்தான் இருக்கும் எண்டு நினைக்கிற சராசரி மனுசனாய் நீங்களும் இருந்திற்றீங்களே சேர். அது தான் எனக்குக் கவலை தந்த விடயம். அவ பாவம். கனடாவில இருந்த அவட மாமியிர மகனிட்டப் போறதில சில பிரச்சினையள்.... அதுக்கு உதவிகேட்டுத்தான் என்னோட அடிக்கடி கதைப்பா. கடைசியில ஒரு மாதிரியாக் கனடா போய்ச் சேர்ந்திற்றா.... அதெல்லாம் பழைய கதை. நீங்க கவலைப்படாமல் போங்க சேர். நான் உங்கட மகள்ற இடமாற்ற விசயத்தை கவனிக்கிறன்....!”

ராஜகோபால் அவருக்கு விடை கொடுக்கும் தோரணையில் சொல்லிவிட்டு அடுத்த அழைப்புக்காக மணியை அழுத்தினார் ஓர் அதிகாரியாக.

மயில்வாகனத்தார் அந்த அறையை விட்டு வெளியேறினார். மகளின் இடமாற்ற விடயத்தில் வெற்றி கண்டவர் தன்னுடைய கடந்தகால அதிபர் பதவியில் தான் தோற்றுப்போனதை மனதார ஏற்றுக் கொண்டவராக நடந்தார்.

**தென்றல்**

**மே 2001**

# ரொமி

வெள்ளிக் கிழமைக்குரிய நிம்மதியும் ஆறுதலும் மனதில் குடிகொண்டிருந்தாலும் அந்த நிம்மதியையும் மீறிய ஒரு வேதனைக் கீற்று உணர்வில் கலந்து உறுத்திக் கொண்டிருந்தது.

சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் தொடர்ந்து விடுமுறை வருவதால் வெள்ளிக்கிழமை என்பது வேலைக்குப் போகும் எவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிற ஒரு நாள்தான்.

மக்கள் இருவரும் தமது செல்ல நாய் ரொமியுடன் கொட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

வெண்மையும் சாம்பலும் கலந்த ஓர் அபூர்வ நிறத்தில் அப்பாவித்தனமான முகத்தோற்றமும் கம்பீரமான உடல்வாகும் கொண்ட இந்த ரொமி வீட்டுக்கு வந்ததில் இருந்து மக்களுக்கு அது தான் விளையாட்டுத் தோழன்.

ரொமியுடன் பாய்ந்து பாய்ந்து அவர்கள் இருவரும் குதூகலித்துக் கொண்டு இருந்த போதும் என் மனம் அவர்களது மகிழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்தது.

இரவு கண்ட அந்தக் கனவின் பயங்கரம் இன்னும் மனதை விட்டு அகலாமல் பயமுறுத்திக் கொண்டிருந்தது. காலையில் எழுந்ததிலிருந்து வேலைக்குப் போய்த் திரும்பி வந்து இத்தனை நேரமாகியும் அந்தக் கனவு ஏற்படுத்திய தாக்கம் சற்றும் குறையாமல்...........

அடிமனதில் இருக்கிற சில நினைவுகள் கனவுகளாக வெளிப்படும் என்பார்கள். எந்தப் பெண்ணுமே மனதால் நினைத்துப் பார்க்கவும் அஞ்சுகின்ற அந்த நினைவு என் அடிமனதில் மட்டும் ஏன் வரப்போகின்றது?

வெறும் கனவுதானே என்று விட்டுவிட முடியாதபடி அதன் தாக்கம் உள்ளத்தைப் பீதியிலேயே அமுக்கிக் கொண்டிருப்பதால் எனது புலன்கள் வேறெதிலும் பதிய

மறுத்தன. அலுவலகத்திலும் வேலைகளை ஒழுங்காகச் செய்யமுடியாத தடுமாற்றம்..... இரண்டு தடவைக்கு மேல் மேலதிகாரி கூடக் குறைப்பட்டுக் கொண்ட போது ஒருகனவுக்காக நான் ஏன் இவ்வளவு தூரம் குழம்பிக் கொண்டிருக்கிறேன் என்று அறிவு விழித்துக் கொண்டாலும் அந்த அறிவையும் மீறிய ஏதோ ஒன்று என்னைஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

சிலவேளைகளில் நான் காணும் கனவுகள் பலிப்பதும் என் மனச்சஞ்சலத்துக்கு ஒரு காரணமாயிருக்கலாம்.

"அம்மா, பின்னேரம் கோயிலுக்குப் போகச் சொல்லிப் போட்டுப் போனவர் அப்பா." ரொமியுடன் விளையாடிக் கொண்டிருந்த மூத்தமகள் திடீரென அப்பாவின் வார்த்தைகள் ஞாபகம் வர என்னருகே ஓடிவந்தாள்.

'என்ன இது, என்னுடைய மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள் போல இவர்கள்.'

"நீங்க வாறதாஅம்மா?" என்னால் அன்று கோயிலுக்குப் போகமுடியாததென்பதை இவர்களுக்கு எப்படி உணர்த்துவது?

"நான் வரல்ல மகள், தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு போங்க.......... மாமாவையும் கூட அனுப்புறன். அர்ச்சனைக்குக் காசு தாறன். அப்பாட பேருக்கு நவக்கிரகங்களுக்குப் போட வேணும்...... கெதியா வெளிக்கிடுங்க......"

"ஏனம்மா அப்பாக்கு மட்டும்?"

"அப்பாக்கு மட்டுமில்ல எல்லாருக்கும் தான். அப்பாக்கு மட்டும் நவக்கிரகங்களுக்கும் போடச் சொல்லுங்க..."

அந்தப் பொல்லாத கனவு பலித்து விடக் கூடாதென்று இறைவன் ஒருவனிடம் தானே கேட்கமுடியும். தாயிடம் முறையிடும் குழந்தையைப் போல மனக் கஷ்டங்கள் ஏற்படும் போதெல்லாம் இறைவனிடம் தான் ஓடுகிறோம்.

மக்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போதே வேலைக்குச் சென்ற கணவர் திரும்பி வந்துவிட்டார்.

"கோயிலுக்குப் போகச் சொல்லிப் போட்டுப் போனனான். இன்னும் போகல்லப் போல கிடக்குது. அங்க பூசை தொடங்கப் போகுது." வந்ததும் வராததுமாகக் கணவரின் முணுமுணுப்பு.

"போகத்தான் வெளிக்கிடுறாங்க, பக்கத்திலதானே கோயில், ரெண்டு நிமிசத்தில போயிரலாம்."

பிளாஸ்க்கிலிருந்த தேநீரை ஊற்றிக் கொடுக்க, குடித்துவிட்டு அவர் தன்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தயாராகிறார். அவர் எப்போதுமே இப்படித்தான். பதினைந்து கிலோமீட்டர் மோட்டார் சைக்கிள் ஓடிவந்த களைப்பையே அவரிடம் காணமுடியாது. உடுப்பை மாற்றித் தேநீர் குடித்தால் ஏதாவதொரு வேலையை தேடிப்பிடித்துக் கொண்டு செய்யத் தொடங்கிவிடுவார்.

கோஸ்பைப்பைத் தூக்கிக் கொண்டு பூமரங்களுக்குத் தண்ணீர் அடிப்பது, தென்னங்கன்றுகளுக்குப் பாத்தி பிடித்து உரம் போடுவது, மோட்டார் சைக்கிளைக் கழுவுவது, ரி.வி. அன்டெனாவைச் சரியாக்குவது...... இப்படி ஏதாவதொரு வேலையைத் தேடிப்பிடித்துச் செய்யத் தொடங்கிவிடுவார்.

அன்றும் பாடமறுத்த றேடியோவைத் தூக்கி வைத்துக் கொண்டு ஏதோ ஆராய்ச்சி பண்ணத்தொடங்கினார். ரொமி அவரருகில் போய்ச் சுருண்டு கொண்டது.

"சீ, தள்ளிப் போ, வேலை செய்யப் போனாப் பக்கத்தில் வந்து சுருள்றது தான் உன்ர பழக்கம்..." அவர் ரொமியைத் துரத்தினார்.

சற்றுமுன்னர் அது மக்களுடன் விளையாடிய விளையாட்டை நினைத்துக்கொண்டேன். அவர்கள் பந்தைத் தூர வீசிவிட அது பாய்ந்து சென்று பந்தை எடுத்துவந்து கொடுக்கும். திரும்பவும் உடனே பந்தை வீசாமல் அதை மேலே தூக்கிப் போட்டுப போட்டுப் பிடிப்பார்கள். ரொமி பாய்ந்து அவர்களுடைய தோள்களில் முன்னங்கால்களைத்

தூக்கிப் போட்டுப் பந்தை வீசச் சொல்லுமாப் போலக் குரைத்து ஏதோ சொல்லும். மக்கள் சற்றுநேரம் ஏமாற்றிவிட்டு வீசுவார்கள். ஓடிப்போய் பந்தை எடுத்துவரும்.

மக்கள் இருவரும் இந்த ரொமியில் வைத்திருக்கிற பாசம் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும்.

கோயிலில் மணிச்சத்தம் கேட்கத் தொடங்கியது. அவசர அவசரமாகப் புறப்பட்ட மக்கள் கேற்றடிக்குப் போவதற்கிடையில் ரொமி அவர்களை முந்திக் கொண்டது.

“அம்மா, ரொமி வரப்போகுது கூப்பிடுங்க....” லாவண்யா சத்தம் போட நான் அதைக் கூப்பிட்டுக் கொண்டே கேற்றடி வரை சென்றேன். அது என்னையும் மக்களையும் முந்திக் கொண்டது.

மக்கள் இயன்றவரையும் துரத்திப் பார்த்தனர். அதற்குப் புரிந்துவிட்டது - எங்கோ போகப் போகிறார்கள் என்பது.

அதன் வழக்கமே இதுதான். வீட்டிலிருந்து நாங்கள் யாராவது வெளியில் போகப் புறப்பட்டால் எங்களையும் முந்திக்கொண்டு கேற்றடிக்குப் போய்விடும். கேற்றால் போக முடியாமல் மறித்தால் மதிலுக்கு மேலாகப் பாய்ந்து ஓடிவிடும். இப்படி அது ஆறடி மதிலுக்கு மேலாகப் பாய்வதை வீட்டுக்கு வருவோரும் வீதியால் போவோரும் வேடிக்கையாகப் பார்த்து நிற்பார்கள்.

அன்று மதில் பாயவேண்டிய அவசியமே அதற்கு இருக்கவில்லை. திறந்திருந்த கேற்றைத் தாண்டி வெளியில் போய் மக்களைக் காத்து நின்றது.

இளைய மகள் சிலவேளைகளில் அதைக் கட்டிப்பிடித்து தூக்கிவந்து உள்ளே விடுவாள். அவர்கள் போய் மறையும் வரையில் நான் அதற்குக் காவல் நிற்பேன்.

அன்றும் அவள் தூக்கி வந்து விடுவாள் என்று நினைத்தேன். ஆனால் அவளுடைய சிந்தனை வேறுவிதமாக இருந்தது. ‘கோயிலுக்குப் போகும் போது நாயைத்

தூக்குகிறாள்' என்று மகளுடைய புனிதத்தன்மை குறைந்துவிட்டதாக நினைத்து அப்பா சத்தம் போடுவார் என்ற பயம் அவளுக்கு.

பூசைக்குப் பிந்தினால் அர்ச்சனை பண்ண முடியாமற் போய்விடும் என்ற அங்கலாய்ப்பு எனக்கு.

"அது வந்தால் வரட்டும், பூசை தொடங்கப் போகுது. கெதியாய்போங்க....." நான் அவசரப்படுத்தினேன். கூடவே எனது தம்பியும் மருமக்களுக்குக் காவலாய்ப் புறப்பட்டான்.

ரொமி அவர்களை முந்திவிட்டது. கோயிலுக்குப் போய் என்ன கூத்துக் காட்டப் போகிறதோ என்ற வருத்தத்துடன் கடைசிமுறையாய் "ரொமி, வா இஞ்ச." என்று அதட்டினேன். திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு ஓடிப்போய்விட்டது.

கணவர் தன் வேலையில் மும்முரமானார். 'கடவுளே, அந்தக் கனவு வெறும் கனவாகப் போய்விட வேணும். இவருக்கு ஒரு ஆபத்தும் வந்துவிடக் கூடாது.........' நான் மனதுக்குள் வேண்டிக் கொண்டேன்.

"லாவண்யாதான் அதுக்குச் செல்லம் குடுத்துக் கெடுத்து வைச்சிருக்கிறாள். எங்க போனாலும் பின்னால தானே போகுது..." அவர் ரொமியின் நினைவிலேயே மூழ்கியிருந்திருக்கிறார். அவர் சொல்வதும் சரிதான். ரொமி என்றாலே அவளுக்கு உயிர். அதுவும் அப்படித்தான்.

சிலவேளைகளில் அது செய்கின்ற வேலைகளைப் பார்த்தால் பகுத்தறிவில்லாத ஒரு சீவன் செய்கிற வேலையாகத் தெரியாது.

நாங்கள் எங்கேயாவது போவதற்குப் புறப்பட்டால் எங்களுக்கு முன்னால் போய் வீதியில் நின்றுகொண்டு எந்த வழியால் போகிறோம் என்பதை அவதானிக்கும். நாங்கள் வழக்கமாய்ப் போகும் இடங்கள், வழக்கமான பாதைகள் எல்லாம் அதற்குத் தெரியும். நாங்கள் போகும் வழியை அவதானித்து விட்டு நாங்கள் போக வேண்டிய வீட்டுக் கேற்றடியில் முன்னாலேயே ஓடிப்போய் காத்துநிற்கும்.

ஒரு தடவை பிறந்தநாள் விழா ஒன்றுக்குப் போயிருந்தோம். ரொமியும் பின்னாலேயே வந்துவிட்டது. எவ்வளவு முயன்றும் அதனைத் துரத்த முடியவில்லை. "நிற்கட்டும் பாவம்" என்ற வீட்டுக்காரர்களின் பரிந்துரையால் பேசாமல் விட்டுவிட்டு நாங்கள் உள்ளே போய்விட்டோம். பார்ட்டி எல்லாம் முடிந்து வீட்டுக்குத் திரும்புவதற்காக எமது செருப்புக்களை அணிந்து கொள்ளத்தேடியபோது எனது செருப்புகள் இரண்டும் காணாமற் போயிருந்தன.

"இவ்வளவு பேர் வந்துபோன இடத்தில் என்னுடைய செருப்புத்தான் தொலைய வேண்டுமா?" எங்கெல்லாமோ தேடிக் களைத்து வெறுங்காலுடன் வீடு திரும்பினோம். அங்கே எமக்கோர் அதிசயமே காத்திருந்தது. எனது செருப்புக்கள் இரண்டையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு ரொமி அலட்சியமாகப் படுத்திருந்தது.

என்னால் நம்பவே முடியவில்லை. பிறந்தநாள் பார்ட்டிக்கு வந்திருந்த பலருடைய செருப்புக்களுக்கு மத்தியில் இது என்னுடைய செருப்புகளை எப்படி இனங்கண்டு தூக்கி வந்தது? இந்த அறிவு இதற்கு எங்கிருந்து வந்தது?

இப்படி ஒரு தடவையல்ல, பல தடவைகள் நடந்திருக்கிறது. சிலவேளைகளில் ஒவ்வொருவருடைய ஒற்றைச் செருப்பையும் தூக்கி வந்துவிடும். செருப்பைக் காணவில்லை என்றால் அது ரொமியின் வேலையாகத்தான் இருக்கும் என்று துணிந்து சொல்லுமளவுக்கு அதனுடைய செயற்பாடு அமைந்து விட்டது.

எங்கேயாவது தூர இடங்களுக்குப் போவதற்கு பஸ்சுக்காக காத்து நின்றால் நாங்கள் பஸ் ஏறும் வரையில் எங்கள் காலடியிலேயே நிற்கும். பஸ் ஏறிப் போன பின்தான் ரொமியும் அந்த இடத்தை விட்டுப் போகும்.

ஏன் இந்தப் பிறவி எங்கள் குடும்பத்தின் மீது இத்தனை அக்கறை காட்டுகின்றது என்பதை நினைக்கும் போது எனக்குப் பெரும் புதிராகவே தென்படும். மறுபிறவி என்பது உண்மையாக இருந்து, எம்மிடத்தில் இருந்து பிரிந்து சென்ற எமது அன்புக்குரியவர்கள் யாராவது இப்படி ரொமியாகப்

பிறந்து வந்து எங்களைக் காக்கிறார்களோ என்று நினைப்பேன்.

கோயிலில் பூசைக்கான மணி ஒலிக்கத் தொடங்கியது. "கடவுளே, நான் கண்ட அந்தப் பொல்லாத கனவு கனவாகப் போய்விட வேண்டும்..... அது நனவாக மாறாமலிருக்க நீதான் அருள் செய்யவேணும்........" நான் மனதுக்குள் வேண்டிக் கொண்டேன்.

"பூசை தொடங்கப் போகுது. இந்த ரொமி இன்னும் திரும்பி வரல்லையே, பிள்ளையளுக்குப் பின்னால கோயிலுக்குள்ளையும் போயிருக்கும்...... சனங்கள் சத்தம் போடப் போகுதுகள்....." கணவர் சலித்துக் கொண்டார்.

"அதுகளும் பாசம் காட்டத்தான் ரொமியும் இப்பிடி ஒட்டிக் கொண்டு திரியுது. குழந்தையள வளர்க்கிற மாதிரித்தானே ரெண்டு பேரும் சேர்ந்து வளர்த்ததுகள்..."

சின்னக் குட்டியாய் ரோட்டில் கிடந்து கத்திக் கொண்டிருந்த ரொமியை அப்பாவிடம் கெஞ்சி, சம்மதம் பெற்றுத் தூக்கி வந்ததும், துணியில் தொட்டில் கட்டி அதற்குள் படுக்கவைத்ததும்... அடிக்கடி பால் கரைத்துக் கொடுத்ததும், நேற்றுத்தான் போலிருக்கிறது. அதற்குள் இந்த ரொமி என்னமாய் வளர்ந்து விட்டது.

கால்களை நீட்டிப் போட்டுக் கொண்டு முன்னங்கால்களில் முகத்தை வைத்துக்கொண்டு அது படுத்துவிட்டால் போதும். அருகில் குந்திக் கொண்டு அதன் பட்டுமேனியைத் தடவித் தடவி ஒரு குழந்தையைத் தூங்க வைப்பது போல அதனைத் தூங்க வைத்துவிட்டுத்தான் எழும்புவார்கள்.

விளையாட்டுச் சிற்றுண்டிகள் செய்து அதற்குப் பிறந்தநாள் கொண்டாடுவதும் கேக் வெட்டுவதும் விளையாட்டுப் பழக்குவதுமாய் வீடே அமர்க்களப்படும். அது வீட்டுக்கு வந்து ஒரு வாரம் வரைக்கும் "குட்டிக்கு என்ன பேரம்மா வைக்கலாம்?" என்று கேட்டு கேட்டு என்னைத் துளைத்து எடுத்தபின் அவர்களாகவே ரொமி என்ற பெயரைத் தெரிந்தெடுத்தார்கள்.

"ரொமி, வாடா" என்று மக்கள் குரல் கொடுத்தால் போதும். எங்கிருந்தாலும் பாய்ந்து வந்து அவர்களருகில் நிற்கும். தன்னுடைய முன்னங்காலைத் தூக்கி அவர்களில் ஒருவருடைய கால்களின் மேல் வைத்துக் கொண்டு நிற்கும். காலை இழுத்தெடுத்தால் தேடித் தேடித் தன் காலைத் தூக்கி வைக்கும்.

அப்படி அது நிற்பதைப் பார்த்தால் ஏதே ஓர் உணர்வை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதைப் போலிருக்கும்.

கோயிலில் மணிச்சத்தம் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தது. பூசை முடிந்து அர்ச்சனை முடிய இன்னும் நேரம் எடுக்கும்.

மெல்ல மெல்ல இருள் சூழத் தொடங்கியது. இரவுச் சமையலுக்கான வேலைகளைத் தொடங்கலாம் என்று ஆயத்தமாகும் வேளையில் மக்களுடன் கோயிலுக்குப் போயிருந்த தம்பி அவசரம் அவசரமாக வந்து நின்றான். முகத்தில் கலவரம். "என்ன இடையில வந்து நிக்கிறாய்? பிள்ளையள் எங்க?"

அவன் எதையோ சொல்ல முயன்று முடியாது தவித்தான். "என்னடா தம்பி, ஏன் தயங்கிறாய், பிள்ளையள் எங்க?" நான் பதறினேன்.

"அக்கா, பிள்ளையள் கோயிலுக்குள்ள நிக்குதுகள், ரொமி........."

"ரொமிக்கென்ன?"

"அது கோயிலுக்குள்ள வந்து பூசை நேரம் கோயிலைச் சுத்தி வந்தது. வெளியில இருந்தவங்க நாயொண்டு கோயிலுக்குள்ள நிக்குதெண்டு துரத்தியிருக்கிறாங்க, அது வீட்ட வாறதுக்கு ஓடிவந்து ரோட்டக் கடந்திருக்குது........ கோயில் வாசல்லையே வேன் ஒன்று அடிச்சுப் போட்டுது........?"

"கடவுளே இதுக்குத்தான் கூப்பிடக் கூப்பிட வராமல் அது பாஞ்சு ஓடிச்சுதா?"

"அடி உரமா? எவடத்தில பட்டிருக்குது?" நான் பதறினேன்.

"ஒரேயடியாகத் தலையில பட்டிருக்குது. ரோட்டில இரத்த வெள்ளத்துக்குள்ள கிடக்குது. அது கிடக்கிற கோலத்தைப் பிள்ளையள் கண்டாத்தாங்காதுகள்"

அவன் சொல்லச் சொல்ல எனக்குள்ளே ஒரு பொறி கிளர்ந்தது.

வெள்ளிக்கிழமை, பூசைநேரத்தில் ஆலய தரிசனமும் செய்துவிட்டுக் கோயில் வாசலிலேயே அது ஏன் தன்னுடைய உயிரைக் கொடுக்கவேண்டும்? வாய்விட்டுச் சொல்ல முடியாத ஏதோ ஓர் உணர்வு, ஓர் உண்மை என்னுள் ஒளிக்கீற்றாய்........

நடக்கவிருந்த ஒரு விபரீதம் கனவாய் உணர்த்தப்பட்டு, பிரார்த்தனையால் தடம் மாறி.......

தாலிக்கொடி கழன்று விழவோ, உடையவோ கனவு கண்டால் கணவனுக்கு ஆபத்தென்று சொல்வார்கள்.

நான் கண்ட அந்தக் கனவு? கழுத்தில் கிடந்த என் தாலிக் கொடி கழன்று என் மடியில் விழுகிறது. என்ன இது என்று அதிர்ச்சியுடன் அதைக் கையில் எடுக்க இரண்டு துண்டுகளாக் முறிந்து போகிறது.

காலையில் எழுந்ததும் இந்தக் கனவின் பயங்கரம் என்னை வதைக்க 'கடவுளே, இதென்ன துர்க்கனவு, அவருக்கு எதுவும் ஆகிவிடக்கூடாதே.....' என்று நான் தவித்த தவிப்பு.....

நடக்கவிருந்த விபரீதத்தை அந்த வாயில்லாப் பிராணி தன் தலையில் போட்டுக் கொண்டதா? இல்லையென்று யார் கண்டார்கள்?

பொங்கி வந்த விழிநீரை அடக்கிக் கொண்டு கணவரைப் பார்த்தேன். அவர் கண்களிலும் சோகம் அப்பிக் கொண்டது.

மக்கள் கோயிலால் புறப்பட்டு வருவதற்கிடையில் ரொமியின் உடலை அப்புறப்படுத்திப் புதைத்து வீதியில்

பரவிய இரத்தத்தை மண்போட்டு மறைத்துவிட்டு மக்களை அழைத்து வந்தான் தம்பி.

வரும்போதே அவர்கள் முகத்தில் கலவரம்.

"ரொமி எங்கம்மா?" நான் என்ன பதில் சொல்வேன்.

"ரொமிய வேன் அடிச்சுப் போட்டுதாம், மெய்யாம்மா?" இருவர் விழிகளும் கொட்டுவதற்குத் தயாராய் அங்கே புயல் ஒன்று வீசிக் கொண்டிருந்தது. "கோயில்ல இருந்த ஆக்கள் வரக்குள்ள கதைக்கிறாங்க......... அது நம்மட ரொமி தானாம்மா?"

அதற்கு மேலும் என்னால் உண்மையை மறைக்க முடியவில்லை. என் விழி நீர் அவர்களுக்கு உண்மையைப் புலப்படுத்த,

"எனக்கு ரொமி வேணும் அம்மா, என்ர ரொமி வேணும்........" சின்னமகள் போட்ட கூச்சலைத் தொடர்ந்து பெரியவளும் விம்ம அவர்களை அணைத்துக் கொண்டு நானும் அழ, அந்த மாலை வேளையில் வீடே சோகத்தில் ஆழ்ந்து ஓர் இழவு வீடு போலாயிற்று.

**ஞானம்**

**பெப்ரவரி 2001**

# அப்பா

**தெ**ன்னோலைகளுக்கூடாக நிலாப் பொட்டுக்கள் வாசலில் சிதறிக் கிடந்தன. அள்ளியெடுத்து மடியில்கட்டிக்கொள்ளலாம் போல அத்தனை அழகு. சில்லென்ற தென்றல் வாசல் மரங்களை அசைத்து விளையாடி விட்டுப் போனது. வைகாசிக் குயில் ஒன்று வேளை தப்பிக் கூவியது.

மற்றொரு வேளையாய் இருந்தால் மாணிக்கம் அந்தக் குயிலுக்குப் பதிற் குரல் கொடுப்பான். குயில் கூவக் கூவ அவனும் கூவுவான். குயிலுக்கும் தனக்குமிடையில் ஏதோ ஒரு பந்தம் ஏற்பட்டு விட்டாற் போல அவன் மன்சு துள்ளும். வெற்றிப் பெருமிதத்தோடு வீட்டில் உள்ளவர்களைப் பார்ப்பான்.

ஆனால் இன்று அவன் வீட்டின் சூழ்நிலை அடியோடு மாறிப்போய்விட்டிருந்தது. அம்மா முற்றத்து மாமரத்தில் முதுகைச் சாய்த்துக் கொண்டு வேதனையில் உறைந்து போயிருந்தாள். தங்கைகள் இருவரும் சாணம் மெழுகிய திண்ணையில் அயர்ந்து உறங்கிப் போயிருந்தனர்.

வழக்கமாய் அவன் இந்த நேரத்தில் பாடப்புத்தகங்களோடு போராடிக் கொண்டிருப்பான். தங்கைகள் சிரிப்பும் கதையும் விளையாட்டுமாய் வீட்டை இரண்டுபடுத்திக் கொண்டிருப்பார்கள். அம்மாவும், அப்பாவும் முற்றத்தில் இருந்து தங்கள் குடும்பச்சுமைகளைப் பகிர்ந்து கொண்டிருப்பார்கள்.

அப்பாவின் நினைவு வந்ததும் அவன் நெஞ்சை இறுக்கிப் பிடிப்பது போல வலி ஏற்பட்டது. அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் பிரதிபலித்த சோகமும் பீதியும் அவனை உலுக்கியது.

அவளருகில் போயிருந்து "அப்பாவத் தேடிப்

போவமாம்மா?” என்று கேட்டான். அவன் கேள்விக்கே காத்திருந்தவள் போல “இந்த இராப்பொழுதில எங்கையெண்டுடா தேடிப் போற? அவரோட கூடப் போன மயிலண்ணனும் இன்னும் வீட்டுக்கு வரல்லையாம். ரெண்டு பேரும் சேர்ந்து எங்கையும் குடிச்சிற்றுக் கிடக்கிறாங்களோ என்னவோ?” அம்மா அலுத்துக் கொண்ட போதும் அவனால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவனுடைய தந்தை குடிப்பவர்தான். கூலிவேலைக்குப் போய் வரும் போது கூடப் போகும் யாருடனாவது சேர்ந்து கொஞ்சம் குடித்துவிட்டுச் சற்று நேரம் கழித்து வருபவர் தான். ஆனால் இப்படி எட்டு மணிவரைக்கும் அவர் நின்றதை ஒரு நாளும் அவன் அறிய மாட்டான்.

தூரத்தில் எங்கோ நாய் ஒன்று தனிக்குரலில் ஊளையிட்டது. அதைத் தொடர்ந்து இன்னும் சில நாய்களின் ஊளைக்குரல்கள் அவன் ரத்தத்தை உறைய வைத்தன.

அவன் பாட்டி உயிரோடு இருந்த போது சொல்வாள். நாய் ஊளையிட்டால் சா வருமாம். பாட்டி சாகப் போகும் வேளையிற் கூட அவர்கள் வீட்டுநாய் வீட்டைச் சுற்றிச் சுற்றி ஊளையிட்டதும் அவன் பயத்தால் அப்பாவின் மடியில் முகம் புதைத்து கிடந்ததும் சற்று வேளையில் பாட்டியை சுற்றியிருந்த உறவினர்களும் அம்மாவும் ஓவென்று ஒப்பாரி வைத்ததும் அவனுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது.

அவன் தன்னுடைய பயத்தை வாய்விட்டுச் சொல்லாமல் அம்மாவின் தோளோடு ஒட்டிக் கொண்டான்.

கேற்றடியில் வெளிச்சம் தெரிந்தது. தொடர்ந்து பேச்சுக் குரல்களும் கேட்டன. அம்மாவோடு அவனும் எழுந்து கொண்டான். வந்தவர்கள் அவன் தந்தையோடு வயலுக்கு உரம் இடுவதற்குப் போயிருந்த மயில்வாகனத்தின் மனைவியும் மகனும். கையில் கொண்டு வந்திருந்த ஓலைப்பந்தத்தை மண்ணில் புதைத்து அணைத்து விட்டு வாசலுக்கு வந்தனர்.

“போடியார் வீட்டுக்கும் ஆளனுப்பி பார்த்திற்றன்.

அஞ்சி மணி போல போடியார் வயலுக்கால வந்திற்றாராம். இவங்க ரெண்டு பேருந்தான் கொஞ்சம் பசள கிடக்கு எறிஞ்சி போட்டு வாறம் எண்டு நிண்டதாம் எண்டு சொல்லி வரக்காட்டியிரிக்கார்."

மயில்வாகனத்தின் மனைவி நிற்கமாட்டாமல் திண்ணையில் குந்தினாள். மகனின் முகம் பேயறைந்தாற் போலிருந்தது. "போடியாருக்கு கொஞ்சம் மதிப்பிரிக்கித்தானே. கேம்பில சொல்லிப் போட்டுப் போய்ப்பார்க்கலாந்தானே, நாம இந்த நேரத்தில் எப்பிடி மச்சாள் வெளிக்கிடுற? ராப் பொழுத என்னெண்டு கழிக்கிற?"

"தவறணயளுக்கெல்லாம் அண்ணன் அனுப்பிப் பார்த்திற்றன் செல்லம்மா, ஒரு இடமும் அவங்க வரல்லையாம். என்ன நடந்திச்செண்டு ஆரிட்ட கேக்கிற?"

பெண்மனதின் பரிதவிப்பு வார்த்தைகளிற் குமுறியது. மாணிக்கம் தாயின் முகத்தை அண்ணார்ந்து பார்த்தான். அவனுடைய தாய் செல்லம்மாவின் கண்கள் நீர் நிரம்பிய குளங்களாய் உடைப்பெடுக்கக் காத்திருந்தன.

"நாங்க வாறம் செல்லம்மா. அவிரி தலையிலதான் பொழுது விடியிற. வகுத்துச் சோத்துக்குத்தானே இந்தப் பாடு படப் போனாங்க..... நம்மிட்டையும் நாலு காசிருந்தா இந்தக் கஸ்டமெல்லாம் படுவமா?"

அவர்கள் போனபின் அவனும் அவளும் திரும்பவும் மாமரத்தடியில் குந்திக் கொண்டார்கள். அப்பாவின் முகம் அவன் மனதில் நிறைந்து நின்றது.

"நான் படுற கஸ்டமொண்டும் என்ர மக்கள் படப்போடா. உங்க மூண்டு பேரையும் நல்லாப் படிக்கவெய்க் கோணும் எண்டுதான் நான் இப்பிடிக் கஸ்டப்படுறன்" அப்பா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்.

திறமையிருந்தும் படிக்க வசதிகள் இல்லாமல் போனதால் வெயில் காய்ந்து கூலி வேலை செய்வதற்கென்று நிர்ப்பந்திக்கப்பட்ட ஆயிரக்கணக்கான - அல்ல - இலட்சக்கணக்கான தொழிலாளர்களுள் அவனுடைய

தந்தையும் ஒருவர்.

விடிந்தால் எங்கே வேலை இருக்கிறதென்று தேடி அலையும் நிச்சயமில்லாத, நிரந்தரமில்லாத தொழிலாளி. மூன்று பிள்ளைகளையும் மனைவியையும் உணவு கொடுத்து பாதுகாக்க, தன் பாதுகாப்பை லட்சியம் பண்ணாது தொழில் தேடி அலையும் பரிதாபத்துக்குரிய ஜீவன்.

"மாணிக்கம். உனக்குப்பசிக்கல்லையா? பகல் ஆக்கின சோறும் கறியும் கிடக்கு. புள்ளையளையும் எழுப்பிப் போட்டுக் குடுத்துச் சாப்பிடு" என்றாள் அவன் தாய். "எனக்கு வேணாம். பசிக்கல்ல....." "இப்பிடியே இருந்து என்ன செய்யப் போறா? பசிக்காட்டி போய்ப்படு." "நான்படுத்தா நீ தனியாக குந்திற்று இருக்கப் போறயா?" அவன் விம்மினான்.

அப்படியே அவனுடைய தலையை இழுத்து அணைத்துக் கொண்டாள் அவள். சூடான கண்ணீர்த்துளிகள் அவன் வெற்று முதுகில் கொட்டின.

ஊரில் சன நடமாட்டம் அடங்கி நிசப்தம் குடிகொள்ளத் தொடங்கி விட்டது. திண்ணையில் இருந்த குப்பிவிளக்கு மெல்ல ஒளி குறையத் தொடங்கியது. முற்றத்து நிலாப் பொட்டுக்களும் காணாமற் போயிருந்தன.

தாயின் மடியிலிருந்து நிமிர்ந்த போது ஒருவிதமான பீதி அவனை ஆட்கொண்டது. "உள்ளுக்குப் போவமம்மா" அவனுடைய கெஞ்சல் அவளை அசைத்தது. பாயை விரித்து குழந்தைகள் இருவரையும் தூக்கி வளர்த்தி, தகரக் கதவைச் சாத்திக் கொழுவி விட்டுச் சுவரில் சாய்ந்து கொண்டாள். சுவரில் அடித்திருந்த ஆணியில் அவனுடைய தந்தையின் சேட் கொழுவியிருந்தது. அவன் இனி அப்பாவைக் காண்பானா? அந்தச் சேட்டைப் போடுவதற்கு அப்பா திரும்பி வருவாரா? பிஞ்சு மனம் வெடித்துச் சிதறாமல் உள்ளுக்குள் குமைந்தது.

வீதியில் சப்பாத்து கால்களின் நடமாட்டம். அம்மா உணர்ச்சிகளை வெளிக்காட்டாத பொம்மையைப் போல இறுகிப் போயிருந்தாள்.

இரண்டு மாதங்களுக்கு மேலிருக்கும். இப்படித்தான் ஒருநாள் அப்பா பாலிப் போடியாரின் வயலுக்கு விதைப்புக்காகப் போயிருந்தவர். திரும்பி வரவில்லை. இரவு முழுவதும் அம்மா அழுதழுது கிடந்தாள். அடுத்தநாள் காலையில் அப்பாவைத் தேடிப் போகப்புறப்பட்ட போது அவரே தள்ளாடித் தள்ளாடி வந்து சேர்ந்தார்.

அப்பாவும், அவரோடு விதைப்பு வேலைக்குப் போன இன்னும் நான்கு பேரும் விதைப்பு முடிந்து பக்கத்தில் இருந்த பற்றைக்களுக்குள் விறகுபொறுக்கிக் கொண்டிருக்கும் போது அந்த வழியால் வந்த சீருடைக்காரர் ஐந்து பேரையும் பிடித்து அடைத்து வைத்து அடிஅடியென்று அடித்து, ஏதோ கேள்விகள் கேட்டு மிரட்டி அப்பாவிகள் என்று அறிந்து அனுப்பியிருந்தார்கள்.

அதன்பின் கொஞ்சநாட்களாக அவர் வயல்பக்கமே தலை காட்டுவதில்லை. ஆனால் நேற்று மாலைக்குள் வீட்டுக்கு வந்த போடியார் "கதிர் குடலையாப் போச்சுடா சின்னவன், ரெண்டொரு நாளைக்குள்ள பசள போடாட்டி எல்லாம் பாழாய்ப் போயிரும்..... மயிலனையும் சொல்லியிரிக்கன். நாளைக்கு விடிய வந்திரு....." என்று அழைத்த போது அவனால் மறுக்க முடியவில்லை.

மனைவியின் பார்வையில் தெரிந்த மறுப்பைக்கண்ட போது அவன் சிரித்தான். "செல்லம்மா, கூலிக்காரனுக்கு இதெல்லாம் பார்த்திற்று இரிக்க முடியுமா? நாளைக்குப் பசள போடப் போகாட்டி போடியார் வெட்டுகட்டுக்கும் கூப்பிடமாட்டார். ரெண்டு மூண்டு அவணம் நெல்லெடுக்கிற வேலையும் இல்லாமல் போயிரும்..... விடிய நேரத்தோட ஒரு கறியோடயெண்டான்ன சோத்தக் கட்டித்தா..... நான் மயிலனோட போயிற்று வாறன்....." என்று மறு பேச்சுக்கு இடமில்லாமல் சொல்லிவிட்டார்.

காலையில் போகும் போது கூட "புள்ளையளுக்கு ஒழுங்காச் சாப்பாட்ட குடுத்துப் பள்ளிக்கு போக்காட்டு. என்ர சட்டப்பைக்குள் பதினஞ்சு ரூபா கிடக்கு எடுத்து கறியென்னவும் வாங்கு....." என்று மனைவிக்குச் சொன்னவர்

"டேய் மாணிக்கம் இந்தா காசு. பள்ளயில வட வாங்கிச் சாப்பிடு." என்று அவனிடம் ஐந்து ரூபா கொடுத்துவிட்டுப் போன காட்சி அவன் மறக்கக்கூடியதல்ல.

எங்கேயோ துப்பாக்கி ரவைகள் வெடிக்கும் ஓசை செவியை அதிரவைத்தது. அவன் தாயைக் கட்டிக் கொண்டான். அவளுடைய உதடுகள் எதையோ முணுமுணுத்தன.

"கடவுளே. என்ர அப்பா திரும்பி வரோணும்....." அவன் தனக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டான்.

நாலைந்து மாதங்களுக்கு முன் அவனோடு படிக்கும் ராகவனின் அப்பாவை இரத்தம் வடிய வடியத் தூக்கி வந்ததும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கு இடையில் "எல்லாம் முடிஞ்சி" என்று நாகமணி ஆச்சி அவரின் மூக்கின் அருகில் கைவைத்துப் பார்த்துச் சொன்னதும் அவன் நினைவுக்கு வந்தது. ராகவன் அலறிய அலறல் இப்போதும் காதுக்குள் ஒலிப்பது போலிருந்தது.

அவன் நினைவுகளைக் கலைக்க விரும்பித் தலையை உலுக்கி கண்களைக் கசக்கிக் கொண்டான். தூக்கம் வருவது போலிருந்தது. தங்கைகள் இருவரும் உலகை மறந்து நடப்பது எதுவும் தெரியாமல் தூங்கிக் கொண்டு கிடந்தனர்.

அவன் எப்போது தூங்கினான். என்ன நடந்தது என்று தெரியாதவனாக துடித்து பதைத்து எழுந்த போது எங்கும் ஒளி பரவியிருந்தது. வாசலில் உறவுக்கார ஆண்களும் பெண்களுமாய் பத்துப்பதினைந்து பேர். எல்லோருடைய முகங்களிலும் சோகம் அப்பியிருந்தது.

தங்கைகள் இருவரும் கழுவாத முகங்களும் பரட்டைத்தலையுமாக திண்ணையோரத்தில் ஒதுங்கியிருந்தனர். 'அம்மா எங்கே?' அவன் தாயைத் தேடினான். அந்தக் கூட்டத்தில் அவள் இல்லை. பக்கத்து வீட்டுக் கமலா அக்காவும் கூட்டத்தில் இருந்தாள். "கமலாக்கா அம்மா எங்கே?" என்று விம்மினான். "அம்மாவ போடியார்

வந்து கேம்புக்குக் கூட்டிப் போறார்". "ஏனக்கா?" அவள் பதில் பேசவில்லை.

அவனுக்குள் ஏதோஒன்று இடியாய் இறங்கியது. "அம்மா என்னத்துக்கு கேம்புக்குப் போகோணும்?" அவன் கமலாவை உலுப்பினான். அவளிடமிருந்து பதிலே வரவில்லை. அனுதாபப்பார்வை மட்டுமே அவளிடமிருந்து பிறந்தது.

அவன் அதுக்குமேல் அங்கு நிற்பது பைத்தியக்காரத்தனமாய்பட கேற்றைத் திறந்து கொண்டு ஆவேசம் வந்தவனாய் வீதிக்கு வந்த போது அம்மாவை ஏற்றிக் கொண்டு பெட்டி பூட்டிய உழவுயந்திரம் ஒன்று வந்து அவன் கேற்றடியில் நின்றது. கூடவே போடியாரும் இன்னும் சிலரும் வந்து கொண்டிருந்தனர். அம்மா ஏன் முகத்தை மூடிக்கொண்டு அழுகிறார் என்பதை அறியாதவனாய் பின்பக்கமாக ஓடிப்போனவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

உடலெல்லாம் இரத்தம் தோய்ந்து, முகம்சிதைந்து நீட்டி நிமிர்ந்து பெட்டிக்குள் படுத்துக்கிடப்பது அவன் அப்பாவா? அப்பாவேதானா?

திடீரென்று பேரொலியுடன் இடியொன்று இடித்து அவன் தலையில் விழுந்து, பூமி பிளந்து அவன் அழ அழ அந்த வெடிப்பில் இறங்கி இருளில், காரிருளில் வெளிச்சமே காணமுடியாத அதல பாதாளத்தில் இறங்கிக் கொண்டிருந்தான்.

"அ..... அ..... அப்...பா......ஆ...ஆ...ஆ" அவன் போட்ட கூச்சலில் உலகமே அதிர்ந்ததா?

**இணைகரம்**

**2001**

# கூடு கலைந்த குருவிகள்

மாமரக் கொப்பில் தொங்கவிட்டிருந்த தன்னுடைய வலையைப் பிரித்து அதன் பொத்தல்களைப் பின்னும் வேலையைத் தொடர்வதற்காக நூற்பந்தைக் தேடி எடுத்தார் சூசைக் கிழவர்.

புதிதாக ஒருவலை வாங்கித் தொழில் செய்வதற்கு இயலாமல் இருக்கும் தனது வறுமை நிலையை எண்ணியபோது அவருடைய அடிவயிறு பற்றி எரிந்தது.

'இந்தப் பொத்தல் வலைய வெச்சிற்று எத்தின நாளைக்குத் தொழில் செய்யிற? ராவிலையும் ஆத்தில தொழில் செய்யப் போடாதாம்...... பகல்ல போய் ஆத்தில வீசினாக் கறிப்பாட்டத்தான் ஒப்பேத்தலாம்... இந்தச் சீத்துவத்தில எங்க மனுசன் வாழுற?'

கிழவர் தனக்குள்ளேயே புறுபுறுத்துக் கொண்டார். சூரியன் அடிவானில் இறங்கத் தொடங்கியிருந்ததால் கடற்காற்று குளிரோடு சேர்ந்து வந்து முகத்தில் மோதியது.

ஒருவாய்த் தேநீர் குடித்தால் சுறுசுறுப்பாய் இருக்கும் போலிருந்தது. குசினிப்பக்கம் திரும்பினார். அவருடைய பேத்தி பிலோமினா அடுப்பூதிக் கொண்டிருந்தாள்.

"பாவம், அவள்ற வயதொத்ததுகள் பள்ளியும் படிப்புமாத் திரியுதுகள். இவள் அடுப்போடையும் புகையோடையும் மல்லுக்கட்டுறாள்......." அவர் தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டார்.

"கொஞ்சம் பொறுங்க தாத்தா, தண்ணி கொதிக்கட்டும், தேத்தண்ணி போட்டுத் தாறன்......"

கிழவரின் குறிப்பை அவள் நன்றாகவே அறிவாள். பிறந்ததிலிருந்து இந்தப் பதினெட்டு வயது வரையும் அவர்

தோளில் தூங்கி, மார்பில் புரண்டு, மடியில் தவழ்ந்து அவருடைய கவனிப்பில் வளர்ந்தவள் அவள்.

"என்னம்மா, அடுப்புக்குள்ள கொள்ளியில்லப் போல? இவன் மரியா எங்க? பின்வளவுக்க மட்டையள் புளந்து காயப் போட்டன். அதையாவது அள்ளி வந்து போடச் சொல்லியிருக்கலாமே?"

"வெறும் மட்டையள் மட்டும் எரியுதில்ல தாத்தா, ரெண்டொரு சுள்ளியள் வெச்சாலும் நல்லா எரியும். பழைய கடன் குடுக்கல்ல எண்டு விறகுக்காரனும் இந்தப் பக்கம் வாறானில்ல......"

கிழவரின் மனதில் சுருக்கென்றது. இரவுத் தொழில் இல்லாமற் போனபின் கையில் காசுப் புழக்கமே இல்லாமற் போய்விட்டது. அக்கம் பக்கத்தில் தெரிந்தவர்களிடம் என்று கடன்பட்டுத்தான் காலம் ஓடிக் கொண்டிருந்தது. கடலிலும் ஆற்றிலும் மட்டுமே தொழில் செய்து பழக்கப்பட்ட அவரால் வேறு தொழில்கள் செய்யமுடியவில்லை. வயது போய்விட்டதால் உடலிலும் தெம்பில்லாமற் போய்விட்டது. 'நான் எப்பிடிக் காலம் தள்ளப் போறன்?'

பனை மட்டைப் படலையைத்திறந்து கொண்டு கையில் ஒரு சுருளோடு வந்து கொண்டிருந்தான் அவர் பேரன் மரியசீலன்.

"என்னடா மரியா, கடைக்குப் போய் வாறயா? தெரிஞ்சிருந்தா ரெண்டு சுருட்டுக்கும் சொல்லியிரிப்பன்...... மத்தியானம் சாப்பிட்ட புறகு சுருட்டில்லாம வாய் புளிச்சுப் போய்கிடக்கு........"

"சீனி வாங்கப் போய்வாறன் தாத்தா, இனி எனக்குப் போக ஏலாது, நான் விளையாடப் போகப் போறன். அங்க கடைக்காரச் சோமண்ணன் இனிக் கடன்தர ஏலாதாமெண்டு கத்திறார்............ காசிருந்தா எடுத்து வையுங்க விளையாடிப் போட்டு வந்து வேணுமெண்டா வாங்கித் தாறன்........."

அவன் சீனிச் சுருளை அக்காவிடம் கொடுத்து விட்டு குசினிச் சுவரில் சாய்த்து வைத்திருந்த கிறிக்கற் மட்டையை

(வெறும் தென்னம் மட்டையிற் செதுக்கி எடுத்தது) தூக்கிக் கொண்டான்.

"மரியா, தாத்தாவுக்கு சுருட்டு வாங்கிவந்து குடுத்துப் போட்டு தேத்தண்ணியையும் குடிச்சிற்றுப் போ....... நீ விளையாடப் போனா விளக்கு வெய்க்கிற நேரத்துக்குத்தான் திரும்பி வருவாய்......."

பிலோமினா குசினிக்குள்ளிருந்து தம்பிக்குக் கட்டளையிட்டாள்.

"பாவம் அவன், விளையாடப் போகட்டும். நான் அந்தோனியிற்ற ரெண்டு சுருட்டு வாங்கி எடுக்கிறன். அவனுக்குத் தேத்தண்ணியக் குடுத்து அனுப்பு. சின்னப்புள்ள, விளையாடுற நேரத்திலதான் விளையாடோணும்........"

கிழவர் பேரனுக்குப் பரிந்து வந்தார். அவன் ஓடிவந்து கிழவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். "என்ர செல்லத்தாத்தா...... நான் விளையாடிப் போட்டு வந்து கட்டாயம் வாங்கித் தருவன் தாத்தா. இப்ப வேணுமெண்டா அந்தோனி மாமாட்டப் போய் ஒரு சுருட்டு வாங்கித் தந்திற்றுப் போகட்டா?"

"இல்லப்பு நீ போ. நான் அந்தோனியிற்ற ஒருக்காப் போகோணும். அப்ப வாங்கிக்கிறன்" என்று சொன்னவர் குசினிப் பக்கமாய்க் குரல் கொடுத்தார்.

"அம்மா பிலோமினா, தம்பிக்குத் தேத்தண்ணியக்குடு புள்ள."

"ஓ, அவர் இப்ப தொழிலுக்குப் போகப் போறார். தேத்தண்ணி குடிச்சாத்தான் சுறுசுறுப்பா வேலை செய்ய ஏலும். தாத்தா, நீங்க இவனுக்குக் கூடத்தான் செல்லம் குடுக்கிறயள்..... படிக்கிற நேரத்திலையும் விளையாடத் தொடங்கிற்றான்."

தாத்தாவைக் கடிந்து கொண்டவள் அவரிடம் தேநீர்க் கோப்பையைக் கொடுத்துவிட்டு அருகில் கிடந்த தென்னங்குற்றியில் அமர்ந்து கொண்டாள்.

"குசினிக்குள்ள போய் எடுத்துக் குடிச்சிற்றுப் போ. ஆறுமணிக்குள்ள திரும்பி வந்திரவேணும்........."

அந்த வார்த்தைக்கே காத்திருந்தவன் போல மரியா ஓடிப் போய்த் தேநீரைக் குடித்துவிட்டுச் சிட்டாய்ப் பறந்தான்.

கிழவர் தேநீரைக் குடித்துக் கொண்டே பேத்தியைப் பார்த்தார். கடைந்தெடுத்த தந்தச் சிலை என்பார்களே, அப்படியொரு அழகு, அப்படியொரு உடல்வாகு அவளுக்கு.

எப்போதும் துருதுருவென்று அலைபாயும் கண்களும் அந்தக் கண்களுக்குக் கீழே அவளுடைய மன உறுதியைப் பறைசாற்றுவது போன்று நீண்டு நிமிர்ந்த மூக்கும் கட்டுக்கடங்காமல் வளர்ந்து கிடக்கும் கூந்தலும் "இவள் என்ர வீட்டுப் பேத்திதானா?" என்று கிழவரையே வியக்கவைக்கும் அந்த அழகு..........

சிலவேளைகளில் அவளுடைய அந்த அழகே அவருக்கு வேதனையைத்தரும்.

'இவள் இந்த மீனவக் குடிசையில இல்லாம ஒரு மாளிகையில பிறந்திருக்க வேண்டியவள். இந்தக் கிழவன்ர பராமரிப்பில வளர்ந்து என்ன சுகத்தைக் காணப் போறாள்? தாயைப் போல இவளும் வலை தூக்கிற ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வறுமையோட காலந்தள்ள வேண்டியதுதானா?" என்று ஏக்கப் பெருமூச்சு விடுவார்.

"என்ன தாத்தா யோசிக்கிறயள்? தொழிலுக்குப் போக ஏலாமப் போச்சே, கையில காசில்லையே எண்ட கவலையா?"

பிலோமினாவின் கேள்வியால் அவர் திணறிப் போனார்.

"எல்லாம் தானம்மா, காலம் முழுக்க கடல்லையும் ஆத்திலையும் காலந்தள்ளின நம்மட கையக் கட்டிப் போட்டானுகள். வலதூக்கிப் புழைச்சவனெல்லாம் வறுமையோடதான் வாழோணுமா எண்டு நினைச்சன்........"

"என்ன செய்யலாம் தாத்தா, காலம் அப்பிடி மாறிப் போயிற்று. அந்த நாளையில நீங்களும் அப்பாவும் இரவில தோணியத் தள்ளிற்றுக் கடலுக்குப் போனா விடியமுதல்

அம்மாவும் நானும் கடக்கரைக்கு ஓடிவருவம். தோணி நிறையக் கிடக்கிற மீன் குவியலப் பார்த்தா அம்மா சந்தோசத்தில என்னக்கட்டிப் புடிச்சித் தூக்கிக் காட்டுவா.... எல்லாம் கன்வாப் போயிற்று."

அவள் கண்களில் கரைகடந்த சோகச் சுவடுகள் அப்பிக் கொண்டன. எத்தனை பெரிய சுமையைத் தாங்கிக் கொண்டு அதனை வெளியே காட்டாமல் தன்னையும் தம்பியையும், அரவணைத்து வாழ்கிறாள் இவள் என்று எண்ணுகையில் கிழவரின் கண்களும் பனிக்கும்.

தொண்ணூறாம் ஆண்டு கிழக்குப் பகுதியில் நடைபெற்ற அல்லோல கல்லோலமும் யார், எவர் என்றில்லாமல் மக்கள் துரத்தித் துரத்திக் கொல்லப்பட்ட அந்தக் கொடூரமும் உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு மக்கள் எங்கு போவது என்ன செய்வது என்று தெரியாமல் சிதறி ஓடிய பரிதாபகரமான அந்தக் காட்சிகளும் அவர் கண் முன்னால் விரியும்.

ஆறுவயதும் ஒருவயதுமான பிலோமினாவையும் மரியசீலனையும் தூக்கிக் கொண்டு கால்போன போக்கில் சனங்களோடு சேர்ந்து ஓடி இறுதியாக ஒரு முஸ்லிம் நண்பரின் வீட்டில் அடைக்கலம் புகுந்ததும்.... என்ன நடக்குமோ, எப்போ தங்களை நோக்கி மரணத்தின் கரம் நீளுமோ என்ற பீதியில் தூக்கமின்றிக் கழித்த இரவுகளும்...........

அந்த நினைவு ஏற்பட்டால் சூசைக் கிழவர் நடுங்கிப் போவார். உயிரோடேயே மகளையும் மருமகனையும் பறிகொடுத்த அந்தச் சோகம் அவரைப் பிழிந்தெடுக்கும். எங்காவது தனியாகப் போயிருந்து பேரக் குழந்தைகள் அறியாமல் குலுங்கிக் குலுங்கி அழுவார்.

வீட்டையும் உடமைகளையும் உதறிவிட்டு உயிர்தப்பினாற் போதும் என்று ஓடிவந்து இரண்டு வாரங்கள் நண்பரின் வீட்டிற் கழித்ததே பெரும் பாடாய் இருந்தது.

அங்கும் இங்குமாய் அடைக்கலம் புகுந்திருந்தவர்கள் மெல்ல மெல்லத் தங்கள் வீடுகளைப் பார்த்து வரப் புறப்பட்ட வேளை......

"போறவங்களோட போய் நானும் நம்மட வீட்டப் பார்த்திற்றுச் சாப்பாட்டுச் சாமான்களையும் எடுத்து வாறன்" என்று அவர் மருமகன் பிலிப்பும் ஆயத்தமான போது அவரது மகள் ஜெயசீலி அவனைத் தடுத்தாள்.

"வீடு எப்பிடிப் போனாலும் போகட்டும். இஞ்ச ஆரிட்டயும் கடன் வாங்கி கஞ்சியெண்டாலும் காய்ச்சிக் குடிச்சிற்றுக் கிடப்பம். நீங்க போகவேணாம்" என்று கெஞ்சினாள். அவன் கேட்கவில்லை.

"எத்தின நாளைக்கெண்டு ஆரிட்டையும் கடன் வாங்கலாம்? நான் என்ன தனியப் போறனா? எத்தின பேர் போய் வந்திற்றாங்க....... போற ஆக்களோட போய் என்னவும் எடுக்கக் கூடியத எடுத்திற்று வாறனே". என்று அவன் பிடிவாதமாய் நின்ற போது ஜெயசீலியால் மறுக்க முடியவில்லை.

"அப்பிடியெண்டா நானும் உங்களோட வாறன்." என்று புறப்பட்டாள்.

"கேம்புக்குக் கிட்டவீடு. உங்களுக்கென்ன பைத்தியமா? இப்ப என்ன அவசரத்துக்கு அங்க போகோணும்?" என்று சூசைக் கிழவர் தடுத்தார். அவர்கள் கேட்கவில்லை.

"புள்ளையளக் கவனமாப் பாத்துக்கங்க அப்பா" என்று சொல்லித் தன்னுடைய கழுத்துச் சங்கிலியைக் கழற்றி அவரிடம் கொடுத்து விட்டுப் போனவள் தான். அவளும் இல்லை. அவள் கணவன் பிலிப்பும் இல்லை.

எங்கே போனார்கள் என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியவில்லை. அன்று அவர்களுக்குப் பின் புறப்பட்டுச் சென்றவர்கள் கிழவரின் வீட்டுப் பக்கம் ஒரு பெண்ணின் கதறலும் இரண்டு வெடிச்சத்தங்களும் கேட்டதாகச் சொன்னதை வைத்துத் தன்மகளுக்கும் மருமகனுக்கும் என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு தலையில் அடித்து அழுதார்.

குழந்தையான பிலோமினா ஏதும் புரியாமல் நின்றாள்.

ஆனால் போகப் போகப் பெற்றோரின் இழப்பு அவளை வெகுவாகப் பாதித்த போதும் தன் மனக் குமுறலை வெளியே காட்டி தாத்தாவையும் தம்பியையும் கலங்கச் செய்யாத புத்திசாலித்தனம் அவளிடம் எப்படித் தான் வந்தது என்று கிழவர் யோசிப்பார்.

இரண்டு மூன்று மாதங்களின் பின் மெல்ல மெல்ல எல்லோரும் தங்கள் இருப்பிடம் திரும்பிய போது சூசையும் பேரக் குழந்தைகளோடு திரும்பி வந்தார்.

எரிந்து கிடந்த வீட்டைப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதார். அதற்குள் சமாதியாகிப் போன தன் மகள் மருமகனின் எலும்புத் துண்டங்களாவது கிடைக்குமா என்று தேடினார்.

பனை மட்டைகளையும் தென்னோலைகளையும் வெட்டி எடுத்துக் குடிசை போட்டார். மடியில் முடிந்துவைத்திருந்த மகளின் சங்கிலியை அடவு வைத்து அயலவர்களான அந்தோனி, ஞானம் ஆகியோருடன் திரும்பவும் தொழிலுக்குச் சென்று மெல்ல மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போதும் மனதின் அடிஆழத்தில் புதைந்து கிடந்த துயர நினைவுகள் மட்டும் அகலாமலே கிடந்தன.

அதற்கும் மேலாய் தளதளவென்று வளர்ந்துவரும் பேத்தி பிலோமினாவைப் பற்றிய கவலையும் இரவில் ஆற்றுத் தொழிலுக்குப் போகமுடியாமல் தடை செய்து விட்டதால் இழந்து போன வருவாயும் குடும்பத்தின் வறுமையும்........ எல்லாமாய்ச் சேர்ந்து கிழவரை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன.

பக்கத்து வீட்டு அந்தோனி அவருடைய பரிதாப நிலையைப் பார்த்துவிட்டு "சூசையண்ணே, சும்மா சும்மா யோசிச்சிற்று இருந்தா நம்மட வயித்துப் பாட்டக்கூடக் கவனிக்க ஏலாமப் போகும். உங்கள் நம்பி ரெண்டு குஞ்சுகள் கிடக்குதுகள்........ பேசாம என்னோட வாங்க, என்ர தோணியில கடலுக்குப் போவம்....... ஞானமும் வாறான்..." என்று அழைத்திருந்தான்.

கிழவருக்குப் பேத்தியைத் தனியாக விட்டுவிட்டு, இரவில் கடற்தொழிலுக்குப் போகப் பயமாக இருந்தது. இரண்டொரு மாதங்களுக்கு முன் புலிவேட்டையாட என்று வந்தவர்கள் தன்னுடைய குடிசையில் வாழும் செல்லப் பூனையைப் பார்த்த பார்வை சரியாகப்படவில்லை அவருக்கு. அதன்பின்னும் தேவையில்லாமல் அந்தப் பக்கமாகப் பவனிவரும் அந்த வேட்டைக்காரர்கள் வேலிக்கு மேலால் எட்டிப் பார்ப்பதும் தண்ணீர் கேட்பதும் அவருடைய நிம்மதியைக் குலைத்து விட்டன. பொழுது நன்றாகச் சாயத் தொடங்கியது. மரக்கிளையில் தொங்கவிட்டிருந்த வலையை அவிழ்த்தெடுத்துப் பக்குவமாகச் சுருட்டி வைத்துவிட்டு "நான் ஒருக்கா அந்தோனியிற்றப் போயிற்று வாறன்" என்று சொல்லிக் கொண்டு எழுந்த போது அந்தோனியே அவரைத் தேடி வந்து கொண்டிருந்தான்.

"வாடாப்பா அந்தோனி, உன்னிட்டத்தான் வர எழும்புறன். சுருட்டு முடிஞ்சு போச்சுடா. வாயெல்லாம் புளிக்குது....... வாங்கின சுருட்டிருந்தா ரெண்டு வாங்கிற்றுக் கடலுக்குப் போறதப் பத்தியும் கதைச்சிற்று வருவமெண்டு நினைச்சன்...."

"நீங்க வராம நிண்டிருவீங்களோ எண்ட பயத்தில தான் வெளிக்கிட்டு வந்தனான்........ அண்ண......... நீங்கெல்லாம் எங்கள விடவும் அனுபவசாலியள். உங்களப் போல ஆக்களோட போனாத்தான் நம்மட தொழிலுக்குச் சரிப்படும். சுருட்டு வேணுமெண்டா நான் தாறன். கெதியா வெளிக்கிடுங்க........"

அவர் மறு பேச்சில்லாமல் பரபரப்பாகத் தன்னுடைய துவாயை எடுத்துத் தலையில் சுற்றிக்கொண்டார். பிலோமினா கட்டிக் கொடுத்த சோற்று முடிச்சையும் தீப்பெட்டியையும் பையில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

"பிலோமினா, கவனம்மனே. தம்பிக்கு ஏசிப் போடாத. பாவம்.... அம்மா அப்பாட அன்பு தெரியாதவன். ராப்பொழுதுக்குத் தனியப் படுக்காதங்க....... செல்லம் மாமியோட போய்ப்படுங்க......." என்று சொல்லிக் கொண்டே அந்தோனியைப் பின்தொடர்ந்தார்.

பனைமட்டைப் படலையடிக்குப் போனவர் திரும்பவும் பேத்தியைப் பார்த்து "ராவில றவுண்டப் அது இதெண்டு திரிவானுகள்...... கடப்பச் சாத்திப் போட்டு பொழுதோடையே அந்தோனி வீட்டுக்குப் போயிருங்க.." என்று சொல்லிக் கொண்டே போனார். பிலோமினாவின் விழிகள் கண்ணீரில் மிதந்தன. "பாவம் தாத்தா, எங்களுக்காகத்தானே இந்த வயதிலையும் இப்பிடிக் கடலுக்குப் போய் உழைக்க வேண்டிக் கிடக்கு..." என்று பெருமூச்சு விட்டாள்.

நீண்ட நாட்களின்பின் கடற்காற்று கிழவருக்கு நடுக்கத்தைக் கொடுத்தது. குளிரைத் தாங்கும் தெம்பும் உடலை விட்டுப் பிரியாவிடை பெற்றிருந்தது. கடற்கரையில் புறப்படுவதற்கு ஆயத்தமாகப் பல தோணிகள் காத்துக் கிடந்தன.

கூட்டத்தோடு சேர்ந்து சோற்று முடிச்சுக்களை அவிழ்த்தெடுத்து உண்ணத் தொடங்கினர். கிழவருக்குப் பேத்தி பிலோமினாவைப் பற்றிய பயமே நெஞ்சு நிறைய இருந்தது. 'நான் உயிரோட இருக்கிறதெல்லாம் அந்த ரெண்டு குஞ்சுகளுக்காகத்தானே........' என்று எண்ணிக் கொண்டார்.

தூக்கித் தூக்கிப் போடும் அலைகளைத் தாண்டி அந்தோனி லாவகமாகத் தோணியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

வெகுதூரத்துக்கப்பால் போய் தோணியை நிறுத்தி பாடுபார்த்து வலையை வீசிக்கட்டிய அந்தோனி சூசைக் கிழவரைப் பார்த்துக் கேட்டான். "என்ன சூசை அண்ணே உற்சாகத்தைக் காணல்ல, ஒரே யோசினையாக்கிடக்குது?"

"இல்லடாமனே, இவள் பிலோமினாவப் பத்தித்தான். என்னெண்டாலும் குமர்ப்புள்ள, ராவிருட்டில தனிய விட்டுப்போட்டு வாறதும் பயம்தானே, அவள ஒருவன்ர கையில புடிச்சிக் குடுத்திற்றனென்டா எனக்கு நிம்மதி........"

"சும்மா கிடுங்கண்ண, எல்லாத்தையும் அந்த ஆண்டவரிட்டப் பாரம் குடுங்க, அவர் பார்த்துக் கொள்வார்..... நம்மட கையில என்ன இருக்குது?" என்றான் ஞானம்.

"அடிக்கடி நம்மட பக்கம் பொடியனுகளத் தேடி வாறவனுகள் குமர்ப் புள்ளையளப் பார்க்கிற பார்வை சரியில்லடா மனே... அதுதான் மடியில நெருப்பக் கட்டின மாதிரித் தவிச்சுப் போறன்......"

"நீங்க சொல்லுறதும் சரிதான் அண்ண, நம்மட துன்பங்கள ஆரிட்டப் போய்ச் சொல்ல ஏலும்? கர்த்தர் ஒருவரிட்டத்தான் சொல்லி அழலாம்.. அவர்தான் எங்கட சனங்கள் படுற துன்பங்களுக்கு முடிவு சொல்லோணும்........."

அந்தோனியின் வார்த்தைகள் சூசைக் கிழவரை ஆசுவாசப் படுத்தின.

கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது. தோணியில் பாரை மீன்கள் குவிக்கப்பட்டிருந்தன. தூக்கமிகுதியால் சற்றுக் கண்ணயர்ந்த சூசைக் கிழவர் பறவைகள் தலைக்கு மேலால் கீச்சிடும் ஒலிகேட்டுத் திடுக்குற்றுத் கண்விழித்த போது அதிர்ந்து போனார்.

அந்த அதிகாலைப் பொழுதில், இருள் முற்றாக விலகாத வேளையில் அவருடைய கிராமத்துப் பக்கமிருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் துல்லியமாகக் கேட்கத் தொடங்கின. கிழவரின் நெஞ்சு பிளந்து விடும் போலிருந்தது.

"நான் நினைச்சது சரியாப் போச்சுடா, அந்தோனி...... நம்மட ஊர்ப்பக்கம் தான் வெடிகேக்குது........"

அந்தோனியால் பதில் சொல்லமுடியவில்லை. அவனும் பீதியில் அரண்டு போயிருந்தான். தோணி கரையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

"கர்த்தரே, என்ர குஞ்சுகள் ரெண்டும் தவிச்சுப் போகுங்களே, நான் என்ன செய்வன்?" அவர் தவித்துக் கொண்டிருந்தார்.

ஞானம் எதுவும் பேசாமல் சிலுவைக்குறியிட்டுக் கொண்டான். அவனுடைய வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

கரையை நெருங்க நெருங்க துப்பாக்கி வேட்டுக்களின்

ஓசை கனத்துவந்து காதைப் பிளந்தது. இரண்டொரு இடங்களிலிருந்து எழுந்த கரும்புகை மேகங்களோடு சங்கமித்துக் கொண்டிருந்தது. ஷெல்கள் சீறிவந்து கிராமத்துக்குள் விழுந்து வெடிப்பதைக் கடலிலிருந்து தெளிவாகப் பார்க்க முடிந்தது.

"அண்ண, சங்கதி பிழைச்சுப் போச்சு போலத்தான் கிடக்கு, நாம கரைக்குப் போக ஏலுமோ தெரியாது, ஊருக்குள்ள என்ன நடக்குதோ...... கர்த்தரே........."

எதற்கும் சோர்ந்து போகாத அந்தோனி கூடச் சோர்ந்து போனான்.

தோணி ஒருவாறு கரையைத் தொட்டது. அவர்களைப் போல கரை தட்டிய இரண்டொரு மீன் தோணிக்காரர்களைத் தவிர மனித நடமாட்டமற்று வெறிச்சோடிப் போயிருந்தது அந்தக் கடற்கரை.

பொழுது விடியுமுன்பாகவே மீன் தோணிகளை எதிர்பார்த்து நிற்கும் வியாபாரிகள் கூட அங்கு இல்லை. கரைதட்டிய தோணியிலிருந்து பாய்ந்து இறங்கினார் சூசைக் கிழவர்.

"அண்ணே, இப்ப ஊருக்குள்ள போகாதீங்க, கொஞ்ச நேரம் பார்த்துப் போவம்........" என்று அந்தோனி அவரைத் தடுத்தான்.

"நான் என்ர புள்ளையளப் பார்க்கோணும்..... " என்று சொல்லிக் கொண்டே யாரும் எதிர்பாராவகையில் ஊருக்குள் ஓடத் தொடங்கினார் அவர்.

அந்தோனியும் ஞானமும் எதுவும் செய்யத் தோன்றாதவர்களாய் விக்கித்து நின்றார்கள்.

அவருக்கு எங்கிருந்து அந்தத் தைரியம் வந்ததென்று தெரியவில்லை. கால்கள் புதையும் அந்தக் கடற்கரை மணலில் அவர் தலைதெறிக்க ஓடுவது தெரிந்தது. அவரைத் தடுக்கவும் முடியாமல் அவர்பின்னே ஓடவும் முடியாமல் நின்றிருந்த அவர்கள் கண்களிலிருந்து அவரது உருவம் மறைவதற்கிடையில் அந்த விபரீதம் நடந்து முடிந்தது.

ஊர்ப்பக்கம் இருந்து சீறிவந்த துப்பாக்கி வேட்டுக்கள் அந்த அப்பாவிக் கிழவரின் உடலைத் துளைத்து அந்தப்பாசம் மிக்க இருதயத்தின் துடிப்பை நிறுத்தி அவரை அந்தக் கடற்கரை மணலில் வீழ்த்தின.

- 2002

சமகாலச் சமுதாயத்தின் மாறுபட்ட பிரச்சினைகளைக் கதைகளின் கருவாக்கி வெறும் உணர்ச்சி முனைப்புகளுடனோ அன்றிப் பிரசாரவாடையுடனோ படைப்புகளை ஆழமாக அணுகி, அலசி ஆராய்ந்து எழுத முனைந்து எழுத்துலகில் தன் பெயரினைப் பதித்துக் கொண்டவர் மண்டூர் அசோகா.

தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'கொன்றைப் பூக்களிற்கு' 1976இல் சாகித்ய மண்டலப் பரிசைத் தட்டிக்கொண்டதன் மூலம் பெண்பிரமாக்களுள் முதன் முதலில் சாகித்ய விருதினைப் பெற்றவர் என்ற பெருமைக்காளான துடன், 1992இல் 'பாதை மாறிய பயணங்கள்' என்ற நாவலிற்கு வட கிழக்கு மாகாண சாகித்ய விருதினையும் தனதாக்கிக் கொண்டவர்.

இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான 'சிறகொடிந்த பறவைகளில்' சக்தியற்ற பெண்களின் மௌன உணர்வுகளுக்கு வடிவங் கொடுத்ததன் வாயிலாக தனது இலக்கிய ஆளுமையின் வீச்சினை மேலும் அகலப்படுத்திக் கொண்ட அசோகா, போரின் கொடூரங்களையும், அதன் வடுக்களையும், இனமோதல்களையும் அதனாலான அழிவுகளையும் மிகவும் இயல்பாக இத்தொகுதிக் கதைகள் மூலம் வெளிப் படுத்துவதன் மூலம் தனது உணர் திறனை இன்னோர் தளத்திற்குப் பாய்ச்ச முற்பட்டுள்ளார்.

'உறவைத் தேடி' வரும் இந்நூலினை 33ஆவது பிரசுரமாக வெளிக்கொணர்வதில் 'மீரா பதிப்பகம்' பெருமை கொள்கிறது!

– புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

